# சம்பகாரண்ய மாஹாத்மியம்

## மன்னார்குடி ராஜகோபாலன் வரலாறு

(3839)



ஆண்டாள் திருக்கோலத்தில் ராஜகோபாலன்

ஸ்தான வெளியீடு.

(1959)

விலை ரூ. 1/-

ஸ்ரீ:

# சம்பகாரண்ய மாஹாத்மியம்

## மன்னார்குடி ராஜகோபால ஸ்வாமி வைபவம்


மன்னார்குடி தமிழ் ஆசிரியர்

திரு. இராமநாத பிள்ளை அவர்கள்


தொகுத்ததை அனுசரித்த 6-ம் பதிப்பு


தேவஸ்தானம் வெளியீடு

1959 ] விளம்பி [ 1 ரூபாய்

# தர்ம கர்த்தாக்கள்

1. **ஸ்ரீ டி. எஸ். ஸ்வாமி நாத உடையார்** எம். எல். ஏ.
(முனிசிபல் சேர்மன்) நிர்வாஹ தர்மகர்த்தா.

[இவர் தண்ணீர்க் குன்னம் பெரிய மிராசுதார் ஸ்ரீ டி. எஸ். சிங்காரவேலு உடையாரின் ஸ்வீகார குமாரர்; மன்னார்குடியில் பிரஸித்தமான மிராசுதார்களில் ஒருவர்.]

2. ,, எஸ். ராமாநுஜ அய்யங்கார், பி. ஏ., பி. எல்.,
அட்வகேட், சேரன்குளம்.

3. ,, எம். ஏ. ராஜகோபால அய்யர், பி. ஏ.,
அக்ரஹாரம், மன்னார்குடி.

4. ,, எஸ். கலிய பெருமாள் நாயக்கர், பென் அண்டு
கம்பெனி, (முனிசிபல் கௌன்ஸிலர்) மன்னார்குடி.

5. ,, எம். மாகாளி வாய்க்கார், தென் பாதி, மன்னார்குடி.

**ஸ்ரீ டி. பி. வெங்கடாசலம் பி. ஏ,**

*நிர்வாஹ அதிகாரி.*

# அட்டவணை


**முதல் அத்யாயம்** 1— 4

*கோப்ரளய கோபில மஹர்ஷிகளுக்கு எம்பெருமான் ப்ரத்யக்ஷமாகிறான்.*

**இரண்டாம் அத்யாயம்** 5—16

*ரிஷிகளுக்கு பகவாந் கிருஷ்ணாவதார லீலைகளைக் காட்டியருளியது. சம்பகாரண்யத்தில் பிரம்மா பிருகு முதலானோர் தபஸ் செய்தது.*

*32 தரிசனங்கள்* 7—14

*பிரம்மாவும் லக்ஷ்மியும் பூஜித்த வரலாறு* 15

*லக்ஷ்மியின் தபஸ்* 15—16

**மூன்றாம் அத்யாயம்** 17—21

*அக்நியின் தபஸ்* 19—21

**நாலாம் அத்யாயம்** 21—25

*ஜல க்ரீடை வைபவம்*

**ஐந்தாம் அத்யாயம்**

*ஸௌராஷ்ட்ர ராஜாவின் கதை*

**ஆறும் அத்யாயம்** 32—36

*ஸௌராஷ்ட்ர ராஜாவின் கைங்கர்யங்கள்*

**ஏழாம் அத்யாயம்** 37—39

*துவாத சாக்ஷர மந்த்ரத்தின் வைபவம்*

*நூற்றெட்டு க்ஷேத்ரங்கள்* 40—42

**எட்டாம் அத்யாயம்** 43—50,

*நவ தீர்த்த மாஹாத்மியம்*

1. *ஹரித்ரா நதி*
2. *துர்வாஸ தீர்த்தம்*
3. *க்ஷீராப்தி*
4. *கோபிகா தீர்த்தம்*

5. ருக்மிணி தீர்த்தம்
6. அக்நிகுண்ட தீர்த்தம்
7. க்ருஷ்ண தீர்த்தம்
8. சங்க தீர்த்தம்
9. சக்ர தீர்த்தம்
தீர்த்தங்களின் ரிஷிகள் 47
தீர்த்தங்களிலுள்ள ஆயுதங்கள் 48
சதுர்யுகங்களிலும் நடந்த உத்ஸவங்கள் 49
தியான சுலோகம் 50
ராஜகோபாலன் வடிவழகு 51
ராஜகோபாலன் நாமாவளி 52—53
செங்கமலத் தாயார் நாமாவளி 54—55
ஸ்ரீ வித்யா ராஜகோபாலன், அஹோபிலம் 56
உத்ஸவங்கள் 57—59
உபயக்காரர்கள் 60—64
நித்ய பூஜை நைவேத்தியங்கள் 65
விசேஷ வாஹநங்கள் ...
நித்தியப்படி தேசாந்தரிக் கட்டளைகள் 66
பெருமாளுடைய திருநாமங்கள் 67
க்ஷேத்ரத்தின் பெயர்கள் ...
காலக் கணக்கு 68
ஊரின் அமைப்பு 69
மன்னார்குடி பற்றி சர்க்கார் புஸ்தகம் 70—72
பழைய பதிப்புகள் 73—75
திருவாபரணங்கள் 76
பிராகாரங்கள் 77
கோயில் அமைப்பு 78—79
மண்டபங்கள், சுற்றுக் கோயில்கள் 80
மற்றைய கோயில்கள் 81
கோயில் நிலங்கள் 82
பாடல் சிறப்பு 83
கல்வெட்டு எழுத்துக்கள் 84

ஸ்ரீ:

# படங்களின் விவரம்


1. அட்டைப் படம்: ஆண்டாள் திருக்கோலம்.
2. தீபஸ்தம்பம். முதலில்
3. திருத்தேர். ,,
4. தெப்பம். பக். 24
5. புறப்பாட்டு திருக்கோலம். 25
6. செங்கமல நாச்சியார். 56
7. உத்ஸவர் (கர்ப்ப கிருஹத்தில்). 57
8. வெண்ணெய்த் தாழி ஸேவை. 58
9. பஞ்ச முக ஹநுமாந் வாஹநம். 59
10. தெப்பத்தில் ஸேவை. 64
11. கண்ட பேருண்ட பக்ஷி வாஹநம். 65
12. கோயில் அமைப்பு: படம். 76
13. ஊர் அமைப்பு: படம். 77


ஸரஸ்வதி பிரஸ், 294, சாத்தார வீதி, ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:

# பதிப்பாசிரியரின் முகவுரை

பல கோயில்களின் மாஹாத்மியங்களை ஆராய்ந்து வரும் கிரமத்தில் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால க்ஷேத்ர வைபவத்தையும் படிக்க நேர்ந்தது. அந்த தேவஸ்தாநத்தார் வெளியிட்ட ஸ்தல புராணத்தைப் பார்த்த போது, அதற்கு மூல புஸ்தகமான சம்பகாரண்ய மாஹாத்மியமும் படித்தேன். மாஹாத்மியத்தி லுள்ள ரஸமான கதைகளும் தத்வங்களும் இல்லாமல், ஏதோ சில மட்டுமே தேவஸ்தாநத் தாருடைய ஐந்து பதிப்பிலும் இருந்தன.

மாஹாத்மியத்தை சுலோகம் சுலோகமாக மொழி பெயர்க்காவிடினும் அதன் ஸாரத்தையாவது தமிழில் சுருக்கமாய் எழுதிச் சேர்க்க வேண்டியது அவசியம் என்று நினைத்தேன்; கோயில் அதிகாரிகளிடத்திலும் ஒரு ஸந்தர்ப்பத்தில் தெரிவித்தேன். மாஹாத்மியத்தில் ஒரு விஷயமும் விடாமல் சுருக்கமாய் எழுதிச் சேர்த்து மறு பதிப்பு தயாரித்துக் கொடுக்கும்படி அடியேனுக்கே அதிகாரிகள் கட்டளை யிட்டார்கள். அதைத் தலையால் தாங்கி இந்தப் பதிப்பு தயாரிக்க லாயிற்று.

முந்தைய பதிப்புகளில் தமிழ் ஆசிரியர் ஸ்ரீ ராமநாத பிள்ளை அவர்கள் சேர்த்த அரும் பொருள்களை இடம் மாற்றி அமைத்து அவசியமான மற்றை விஷயங்களையும் இதில் சேர்த்திருக்கிறேன். மஹா வித்வாந் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியும் தம்முடைய முன்னுரையில் இவ் விஷயத்தை ஆமோதிக்கிறார்.

இது விஷயத்தில் அடியேனுக்கு உத்ஸாஹம் உண்டாக்கின ஆபீஸர் அவர்களுக்கும் தர்ம கர்த்தாக்கள் முதலானவருக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

**பார்த்த ஸாரதி அய்யங்கார்,**
(ஸாஹித்ய சிரோமணி)
**தேவஸ்தாந பத்திரிகை ஆசிரியர்.**

ஸ்ரீ

# காஞ்சீபுரம் ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி ப்ரதிவாதி பயங்கர மஹா வித்வான் ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிய

# முன்னுரை

*பிறவிப் பெருங்கடலுள் நின்று துளங்கும் ஸம்ஸாரிகளான நமக்கு உஜ்ஜீவனோபாயம் தேடுவதே முக்கியமான தொழிலாகும். எந்த வுபாயத்தினால் நாம் உய்வு பெறலாகும்—என்று ஆராயுமளவில், வேத புருஷன் "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி; நாந்ய: பந்தா அயநாய வித்யதே."—என்று எம்பெருமானை உள்ளபடி உணர்வதே உய்வுபாய மென்றும், அதனில் வேறு உபாயம் இல்லை யென்றும் ஓதி யிருப்பதால்,—"தாம் தம் பெருமை யறியார்"—என்றும், "தனக்கும் தன் தன்மை யறி வரியான்"—என்றும், அவனது தன்மை அவன்றனக்கே தெரியா தென்னும் போது அதனை நாம் தெரிந்து கொண்டு உய்வ தென்பது இயலாத தொன்று. "இதுவோ இயலாது, வேறு உபாயந்தானும் இல்லை; எங்ஙனே நாம் உய்வது!'—என்று தளும்பி நிற்கும் நிலையில், ஆழ்வார்கள் திரு வவதரித்து திவ்ய தேசங்களைக் காட்டிக் கொடுத்து அவற்றைத் தொழுகையே நமக்கு உய்வுபாயம் என்று தெரிவித் தருளினார்கள்.*

*ஆழ்வார்களுள் கடைக்குட்டியான திருமங்கை யாழ்வார்—"உலக மேத்துங் கண்டியூர ரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லை யென்று மண்டினா ருய்யலல்லால் மற்றை யார்க் குய்யலாமே"—என்றருளிய பாசுரமே இதற்குச் சான்றாகும். நாம் உய்யுமாறு*

மண்டுதற்குரிய திருப்பதிகள் நூற்றெட் டென்று நம் முன்னோர் களால் மொழியப் பட்டுள்ளது. ஸ்ரீ ராஜ மன்னார் ஸன்னிதியும் இத் திருப்பதிகளுள் ஒன்றே யென்பதை எம் பெருமானாருடைய புநரவதார பூதரான நம் மணவாள மாமுனிகள் மூதலித் தருளினர். திருநாராயண புரம், எம்பெருமானார் தம்மால் ப்ரகாசித மானது போல, ஸ்ரீ ராஜமன்னார் ஸன்னிதி "ஏராரு மெதிராச ரெனவுதித் தான் வாழியே"—என்று வாழ்த்தப் படும் மணவாள மாமுனி களால் ப்ரகாசித மாயிற் றென்பது முன்னோர் மொழிந்த முறை. திருவாய் மொழி நாலாம் பத்தில் ஆறும் பதிகமான—"தீர்ப்பாரை யாமினி"யில், பத்தாம் பாட்டில், உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்—என்று தொடங்கு மதில் "வண் துவராபதி மன்னனே" என்பதனால் தக்ஷிண த்வாரகையாக மங்களா சாஸனம் செய்யப் பெற்ற தலமாகிறது ராஜமன்னார் ஸன்னிதி.

இத் தலத்திற்கு வட மொழியில் ஸ்தல புராண மொன்றுண்டு ப்ரஹ்மாண்ட புராணத்தின் உத்தர கண்டத்தில் விஷ்ணு க்ஷேத்ர விபாகத்தில் **சம்பகாரண்ய மாஹாத்மியம்** என்பது எட்டு அத்யா யங்கள் கொண்டது. அஃது ஐம்பத் தைந்து வருடங்களுக்கு முன் னமே கிரந்த லிபியில் அச்சிடப் பெற்றுள்ளது. அதன் மொழி பெயர்ப்பு, இது காறும் ஐந்து விசையிலும் வெளி வராமல் இப் போது ஆறுவது பதிப்பில் வெளி வருகின்றது. 100 பக்கங்கள் கொண்ட இச் சிறு புஸ்தகத்தில் சம்பகாரண்ய வைபவம் மட்டுமே யல்லாமல், ராஜ கோபாலன் வடிவழகு, ராஜ கோபாலன் நாமா வளி, செங்கமலத் தாயார் நாமாவளி முதலான பல் வேறு விஷயங் களும் அடங்கியுள்ளன. இப் புத்தகம் ஸ்ரீ ராஜ கோபால பக்தர் களுக்கு எப்போதும் ஹஸ்த பூஷணமாக விளங்கத் தக்கது. புராணத்தின் மொழி பெயர்ப்பு நடை மிக லலிதமாக அமைந்துள்ள தென்பது குறிப்பிடத் தக்கது.

**ப்ரதிவாதி பயங்கரம்**

**அண்ணங்கராசாரியர்.**



**ராஜகோபாலன் கோயில்**

(தீப ஸ்தம்பம், மண்டபம், ராஜ கோபுரம்)



ராஜகோபாலன் திருத்தேர்

ஸ்ரீ:

# சம்பகாரண்ய மாஹாத்மியம்

## மன்னார்குடி ராஜ கோபால ஸ்வாமி வைபவம்

[இந்த க்ஷேத்ரத்தின் மாஹாத்மியம் மிக்க ஆச்சர்யமானது. மன்னார்குடியில் ஸப் மாஜிஸ்டிரேட்டா யிருந்த, திருப்பதி சார்ங்கபாணி அவர்களுடைய குமாரர் டி. எஸ். வாமந ராவ் பி. ஏ., அவர்கள் 1903ல் கும்பகோணம் ஸ்ரீ வித்யா பிரஸ்ஸில் கிரந்த எழுத்தில் இந்த மாஹாத்மியத்தை வெளியிட்டார். இந்த புஸ்தகத்திலுள்ளபடி இந்த க்ஷேத்ரம் ஸ்வாமி முதலானோரின் வைபவம் சுருக்கமாய் எழுதப்படுகிறது.

பிரம்மாண்ட புராணம் உத்தர கண்டம் விஷ்ணு க்ஷேத்ர விபாகத்தில் சம்பகாரண்ய மாஹாத்மியம் இருப்பதாய், அதில் எட்டு அத்யாயமா யுள்ள சிறிய கிரந்தம் இது.]

## முதல் அத்யாயம்

### கோப்ரளய கோபில மஹர்ஷிகளுக்கு எம்பெருமான் பிரத்யக்ஷமாகிறான்

நைமிசாரண்யத்தில் புராணக் கதைகளை சொல்லிக் கொண்டிருந்த ஸூதருடைய ஸபையில் சௌனக மஹர்ஷி கேட்டதன் பேரில் ஸூதர் இந்த மாஹாத்மியத்தைச் சொன்னார்.

"விஷ்ணு க்ஷேத்ரங்களின் வைபவத்தைச் சொல்லும் போது நூற்றெட்டு திவ்ய தேசங்களின் மாஹாத்மியத்தைச் சொன்னீர். இப்போது சம்பகாரண்ய மாஹாத்மியத்தை விஸ்தாரமாகச் சொல்லும். முன் காலத்தில் பிரம்மா, லக்ஷ்மீ, அக்நி, பிருகு மஹர்ஷி முதலானவர்களாலும், பிறகு கோபிலர் கோப்ரளயர் என்ற ரிஷிகளாலும் பூஜிக்கப்பட்ட க்ஷேத்ரம் அது என்று கேள்வி. அந்த விவரம் முழுதையும் சொல்லுவீராக"-என்று ஸூதரை சௌனகர் வேண்டிக் கொண்டார். அதன்பேரில் ஸூதர் சொல்லுகிறார் :-

காவேரி நதி அகஸ்திய மஹர்ஷியால் உண்டாயிற்று. அது பிரம்ம பர்வதத்தில் உத்பத்தியாகி ஸமுத்ரம் சேரும் வரையிலுள்ள க்ஷேத்ரம் முழுதும் புண்யமானது. காவேரி ஜலத்தைப் பானம் பண்ணுகிறவர்களுக்கு மறு ஜன்மம் இல்லை.

விஷ்ணுவினுடைய ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரமான ஸ்ரீரங்கம் காவேரிக் கரையில் இருக்கிறது. ஸ்ரீரங்கத்திலிருந்து ஐந்து யோஜனை தூரத்திலுள்ளது கும்பகோண க்ஷேத்ரம். அங்கே காவேரியின் தென்பால் ஹேம புஷ்கரிணி (பொற்றாமரை)க் குளத்தின் கரையில் அபர்யாப்தாம்ருதன் (ஆராவமுதன்) என்ற சார்ங்கபாணிப் பெருமாள் பக்த ரக்ஷணார்த்தம் எழுந்தருளி யிருக்கிறார். அந்த க்ஷேத்ரத்துக்கு ஆக்நேய திக்கில் 2 யோஜனை தூரத்தில் சம்பக வநம் இருக்கிறது. இந்த வநம் முழுதும் அம்ருதத் திலிருந்து உண்டான பீஜங்களால் செழிக்கிறது. அங்குள்ள பிராம்மணர்கள் வேத வித்தமர்களாய் வைதிகாநுஷ்டாநம் தவிராதவர்கள். அங்கே ஆயிரத்தெட்டு மஹர்ஷிகள் தபஸ் செய்து கொண்டு பகவத் தியாநத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். பல விதமான பக்ஷிகளும் மிருகங்களும் நிறைந்து அழகாய் மநோ ரம்யமா யுள்ளது சம்பகாரண்ய க்ஷேத்ரம்.

அந்த ரிஷிகளில் வஹ்நிமுகர் என்னும் ரிஷிக்கு கோப்ரளயர் கோபிலர்-என்று இரண்டு புத்ரர்கள் இருந்தனர். இருவரும் வேதம் வேதாந்தம் முதலிய எல்லா வித்தைகளிலும் வித்தமர்கள். ஜிதேந்திரியர் களாய் பகவத் பக்தர்களுமான கோப்ரளயரும் கோபிலரும் பஞ்சாக்நி மத்தியில் ஒற்றைக் காலால் நின்று அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை தியானித்து தபஸ் செய்தார்கள்.

[ஸஹோதரர் இருவரில் பெரியவரான கோப்ரளயரை பல இடங்களிலும் இளையவரான கோபிலரை இரண்டொரு இடத்தில் மட்டும் சொல்லுகிறது இந்த மாஹாத்மியம். ஆனால், ஸஹோதரர்கள் இருவருமே சேர்ந்து தபஸ் செய்து யாத்திரை போய் உபதேசம் பெற்று, பகவானை ஸாக்ஷாத்காரம் செய்ததாக கதையின் போக்கிலிருந்து தெரிகிறது.]

அப்போது ஆகாயத்தில் அசரீரி வாக்குக் கிளம்பி - " உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் எதற்காக தபஸ் செய்கிறீர்கள்?" என்று கேட்டது. " நாங்கள் மோக்ஷத்துக்காக தபஸ் செய்கிறோம்."-என்று ரிஷிகள் சொன்னதும், - " துவாரகாபுரியிலுள்ள க்ருஷ்ண பகவானை தரிசித்து ப்ரார்த்தியுங்கள்; உங்களுக்கு மோக்ஷம் கிடைக்கும்."-என்று சொல்லிப் போயிற்று அசரீரி வாக்கு.

ரிஷிகள் தபஸ்ஸை நிறுத்தினார்கள்; துவாரகைக்குப் போக வேண்டுமென்று நினைத்துக் கொண்டேயிருந்து சில காலம் கழித்து புறப்பட்டார்கள். வழியில் பல தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்து அங்கிருந்து வாயு மூலையில் புறப்பட்டு, வழியில் பல இடங்களிலும் " துவாரகாபுரி எங்கே?" என்று கேட்டுக் கொண்டே போய் எதிரில் வந்த நாரதரையும் கேட்டார்கள். " துவாரகாபுரி எங்கே? எல்லாருக்கும், போக மோக்ஷங்களைக் கொடுக்கும் கிருஷ்ணன் எங்கே?" என்று அவர்கள் கேட்டதன் மேல்,—" துவாரகையில் என்ன இருக்கிறது? அங்கே எதற்காகப் போக வேண்டும்? பூ பாரத்தைக் குறைப்பதற்காக வந்த கிருஷ்ண பகவாந் பூதனை சகடாஸுரன் கம்ஸன் சிசுபாலன் அகாஸுரன் முதலானவர்களை வதம் செய்து, அக்ரூரர் மாலாகாரர் பீஷ்மர் உத்தவர் முதலானருக்கு மோக்ஷம் கொடுத்து தன்னுடைச் சோதி சேர்ந்து விட்டார். இனி நீங்கள் துவாரகை போய் என்ன பயன்?"-என்றார் நாரதர். அது கேட்டு கோப்ரளய கோபிலர்கள் கிருஷ்ணனை தரிசிக்க முடியாமல் போயிற்றே—என்று துக்கித்துக் கீழே வீழ்ந்து புரண்டு அழுது, கிருஷ்ணனை வர்ணித்துப் புலம்பினார்கள். நாரதர் அவர்களைத் தழுவி எடுத்து ஸமாதாநம் செய்து,—" உங்களுக்கு கிருஷ்ணன் ஸாக்ஷாத்கார மாகும்படி ஒரு மந்த்ரம் உபதேசிக்கிறேன்"—என்று சொன்னார். அவர்களை ஸ்நாநம் செய்வித்து பரிசுத்தராக்கி அவர்களுக்கு வாஸுதேவ துவாதசாக்ஷரமான மந்த்ரத்தை உபதேசித்து,-" துவாரகையில் இப்போது கிருஷ்ணன் இல்லாத போனாலும், அந்த க்ஷேத்ரத்தையும் நந்த கோகுலம் முதலான இடங்களையும் தரிசித்து சோள தேசம் போங்கள். அங்கே காவேரியின் தென்பால் கும்பகோணத்துக்கு மப்பால் சம்பகாரண்யத்தில் ஹரித்ரா நதி இருக்கிறது. காவேரிக்குத் தோழியான ஹரித்ரா நதிக் கருகில், ரிஷிகளே! நீங்கள் தபஸ் செய்யுங்கள்.

மற்றைய தீர்த்தங்களில் தபஸ் செய்தால் பலன் கிடைப்பதற்கு கோடி வருஷம் ஆகும்; சம்பகாரண்யத்தில் தபஸ் செய்தால் ஒரு வருஷத்தில் பலிக்கும். ஆகையால், நீங்கள் அங்கே போய் தபஸ் செய்யுங்கள். சீக்கிரத்தில் கிருஷ்ண ஸாக்ஷாத்காரம் கிடைக்கும்.'' —என்று சொல்லிப் போனார் நாரதர்.

கோப்ரளய கோபிலர்கள் நாரதர் சொன்னபடியே துவாரகா புரி நந்த கோகுலம் முதலான க்ஷேத்ரங்களை தரிசித்து புண்ய தீர்த் தங்களிலும் நீராடி, சம்பகாரண்யத்தில் ஹரித்ரா நதிக்கருகில்ஆசிர மம் அமைத்து, வடக்கு நோக்கித் தபஸ் செய்யலானார்கள்; கைகளை உயரத்தூக்கி கண்களை மூடி கட்டையாய் கல்லாய் நின்று தவம் புரிந்தார்கள். ஆயிரம் வருஷம் ஆயிற்று. அவர்களுடைய தவம் தேவ லோகத்தை எரித்தது. தேவர்கள் திருப்பாற்கடல் போய் ஸர்வேசுவரனிடம் முறையிட்டார்கள். "ரிஷிகளின் விருப்பத்தை நிறை வேற்றுகிறேன்; நீங்கள் போங்கள்''—என்று சொல்லி, பகவான் கருடனை வருவித்து ஏறி,சம்பகாரண்யம் வந்து ரிஷிகளைத் தடவிக்கொடுத்து, "உங்கள் தபஸுக்கு மகிழ்ந்தேன்; நீங்கள் விரும்புவது என்ன? உங்களுக்குத் தேவையான வரம் கேளுங் கள்.''—என்றார். ஸர்வேசுவரன் இப்படி பக்தருக்காக ஓடிவந்த அதிசயத்தைக் காண தேவர்களும் நாரதாதி ரிஷிகளும் வந்து ஆகாசத்தில் சூழ்ந்தனர்.

ரிஷிகள் கண்ணைத் திறந்து பார்த்து, எதிரில் நிற்கும் எம்பெரு மானுடைய திவ்ய தேஜஸ்ஸை தரிசித்து ஆநந்த பரவசராகி,அவன் லோக ரக்ஷணத்துக் காகவும் பக்த ரக்ஷணத்துக் காகவும் பல அவ தாரங்கள் எடுத்துச் செய்த அதிசயங்களை ஒரு தசாவதார ஸ்தோத்ரமாகச் சொல்லி, கடைசியில் ஹயக்ரீவ அவதாரத்தையும் ஸ்தோத்ரம் செய்தார்கள். ஸர்வேசுவரன் அவர்களை மீண்டும் தொட்டுத் தடவித் தழுவி, "நீங்கள் வேண்டும் வரம் என்ன?'' —என்று கேட்டான். "பெருமாளே! தேவரீர் பிருந்தா வநத்தில் இடைப் பிள்ளையாகத் திரிந்த வேஷத்தை தரிசிக்கவே நாங்கள் இப்படி தவம் புரிந்தோம்'' என்று கோப்ரளயரும் கோபிலரும் சொன்னார்கள்.

**முதல் அத்யாயம் முடிந்தது**

# இரண்டாம் அத்யாயம்

## [ரிஷிகளுக்கு பகவாந் கிருஷ்ணவதார லீலைகளைக் காட்டி யருளியது. சம்பகாரண்யத்தில் பிரம்மா பிருகு முதலானோர் தபஸ் செய்த விவரம்]

"ரிஷிகளே! உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள். நீங்கள் எது கேட்டாலும் நான் கொடுக்கிறேன்." — என்று சொன்னார் பகவாந்.

"இந்த சம்பகாரண்யத்திலேயே ஸ்வாயம்புவ விமாநத்தில்! விஷ்வக்ஸேநர் முதலான பரிவாரங்களோடும் பிரளயத்திலும்கூட அழிவில்லாத மார்க்கண்டேயாதி முனிவர்களோடும், பெருமாளே! தேவரீர் இங்கே எல்லாருக்கும் எக்காலத்திலும் ஸதா தரிசனம் கொடுத்துக் கொண்டிருப்பீராக. இது தவிர, கோபாலனென்கிற கிருஷ்ண பகவானுடைய முப்பத்திரண்டு தரிசனங்களையும் எங்களுக்குக் காட்டியருள வேண்டும்" — என்று ரிஷிகள் பிரார்த்தித்தார்கள்.

ஸர்வேசுவரன் அவர்கள் பிரார்த்தித்தபடியே இசைந்து அந்த தரிசனங்களைக் காட்டியருளினான்.

முப்பத்திரண்டு தரிசனங்கள் யாவை யென்னில் :—

1. அவதார வைபவம்.
2. பூதநா வதம்.
3. யசோதை மடியிலிருந்து பால் குடித்தல்.
4. தவழ்ந்து விளையாடல்.
5. கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு ஆடினது.
6. மாடு மேய்க்கை.
7. தூங்கியெழுந்ததும் வெண்ணெய் களவு செய்தல்.
8. கோபிகா வஸ்த்ராபஹரணம்.
9. பசுக்கள் பால் சுரக்கும்படி குழலூதின இனிமை.
10. உரலில் கட்டுண்டிருந்தது.

11. மாடு மேய்க்கையில் கோலைக் கீழே ஊன்றி அதன்மேல் தலை வைத்து நின்ற நிலை.

12. கையில் கயிறும் பாத்திரமும் கொண்டு பால் கறக்கப் போன அழகு.

13. கபித் தாஸுர வத் ஸாஸுரர்களை ஒரே அடியில் வீழ்த்தி வதம் செய்தது.

14. காளிய நர்த்தநம்.

15. பெண்களோடு அவர்களுடைய பற்று மஞ்சள் அடையாளம் தன்னுடலில் காணும்படி விளையாடியது.

16. சங்கு சக்கரம் அம்பு வில் என்ற நாலு ஆயுதங்களை ஏந்தி நின்ற நிலை.

17. ராஸ க்ரீடை.

18. தன்னுடைய அவதாரங்களையெல்லாம் ஒரு இடையனுக்குக் காட்டியருளியது.

19. இடைப் பிள்ளைகளோடு ஆற்றங்கரையில் கட்டுச் சோறுண்டது.

20. கோவர்த்தந மலையைத் தாங்கி நின்றது.

21. பிரம்மாவினால் அபஹரிக்கப்பட்ட நிலை.

22. ஒரு கோபியோடு விளையாடின விநோதங்கள்.

23. பாரிஜாதா பஹரணம்.

24. துலாபாரம்.

25. குவலயாபீட வதம்.

26. மல்ல யுத்தம்.

27. ருக்மிணி ஸத்ய பாமைகளோடு பள்ளியறையில் களித்திருந்தது.

28. தூது நடந்தது.

29. அர்ஜுனனுக்குத் தேரோட்டியாயிருந்து கீதோப தேசம் செய்தது.

30. ருக்மிணி ஸத்யபாமைகளுக்கிடையே ஒரு கையில் கோல் பிடித்து ஒரு கையை ஸத்ய பாமையின் தோளில் வைத்து நின்ற நிலை.

[முப்பத்திரண்டு தரிசனம் என்று சொன்னதற்கு மாறாக முப்பதுதான் காண்கிறது.

இருபத்தொன்பதாவது தரிசனத்தின் முடிவில், "இப்படி முப்பது தரிசனம் காட்டியாயிற்று." (ஏவம் த்ர்ம்சத் ஸ்வரூபாணி தர்சயாமாஸ வை ஹரி :) — என்று சொல்லி முடித்ததும், மேலே இரண்டு தரிசனம் வர்ணிக்கப்பட வேண்டியதில் ஒன்று மட்டுமே காண்கிறது. இதனால் மேலே காட்டின 29 வதும், முப்பது என்று சொல்லி பிறகு விவரித்த ஒன்றும் சேர்ந்து 30 தரிசனம் தான் மாஹாத்மியத்தில் உள்ளது. 32ல் இரண்டு என்ன ஆயிற்றென்றால் 29க்குப் பிறகு ஒன்றும் 30க்குப் பிறகு ஒன்றும் பற்றிய சுலோகங்கள் விடுபட்டிருக்க வேண்டும். அதை கவனியாமல், கிடைத்தபடியே அச்சேறிவிட்டதென்று நிச்சயிக்கலாம்.]

## 30 தரிசநங்களின் விவரம்

**ரிஷிகள் பிரார்த்தித்தபடி பகவான் எல்லா ரூபங்களையும் காட்டியருளினார். அதாவது,**

### 1. அவதார வைபவம்

நாலு கைகளோடும், அவற்றில் சங்கு சக்கரம் கெதை சார்ங்கம் என்ற நாலு ஆயுதங்கள் தரித்துக் கொண்டு தேவகியின் கர்ப்பத்திலிருந்து ஜனித்தான் கிருஷ்ணன். அப்போது தேவர்களும் வந்து தரிசித்தனர். அப்படியே தேவகீ வஸு தேவர்களும் தரிசித்து, கம்ஸனுக்கு பயந்து, திவ்ய ரூபத்தை மறைக்கும்படி வேண்டினர். குழந்தையும் அப்படியே செய்த வைபவத்தை ரிஷிகள் நெடுநேரம் தரிசித்து அடுத்த தரிசனம் காட்டும்படி வேண்டினார்கள்.

### 2. பூதநா வதம்

குழந்தைகளைக் கொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்ட பூதனை என்னும் பிசாசு காதலின்பம் நிறைந்த கட்டழகியாய் உருவெடுத்து பிருந்தாவநம் போய், நந்தகோபன் மாளிகையில் பிரஸவ அறையில் புகுந்து, குழந்தையைக் கொஞ்சிக் குலாவிக் கையில் எடுத்து

மடியில் வைத்துப் பால் கொடுத்தாள். அந்த ராக்ஷஸியின் விஷப் பாலை அம்ருதமாகப் பானம் பண்ணி, அதனோடுகூட உயிரையும் வாங்கி அவளைக் கொன்று வீழ்த்தி ஒன்றும் அறியாதவன்போல குழந்தை அழுது கொண்டிருந்தது. யசோதையும் மற்றைய பெண்டிரும் அலறி அழுது கொண்டு குழந்தையைத் தேற்றிக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்டு கலங்கின ரிஷிகள் அடுத்த தரிசனம் காட்டியருளும்படி வேண்டினர்.

## 3. யசோதை மடியிலமர்ந்து பாலுண்டது

யசோதைப் பிராட்டியின் மடியிலமர்ந்து அவளுடைய அங்கங்களைத் தடவிக் கொண்டே, அடிக்கடி அவளுடைய முகத்தையும் பார்த்தவாறே பால் குடித்தான் கண்ணன். தாய்ப் பாலின் வெண்மையோடு கலந்து விளங்கும் வெண் பற்களைக் காட்டிப் புன்னகை புரிந்து, காதிலுள்ள குண்டலங்களும் அசைந்தாடும் நிலைமையில், தாய்க்கு எல்லா உலகங்களையும், அவற்றிலுள்ள பிரம்ம ருத்ர இந்திராதிகளையும் ஸித்தர் வித்யாதரர் அப்ஸரஸ்ஸுகள் முதலானோரையும் காட்டி மகிழ்வித்த கண்ணனை தரிசித்து கோப்ரளய கோபில ரிஷிகள் அடுத்த தரிசனம் காட்டும் என்று எம்பெருமானை வேண்டினர்.

## 4. தவழ்ந்தோடி விளையாடல்

பிரம்மாதிகளுக்கும் அரியனாய் இடைப் பெண்களுக்கு எளியனாய் வந்த கண்ணன் நந்தகோபன் மாளிகையில் குழந்தை யணிகள் அனைத்தும் அணிந்து தவழ்ந்தோடித் தாதிகளோடு விளையாடும் விநோதத்தைக் காட்டினான் எம்பெருமான். அது கண்டு ஆநந்தமெய்தி, அடுத்த தரிசனம் காட்டுவீராக என்று கோப்ரளயரும் கோபிலரும் வேண்டினார்கள்.

## 5. வெண்ணெய்க்கு ஆடல்

கண்ணன் ஒரு கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு மறு கையை அசைத் தசைத்து ஆடினான். அந்த அழகைக் கண்டு களித்த ரிஷிகள் அடுத்த விளையாட்டைக் காண விரும்பினர்.

## 6. மாடு மேய்க்கை

ஒற்றைத் துண்டு உடுத்து, தலையில் மயிலிறகு, காலில் செருப்பு, கையில் தடி—இவற்றோடு புறப்பட்டு பசு மந்தையை மேய்த்துக் கொண்டிருக்கும் நிலையைக் காட்டியருளினான் எம்பெருமான். ரிஷிகள் அந்த தரிசனத்தைக் கண்டு களித்து அடுத்த தரிசனம் காட்டும்படி வேண்டினர்.

## 7. தூங்கியெழுந்ததும் வெண்ணெய் களவு செய்தல்.

நந்தன் மாளிகையில் நல்ல பட்டாடை உடுத்து அணிகளும் அணிந்து பள்ளிக் கட்டிலில் படுத்துறங்கிய கண்ணன் விடிகாலையில் கடையும் தயிரரவம் கேட்டு எழுந்தோடி, அண்டை வீட்டில் புகுந்து, விளக்கை வாயால் ஊதி அணைத்து, அங்குள்ள வெண்ணெயைக் களவு செய்தான். ஸர்வேசுவரன் இந்த லீலையைக் காட்டியருளக் கண்ட கோபில கோப்ரளயர்கள் நெடுநேரம் தரிசித்து அடுத்த கோலம் காண வேண்டினர்.

## 8. கோபிகா வஸ்த்ரா பஹாரணம்.

இடைப் பெண்கள் யமுனைக் கரையில் புடவையை அவிழ்த்து வைத்து நிர்வாணமாய் நீரில் இறங்கிக் குளிக்கையில், கிருஷ்ணன் போய் புடவைகளை மரத்தின்மேல் வைத்தான். பெண்கள் நீண்டு பரந்த கூந்தலால் மார்பையும், கைகளால் அங்கத்தையும் மறைத்துக் கொண்டு புடவைகளைக் கொடுக்கும்படி கெஞ்சினார்கள். கீழே கவித்த கையை நிமிர்த்து அஞ்சலி செய்தால் கொடுப்பதாய்ச் சொல்லி கண்ணன் விநோதம் செய்தான். இந்த லீலையை எம்பெருமான் காட்டினது கண்டு ரிஷிகள் வேறு தரிசனம் காட்டு மென்று பிரார்த்தித்தனர்.

## 9. பசுக்கள் பால் சுரக்கும்படி குழலூதின இனிமை.

கிருஷ்ணன் பசுவின் மேல் சாய்ந்து கொண்டு மெல்லிய விரலால் குழல் பிடித்து ஊதும் இன்னிசை கேட்டபடியே பசு அவன் காலை நக்கிச் சுவைத்துக் கொண்டிருந்தது. இன்னிசையில் மயங்கி மற்றைய பசுக்கள் பால் சுரந்தன. இப்படியொரு அதிசயம் காட்டினான் எம்பெருமான். ரிஷிகள் கண்டு களித்து வேறு தரிசனம் வேண்டினர்.

**10. உரலில் கட்டுண் டிருந்தது.**

*ஒரு இடைச்சி வீட்டினுள் புகுந்து கண்ணன் வெண்ணெய் களவு செய்கையில், அவள் அவனை உள்ளே வைத்து கதவைத் தாளிட்டு அவனுடைய அன்னையிடம் சொல்லப் போனாள். அங்கே கண்ணனை அவன் தாய் யசோதை உரலில் கட்டி வைத்திருந்தாள். அது கண்டு இடைச்சி திகைத்துப் போனாள். எம்பெருமான் இப்படி தரிசனம் காட்டக் கண்டு களித்து ரிஷிகள் மறு தரிசனம் வேண்டினர்.*

**11. மாடு மேய்க்கையில் கோலைக் கீழே ஊன்றி அதன் மேல் தலை வைத்து நின்ற நிலை.**

*கண்ணன் பிருந்தாவநத்தில் மாடு மேய்த்த அழகை தேவர்களும் வந்து தரிசித்தார்கள். வலது காலைத் தூக்கி இடது காலால் நின்று கொண்டு, தடியைக் கீழே ஊன்றி, அதன்மேல் கண்ணன் தலை சாய்த்த படியே இடைப் பெண்களை வைத்த கண் வாங்காதே பார்த்து நின்ற நிலையைக் கண்டு, ரிஷிகள் அதிசயித்து வேறு காட்சி வேண்டினர்.*

**12. கையில் கயிறும் பாத்திரமும் கொண்டு பால் கறக்கப் போன அழகு.**

*இந்த தரிசனம் கண்டு அதிசயித்து ரிஷிகள் அடுத்த தரிசனம் பார்க்கப் பாரித்தனர்.*

**13. கபித்தாஸுர வத்ஸா ஸுரர்களை ஒரே அடியில் வீழ்த்தி வதம் செய்தது.**

*கிருஷ்ணனைக் கொல்வதற்காக கம்ஸன் இரண்டு அஸுரர்களை ஏவினான். அவர்கள் கன்றுக் குட்டியாயும் விளங்கனியாயும் மாறி, கிருஷ்ணனைக் கொல்ல ஸமயம் பார்த்திருந்தார்கள். "எங்களுக்கு விளங்கனி வேண்டும்; பறித்துத்தா"—என்று பெண்கள் வேண்டலும், அஸுரா வேசமுள்ள கன்றை காலைப் பிடித்து தூக்கி விளங்கனிமேல் எறிந்தான் கண்ணன். ஒரே வீச்சில் கன்றையும் கனியையும் வீழ்த்தி முடித்த அதிசயத்தை தரிசித்து முனிவர் மறு தரிசனம் வேண்டினர்.*

**14. காளிய நர்த்தநம்.**

காளியன் என்ற பெரிய பாம்பின் தலைமேல் இடது காலால் நின்று அதன் வாலை இடக்கையால் பிடித்த படியே கண்ணன் நர்த்தநம் செய்தமையைக் காட்டினான் ஈசுவரன். ரிஷிகள் கண்டு அதிசயித்து வேறு விநோதம் விரும்பினார்கள்.

**15. பெண்களோடு அவர்களுடைய பற்று மஞ்சள் அடையாளம் தன்னுடலில் காணும்படி விளையாடியது.**

பெண்களைக் கட்டித் தழுவி விளையாடினான் கண்ணன். அவர்களுடைய மஞ்சளும் மணப் பூச்சும் படிந்து அவனுடைய பூணூல் மஞ்சளாயிற்று; கூந்தல் கலைந்தது; அவர்களுடைய நகம் பதிந்து அவனுடல் முழுதும் காயம் உண்டாயிற்று. தானுடுத்த உடையை நழுவ விட்டு, பெண்களின் புடவையை யுடுத்து கையும் கோலுமாய் நின்றான். இந்த நிலையைக் கண்டுகளித்து அடுத்த லீலையைக் காணலுற்றனர் ரிஷிகள்.

**16. சங்கு சக்கரம் அம்பு வில் என்ற நாலு ஆயுதங்களை ஏந்தி நின்ற நிலை**

கண்ணன் நாலு கையிலும் நாலு திவ்யாயுதங்களை ஏந்தி நின்ற நிலையைக் கண்டு மயங்கி முனிவர்கள் வேறு தரிசனம் காண விரும்பினார்கள்.

**17. ராஸ க்ரீடை**

நீலக் கருநிற மேனியனான கண்ணன் பொன்னுடை யுடுத்து, புலி நக மாலை முதலான பல அணிகளும் அணிந்து, பதினாருயிரம் கோபிமாரில் ஒவ்வொருத்தியோடும் கைகோத்து, பதினாருயிரம் கண்ணனாயிருந்து ஆடின அத்புதத்தைக் கண்டு மகிழ்ந்த ரிஷிகள் வேறு அதிசயம் பார்க்கப் பாரித்தனர்.

**18. தன்னுடைய அவதாரங்களை யெல்லாம் ஒரு இடையனுக்குக் காட்டியருளியது.**

பெண்களோடும் பிள்ளைகளோடும் விளையாடிக் கொண்டே வீதி சுற்றி வருகையில், கண்ணன் யாருமறியாமல் ஒரு வீட்டினுள் புகுந்து அதிலுள்ள இடையனுக்குத் தன்னுடைய தசாவதாரம்

முதலான ஒவ்வொரு பிறப்பையும் காட்டியருளின வைபவத்தைக் காட்சி கொடுத்தான் ஸர்வேசுவரன். (அந்த இடையனை விட அதிக பாக்கியசாலிகளான) ரிஷிகள் கண்டுகளித்து வேறு விநோதம் வேண்டினர்.

## 19. இடைப் பிள்ளைகளோடு ஆற்றங் கரையில் கட்டுச் சோறுண்டது

கண்ணன் திவ்யாபரணங்க ளணிந்து பீதகவாடை உடுத்து, கையில் ஊது கொம்பும் கன்று மேய்க்கப் பிரம்பும் பிடித்துத் தோளில் கட்டுச் சோறு சுமந்து இடைப் பிள்ளைகளோடு யமுனா நதி போய் விளையாடினான். எல்லாரும் களைப்புற்று கட்டுச் சோறெடுத்து உண்கையில், கண்ணனும் அருகிலிருந்தார்க்குக் கொடுத்து அவர்களுடைய சோற்றையும் வாங்கிப் பிரியமாய் அமுது செய்தான். இந்த அதிசயம் கண்ட ரிஷிகள் கண்ணன் கையிலிருந்து பிரஸாதம் வாங்கி, உண்டு மகிழ்ந்து வேறு வைபவம் காட்டச் சொன்னார்கள்.

[ரிஷிகள் கண்ணன் கையில் பிரஸாதம் வாங்கியதால் இந்தக் காட்சி ஒவ்வொன்றும் வெறும் தோற்றமல்லாமல் கண்ணனோடு கூட வாழ்ந்த அநுபவமென்றே அறியக் கடவது.]

## 20. கோவர்த்தந மலையைத் தாங்கி நின்றது

"இந்திரன் என்னையும்விட ஒரு தெய்வமா, அவனுக்கு விழா வேண்டுமா" — என்று சொல்லி அதை நிறுத்தினான் கண்ணன். இந்திரன் கடுமையாகக் கோபித்து கோகுலம் முழுதையும் அழிக்கக் கிளம்பி கடு மழை பொழிவித்தான். கிருஷ்ணன் கோவர்த்தந மலையை எடுத்துக் குடையாக நிமிர்த்து, நந்த கோகுலத்திலிருந்த எல்லா குடும்பத்தையும் பசு மந்தையையும் குடை மலையின் அடியில் அணைத்து, ஏழு நாள் காத்தருளின அத்புதத்தை அநுபவித்துப் பேராநந்தம் பொங்கின ரிஷிகள் மறு காட்சியை வேண்டினர்.

## 21. பிரம்மாவினால் அபஹரிக்கப்பட்ட நிலை

கிருஷ்ணன் அவதரித்து கோகுலம் செழித்து பிரம்மலோகம் பாழாவது கண்ட பொறாமையால் பிரம்மா வந்து கிருஷ்ணன்

முதலானுரை அபஹரித்துப் போனுன். எல்லாரையும் மீட்டுவித்துத் தன்னையும் பிரம்மாவினிடமிருந்து விடுவித்த பரமாத்புதத்தை தரிசித்தனர் ரிஷிகள்.

## 22. ஒரு கோபியோடு விளையாடின விநோதங்கள்

ஒரு வீட்டில் புகுந்து அங்குள்ள இடை மகளோடு கண்ணன் காதல் களியாட்டம் ஆடின அதிசயங்களைக் கண்டு வியப்புற்ற ரிஷிகள் மறு தரிசனம் காணலானுர்கள்.

## 23. பாரிஜா தாப ஹாரணம்

கிருஷ்ணன் தேவலோகம் போய் அங்குள்ள பாரிஜாத மரத்தைப் பேர்த்தெடுத்து வந்து ஸத்ய பாமை மாளிகையில் நட்டு வைத்தான். மரத்திலிருந்த பூவெல்லாம் அண்டையிலிருந்த ருக்மிணியின் மாளிகையில் வீழ்ந்தன. அது கண்டு கடு கடுத்த ஸத்ய பாமையைக் கண்ணன் தேற்றின வைபவத்தைக் கண்டு மகிழ்ந்த கோப்ரளய கோபிலர்கள் வேறு தரிசனம் வேண்டினர்.

## 24. துலா பாரம்

ஸ்யமந்தக மணி தனக்குப் பிறந்தகத்து சொத்தாய் வந்த ஸ்ரீதநம் — என்று செருக்குக் கொண்டாள் ஸத்ய பாமை. செருக்கைக் குலைக்கக் கருதி கிருஷ்ணன் நாரதரை ஏவினுன். "உனக்கு இவ்வளவு ஐசுவரியம் இருந்தும் கிருஷ்ண பக்தி இல்லையே"— என்ருர் நாரதர். என்னுடைய ஐசுவர்யமெல்லாம் கொடுத்து கிருஷ்ணனை எனக்காக்கிக் கொள்கிறேன்—என்று சொல்லி ஸத்ய பாமை கிருஷ்ணனை தராசில் உட்கார வைத்து, மறுதட்டில் தன்னுடைய ஐசுவரியமெல்லாம் வைத்தாள். எல்லா ஐசுவரியமும் கிருஷ்ணனுடைய எடைக்குப் போதவில்லை. நாரதர் ருக்மிணிப் பிராட்டியை வேண்டினுர். அவள் வந்து கிருஷ்ணன் திருவடிகளைத் துளசியால் அர்ச்சித்து ஐசுவர்யங்களை எடுக்கச் செய்து, அதில் ஒரு தளம் துளசியை வைத்தாள். கிருஷ்ணன் பக்தியோடு செய்த பூஜைக்கு வசப்பட்டு எளியனுனன். அவன் இருந்த தட்டு துளசித் தட்டுக்கு சமமாய் நின்றது. அந்த துளசி பிரஸாதத்தை எடுத்துக் கொண்டு புனிதரானுர் நாரதர். இந்த அதிசயத்தை தரிசித்த ரிஷிகள் வேறு தரிசனம் காண விரும்பினர்.

**25. குவலயாபீட வதம்.**

*கிருஷ்ணனைக் கொல்லுவதற்காக கம்ஸன் குவலயாபீடம் என்று பெயருள்ள பெரிய மத யானையை ஏவினான். கிருஷ்ணன் அதனோடு போர் செய்து கொம்பை முறித்துக் கீழே தள்ளிக் கொன்றான். இந்த வீரச் செயலைக் கண்ட ரிஷிகள் அதிசயித்து அடுத்த தரிசனம் காட்டும்படி கேட்டார்கள்.*

**26. மல்ல யுத்தம்**

*கம்ஸனால் ஏவப்பட்ட மல்லர் இருவர் வந்து கம்ஸனைப் போருக்கு அழைத்தனர். ஊரார் யாவரும் காணும்படி பொருது அவர்களைக் கொன்றான் கிருஷ்ணன். இந்த வீரப்பாட்டை தரிசித்த ரிஷிகள் வேறு விநோதம் காண விரும்பினர்.*

**27. ருக்மிணி ஸத்ய பாமைகளோடு பள்ளியறையில் களித்திருந்தது**

*இந்த தரிசனத்தைக் கண்டு அதிசயித்து வேறு வைபவம் காண விரும்பினர் கோப்ரளய கோபிலர்கள்.*

**28. தூது நடந்தது**

*கிருஷ்ணன் பாண்டவர்களுக்காக துர்யோதநாதியரிடம் தூது போக இசைந்து ராஜ சின்னங்களோடு பெருஞ்சேனை புடைசூழப் புறப்பட்ட வைபவத்தை ரிஷிகள் தரிசித்து அடுத்த காட்சி காண ஆவலுற்றார்கள்.*

**29. அர்ஜுநனுக்குத் தேரோட்டியாயிருந்து கீதோபதேசம் செய்தது**

*அர்ஜுநன் ஏவும்படி, கையாளாய் நின்ற நிலையிலேயே அவனுக்கு கண்ணன் பிரம்மோபதேசம் செய்த வைபவத்தைக் கண்டு கை கூப்பி தரிசித்து ரிஷிகள் அடுத்த காட்சி காண விரும்பினர்.*

*"இப்படி முப்பது ஸ்வரூபங்களைக் காட்டினான் எம்பெருமான். அடுத்த ரூபம் காட்டும்படி ரிஷிகள் வேண்டினார்கள்."*

**30. ருக்மிணி ஸத்ய பாமைகளுக் கிடையே ஒரு கையில் கோல் பிடித்து ஒரு கையை ஸத்ய பாமையின் தோளில் வைத்து நின்ற நிலை.**

வலக்கையில் மூவளைவான பொற்கோல் பிடித்து இடது கையை ஸத்ய பாமை தோளில் வைத்திருப்பதை வல வருகில் ருக்மிணிப் பிராட்டி காண நிற்கும் ராஜகோபால வேஷத்தைக் காட்டினான் எம்பெருமான். ரிஷிகள், கண்டுகளித்து கீழே விழுந்து வணங்கி, இந்த வேஷமே இங்கு எந்நாளும் இருக்கவேண்டும் — என்று பிரார்த்தித்தார்கள். அப்படியே கிருஷ்ண பகவான் ராஜ கோபாலனாய் ஆவிர்ப்பவித்து அங்கே பிரதிஷ்டிதராயிருந்தார்.

## பிரம்மாவும் லக்ஷ்மியும் இந்த க்ஷேத்ரத்தில் எம்பெருமானைப் பூஜித்த வரலாறு

ஸ்ருஷ்டி கர்த்தாவான பிரம்மா ஸ்ருஷ்டி சக்தி தன்னொரு வனுக்கேயுள்ள தென்று நினைத்து கர்வம் கொண்டார். இதை யறிந்த ஸர்வேசுவரன் பிரம்மாவின் கர்வத்தைக் குலைப்பதற்காக ஒரு மாயை உண்டாக்கி பிரம்மாவுக்கு புத்தியை மறைத்தான். பிரம்மா ஒன்றும் தெரியாதவரானார். ஸநகாதி மஹர்ஷிகள் வந்து வருந்தி,— "இது பகவத் பிரபாவத்தால் உண்டாயிற்று. எம்பெருமானை தியானித்து தபஸ் இருந்து சரணாகதி செய்யும்" — என்று யோசனை சொன்னார்கள். பிரம்மாவும் இசைந்து பூலோகம் வந்து, தன்னுடைய மகளான காவேரிக் கருகில் புனிதமான சம்ப காரண்யத்தில் துவாதசாக்ஷர மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டு நூறு வருஷம் தவம் கிடந்தார். பெருமாள் கருட வாஹந மேறி வந்து, பிரம்மாவின் தபஸ்ஸுக்கு மகிழ்ந்து, ஸ்ருஷ்டி சக்தி முதலிய யாவற்றையும் முன்னிலும் அதிகமாகக் கொடுத்தார்.

பிரம்மா தன் சக்தியைப் பெற்று, அங்குள்ள ராஜ கோபால ஸ்வாமியை ஸ்வாயம் புவ விமாநத்தில் பிரதிஷ்டை செய்து, விசுவ கர்மாவைக் கொண்டு கோயில் கட்டுவித்து, பாஞ்சராத்ர விதிப்படி பூஜை செய்து பங்குனி மாஸம் ரோஹிணியில் ரதோத்ஸவம் நடத்திப் போனார்.

## லக்ஷ்மி தபஸ் செய்த வரலாறு

தேவர்களும் அஸுரர்களும் பெரிதாக சண்டை போட்டார் கள். தேவர்கள் தோல்வி யடைந்தனர். தேவர், யக்ஷர், கிந்நரர், குஹ்யகர் — எல்லாரும் ஒன்று சேர்ந்து யுத்தம் செய்து ராக்ஷஸர் களைத் தோற்கடித்தார்கள். ராக்ஷஸர்கள் தங்கள் குருவான பிருகு

மஹர்ஷியின் ஆசிரமத்துக்குப் போயினர். அவர்களைக் கண்டு, பிருகு பத்நி வருந்தி, கோபம் கொண்டு தேவர்களை சபிக்கலானுள். தேவர்கள் க்ஷீராப்தி போய் விஷ்ணுவினிடம் முறையிட்டனர். விஷ்ணு தேவர்களுக்கு அபயம் கொடுத்து,—பிருகு பத்நியின் கழுத்தை அறுத்து வரும்படி தன்னுடைய சக்ராயுதத்தை ஏவினுர். சக்கரம் சீறிக்கொண்டு பறந்துபோய், நொடிப் பொழுதில் அவளுடைய கழுத்தை அறுத்துத் திரும்பிற்று. அப்போது பிருகு மஹர்ஷி மேரு பர்வதத்தில் தபஸ் செய்து கொண்டிருந்தார். ஆகாச வாணி உடனே அவரிடம் போய் நடந்ததைச் சொல்லிற்று. பிருகு அடங்காக் கோபம் கொண்டு, — "என் மனையாளைக் கொன்றவன், ராஜ்யம் இழந்து வநத்தில் வஸித்து மனையாளை இழக்கக் கடவன்." என்று சபித்தார்; அங்கேயுள்ள கங்கையில் ஸ்நாநம் செய்து மறுபடியும் தபஸ்ஸை ஆரம்பித்தார்.

பிருகு சொன்ன சாபம், திருப்பாற் கடல் போய் விஷ்ணுவைப் பார்த்து வணங்கி, நடுநடுங்கி, தன்னை அறிவித்துக் கொண்டது. நான் உன்னை என்னுடைய அவதாரத்தில் ஒரு காரணமாக ஏற்றுக் கொள்கிறேன்; போ! — என்று சொல்லி சாபத்தைப் போகச் சொன்னுர் விஷ்ணு. சாபம் பிருகுவினிடம் போய் அறிவித்தது. நீ மறுபடியும் அவனிடம் போ என்று ரிஷி ஏவினுர். அது போய்த் திரும்பி வந்து, —"உன்னை உபயோகித்துக் கொள்கிறேன்; போ!"— என்று மீண்டும் திருப்பியனுப்பப்பட்ட தாய்ச் சொல்லிற்று. பிருகு ஆச்சர்யமடைந்து, நான் யாரைச் சபித்தேன்?— என்று ஆலோசித்து, "ஐயோ! விஷ்ணுவை யன்ரே சபித்து விட்டேன்! அவரிடம் போய், சரணுகதி செய்து மன்னிப்பு கேட்க வேண்டும்"—என்று நிச்சயித்து ஸத்ய லோகம் போனுர்; அங்கே பிரம்மா வஸிஷ்டர் முதலானுரிடம் ஆலோசனை செய்தார்.

## இரண்டாம் அத்யாயம் முடிந்தது

# மூன்றும் அத்யாயம்

ஸத்ய லோகத்தில் பிரம்மாவும், வியாஸர் வஸிஷ்டர் ஜாபாலி நாரதர் — முதலான தேவரிஷிகளும் பிருகு சொன்னதைக் கேட்டு,—"சம்பகாரண்யம் போய் லக்ஷ்மியை தியானித்து தபஸ் செய்தால் லக்ஷ்மியே வந்து புத்ரியாய்ப் பிறப்பாள்; அவளை விஷ்ணுவுக்கு விவாஹம் செய்து கொடுத்தால் விஷ்ணுவை சபித்த பாபம் போய்விடும்." — என்று சொன்னார்கள். பிருகு அப்படியே இசைந்து வியாஸரை வணங்கி, தபஸ்ஸுக்கு உபயோகமான நல்ல மந்திரத்தை உபதேசம் செய்யச் சொன்னார். அவர் ஸ்ரீ மந்த்ரத்தை உபதேசித்தார். பிருகு ஸ்ரீ மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டு வியாஸர் உபதேசித்த க்ரமத்தில் ஆயிரம் வருஷம் தபஸ் செய்கையில், லக்ஷ்மி பிரத்யக்ஷமாயினாள். ரிஷி லக்ஷ்மியை ஸ்தோத்ரம் செய்து வணங்கி,—"அம்மா! நீ எனக்கு மகளாய்ப் பிறக்க வேண்டும். நான் உனக்குப் பிதாவாயிருந்து உன்னை விஷ்ணுவுக்கு விவாஹம் செய்து கொடுத்து, நான் அவருக்குச் செய்த தீமையைப் போக்க விரும்புகிறேன்"—என்று பிரார்த்தித்தார்.

லக்ஷ்மி அப்படியே இசைந்து சம்பகாரண்ய க்ஷேத்ரத்திலேயே ஈசாந்ய திக்கிலுள்ள தாமரைக் குளத்தில் குழந்தையாக ஆவிர்ப்பவித்தாள். பிருகு அதை எடுத்துக் கொண்டு தன் ஆசிரமத்துக்குப் போனார். அங்கிருந்த ரிஷிகளும் வந்து பார்த்து மகிழ்ந்து குழந்தையைக் கொஞ்சிக் குலாவி எடுத்து பிரியமாய் வளர்த்தார்கள்; அவள் பிருகு புத்ரியாகையால் பார்க்கவி என்று பெயர் வைத்தார்கள். அவள் பருவப் பெண்ணாய் வளர்ந்து விளங்குகையில், தன் பிதாவைப் பார்த்து,—"அப்பா! என்னை யாருக்கு விவாஹம் செய்விப்பீர்?"—என்று கேட்டாள். "நீ விஷ்ணுவைத் தான் விவாஹம் செய்து கொள்ள வேண்டும். அதற்காக நீ கடுமையாகத் தவம் செய்." என்றார் பிருகு. பார்க்கவி குளக்கரையில், வடக்கு முகமாய் பஞ்சாக்நி மத்தியில் வலது காலைத் தரையில் ஊன்றி, இடது காலை மடித்து வலது காலில் வைத்து நின்று, நாலு கைகளையும் மேலே தூக்கிக் கொண்டு விஷ்ணுவை த்யானித்து தபஸ் செய்தாள். நூறு வருஷம் ஆயிற்று. விஷ்ணு

கருடன் மேலேறி வந்து, பார்க்கவியை அழைத்து—"நீ எதற்காக தபஸ் செய்கிருய்? உனக்குத் தேவையான வரம் கேள்! கொடுக்கிறேன்,"—என்ருர். "என்னுடைய தபஸ்ஸுக்கு தேவரீர் ஸந்தோஷித்தால், என்னை விவாஹம் செய்து கொள்ளும். இங்கே அருகில் என் பிதா பிருகு முனிவரும் உம்மை தியானித்து நெடு நாளாகத் தவம் புரிகிருர். அவரிடம் எல்லா செய்திகளையும் கேட்பீராக."—என்ருள். பெருமாள் பிருகுவினிடம் போய்க் கேட்டதும், அவர் வணங்கி ஸ்தோத்ரம் செய்து, —"ஸ்வாமி! நான் அறியாமல் உம்மை சபித்தேன். என்னை மன்னிக்க வேண்டும். என் புத்ரியை விவாஹம் செய்து கொள்ளும். விவாஹம் செய்வித்து நான் மேரு பர்வதம் போய் விடுகிறேன்—என்று பிரார்த்தித்தார். "உம்முடைய சாபத்தை நான் தக்க ஸமயத்தில் உபயோகித்துக் கொள்கிறேன். நீர் விரும்பியபடி உம்முடைய அருமை மகளை இப்போதே இங்கேயே விவாஹம் செய்து கொள்கிறேன்"—என்று சொல்லி, பிரம்மா சிவன் இந்திரன் முதலான தேவர்களையும், ரம்பை முதலான அப்ஸரஸ்ஸுகளையும் வருவித்துக் கொண்டார். பிருகுவைப் பார்த்து,—உமக்கு இன்னும் என்ன வேண்டும்?—என்று கேட்க, அவர் தம்முடைய சாபத்துக்காக தம்மை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து,—"திவ்ய ஸ்த்ரீகளோடு கூட வஸந்த ஜலக்ரீடை யென்னும் சுனையாடல் செய்து களிப்பீராக. அதைப் பார்த்து ஆநந்தித்து நான் என்னிடத்துக்குப் போய் விடுகிறேன்."—என்ருர்.

ஸர்வேசுவரன் பிருகு பிரார்த்தித்தபடியே இசைந்து உலக வழக்கமாக பெண்களோடு ஜலக்ரீடை செய்தான். அங்கிருந்த காவேரி நதியையே ஜலக்ரீடைக்குத் தக்கபடி நாலு பக்கத்திலும் அடைத்துக் குளமாக்கி ஸர்வேசுவரன் அதில் விளையாடினன். தேவதைகள் எல்லாரும் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். பிருகுவும் பார்த்து ஸந்தோஷித்து தன்னிருப்பிடம் போனர். பெருமாளும் பிருகு புத்ரியை அழைத்துக் கொண்டு தம்மிருப்பிடமான திருப்பாற்கடல் எழுந்தருளினர். லக்ஷ்மி ஆதியில் க்ஷீராப்தியிலிருந்து உண்டானப் போல் இப்போது பிருகு புத்ரியாக சம்பகாரண்ய க்ஷேத்ரத்திலுள்ள குளத்திலிருந்து உண்டானள். லக்ஷ்மி

ஆவிர்ப்பவித்த காரணம் பற்றியே அவளுடைய முதலுத்பத்தி ஸ்தாநமான க்ஷீராப்தி, திருப்பாற் கடல்-என்ற பெயர்களே அந்தக் குளத்துக்கும் ஏற்பட்டது.

லக்ஷ்மியின் உத்பத்தியைச் சொல்லும் இந்த கட்டம் இந்த மாஹாத்மியத்தில் மிகவும் விசேஷமானது.

## அக்நி தபஸ் செய்த காரணம்

காசியபருக்கு விநதா கத்ரு — என்று இரண்டு பத்தினிகள் இருந்தனர். விநதை கருடனைப் பெற்றாள். கருடன் விஷ்ணு வாஹநமா யிருந்தான். கத்ருவுக்கு சங்கன், கார்க்கோடகன், தக்ஷகன்—என்று மூன்று புத்ரர்கள் உண்டானார்கள். கத்ருவின் புத்ரர்கள் ஸர்ப்ப ஜாதியைச் சார்ந்தவர்கள். அவர்கள் பாதாளத்தில் வஸித்தனர். விநதையின் புத்ரனாய் வேத மூர்த்தியான கருடன் ரஸாதலத்தில் வாஸம் செய்தான். இவர்களின் பிதாவான காசியபர் பூலோகத்தில் மேருமலையின் அருகில் வாஸமா யிருந்தார்.

விநதை கத்ரு இருவரும் இந்திரனுக்கு வாஹநமான ஐராவதத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கையில்,—"ஆயிரம் யானைக்கு ஸமமான பலமுள்ள ஐராவதம் கைலாஸ பர்வதம் போல் வெளுப்பா யிருக்கும்; அது சந்திரனிட மிருந்து உண்டானது"—என்றாள் விநதை. ஐராவதம் கருப்பா யிருக்கும்—என்று சொல்லி வாதாடினாள் கத்ரு. இது பற்றி ஸஹோதரிகள் இருவருக்கும் பெரிய வாதம் உண்டாயிற்று, ஐராவதம் கருப்பா யிருந்தால் நான் உனக்கு அடிமை யாகிறேன்—என்று சொன்னாள், விநதை. அது வெளுப்பா யிருந்தால் நான் அடிமை யாகிறேன்—என்றாள் கத்ரு.

இந்த ஸமயத்தில் கார்க்கோடகன் வந்து தன் தாய் கத்ருவையும் பிறகு விநதையையும் நமஸ்காரம் செய்தான். கத்ரு கார்க்கோடகனைத் தனியாக அழைத்து ஐராவதம் வெளுப்பா கருப்பா—என்று கேட்டாள். அது வெளுப்பு தான் என்றான் கார்க்கோடகன். உடனே கத்ரு மனம் கலங்கி,—"அது கருப்பு என்று சொல்லி விட்டேனே. விநதையோடு வாதம் செய்து, அது கருப்பா யில்லாவிடில் உனக்கு அடிமை யாகிறேன்—என்று சொல்லி விட்டேன்.

நான் இனி அவளுக்கு அடிமையாக வேண்டும். குழந்தாய்! சீக்கிரத்தில் நீ போய் ஐராவதத்தைக் கருப்பாக்கிவிடு. வெளுப் பென்று சொன்ன விநதை எனக்கு அடிமையா யிருக்கட்டும்,"— என்று சொல்லி மகனை ஏவினாள். கார்க்கோடகன் உடனே ஐரா வதத்தினிடம் போய்,—"நான் காசியபரின் புத்ரன். உன்னைப் பார்ப்பதற்காக தேவ லோகம் வந்தேன். நானும் என்னுடைய பந்துக்களும் சேர்ந்து உன் சரீரத்தின் அழகைப் பார்க்க நீ ஸம் மதிக்க வேண்டும்."—என்று கேட்டான். ஐராவதம் ஸம்மதித்தது. கார்க்கோடகன் தன்னுடைய பந்துக்களோடு கூட இருந்து ஐரா வதத்தைச் சூழ்ந்து மறைத்து கருப்பாகக் காட்டினான். இதை யறிந்து கத்ரு விநதையை அழைத்து ஐராவதத்தைக் காட்டி, அது கருப்புதான் என்று சொல்லி அவளைத் தனக்கு அடிமை யாக்கினாள்.

சில நாள் கழித்து அங்கே போனான் கருடன்; தன்னுடைய தாய் அடிமைப் பட்டிருப்பதை யறிந்து, அவளை விடுவிக்கும் வழியைக் கேட்டான். அம்ருத கலசம் கொண்டு வந்து கொடுத் தால் விடுதலை செய்வதாகச் சொன்னாள் கத்ரு. கருடன் உடனே தேவ லோகம் போய் அம்ருத கலசத்தை எடுக்கலானான். அதை காவலாளர்கள் இந்திரனுக்கு அறிவித்தனர். இந்திரன் ஐராவத மேறி யுத்தத்துக்குப் புறப் பட்டான். தான் வந்த காரியம் இன்ன தென்று சொன்னான் கருடன். அங்கிருந்த அக்நி பகவாந் அதற்கு ஸம்மதிக்காமல் கருடனைத் தன்னுடைய தேஜஸால் தஹித்தான். கருடன் கோபம் கொண்டு,—"நான் விஷ்ணுவுக்கு வாஹநமாய் தாயின் அடிமைத் தளையைத் தெறிக்க வந்தது உண்மையாகில், என்னைத் தடுக்கும் அக்நியே! நீ ஒளி மழுங்கி யாகத்தில் கொடுக் கும் ஹவிஸ்ஸையும் இழப்பாயாக."—என்று சொல்லி சபித்தான். உடனே அக்நியின் ஜ்வாலை குறைந்தது. கருடன் தடை யில்லாமல் அம்ருத கலசத்தை எடுத்துக் கொண்டு போய் கத்ருவுக்குக் காட்டினான். அதைப் பார்த்து ஸந்தோஷித்து அவள் விநதைக்கு விடுதலை கொடுத்தாள். உடனே கருடன் அதை தேவ லோகத் தில் முன் போல வைத்து விட்டு க்ஷீராப்தி போய் விட்டான்.

அக்நி பகவாந் ஒளி யிழந்து வருந்தி பிரம்மா வினிடம் போய், தனக்கு நேர்ந்த துர்க் கதியைச் சொல்லி முறையிட்டு அதைப் போக்கும் வழி யாதென்று வேண்டினான். பிரம்மா த்வாதசாக்ஷர மந்த்ரத்தை உபதேசித்து,—“ சம்பகாரண்யம் போய் இதை ஜபித்து தபஸ் செய். ”—என்று சொன்னார்.

மூன்றும் அத்யாயம் முடிந்தது

---

# நாலாம் அத்யாயம்

## ராஜகோபாலப் பெருமாள் ஜலக்ரீடை செய்தருளிய வைபவம்

பிரம்மா சொன்ன படியே அக்நி தபஸ் செய்ய லானான். அக்நிக்கு இரண்டு தலை, நாலு கொம்பு, நாலு கால், நாலு கை; ஒரு காலால் நின்று கொண்டு, மூன்று கால் நாலு கை இரண்டு முகம்—எல்லா வற்றையும் உயரத் தூக்கி கடுமையாகத் தபஸ் செய்தான் அக்நி.

[ ஸாதாரணமாக ஒற்றைத் தலைக்கு இரண்டு கை என்றபடி இரண்டு தலைக்கு நாலு கை என்று எழுதப் பட்டது. கை எவ்வளவு என்று நிச்சயிக்க முடியாமல் பொதுவாய் “ ந்யஸ் தோர்த்வ பாஹு !” என்று காண்கிறது.

ந்யஸ் தோர்த்வ பாஹு ஸ்த்ரிபத: சது: சிருங்கோ த்விசீர்ஷக:;
ஏக பாதோர்த்வ முகஸ்திஷ்டந் விஷ்ணு த்யாந பராயண: ]

அக்நி நூறு வருஷம் கடுமையாகத் தவம் செய்தான். எம்பெருமான் ஸந்தோஷித்து பிரத்யக்ஷ மாகி,—“ உனக்கு வேண்டும் வரம் என்ன ?” என்று கேட்டான். அக்நி எம் பெருமானைக் கண்ணாரக் கண்டு களித்து ஸ்தோத்ரங்கள் சொல்லி, தனக்கு கருட சாபத்தால் ஒளி மழுங்கிய குறையை நீக்க வேண்டு மென்று பிரார்த்தித்தான். பகவாந் ஸந்தோஷித்து முன்னிலும் அதிகமாக தேஜஸ்ஸைக் கொடுத்து—“ அக்நியே ! நீ தவம் செய்த இந்த கோப்ரளய தீர்த்தத்தில் கார்த்திகை நக்ஷத்ரம் ஞாயிற்றுக் கிழமை கூடிய சுப

தினத்தில் ஸ்நாநம் செய்து கந்யாதாநம் கோதாநம் தீபதாநம் முதலியவை செய்பவர்கள் பூமியை ஆளும் அரசராவர்.''—என்றும் வரம் கொடுத்தார்.

சௌநகாதி மஹர்ஷிகளுக்கு இது வரை கதை சொன்ன ஸூதர் கோப்ரளய கோபிலர் களுக்கு எம்பெருமான் ப்ரத்யக்ஷமான கதையை மேலும் சொல்லத் தொடங்கினுர்.

"பெருமாளே! இங்கே ஸ்வாயம்புவ விமாநத்தில் ராஜகோபாலனுய் இருப்ப தோடு இந்த சம்பகாரண்ய க்ஷேத்ரத்தையே ஒரு நல்ல நகரமாகச் செய்தருள வேண்டும், துவாரகாபுரி வாஸுதேவபுரி போல இங்கே நாலு வீதிகளும், அங்கே கோமதீ நதி போல இங்கே ஹரித்ரா நதியும் விளங்க வேண்டும். முன்பு யமுனையில் ஜலக்ரீடை செய்தது போல, பெருமாளே! இங்கேயும் ஹரித்ரா நதியில் ஜலக்ரீடை செய்வீராக''—என்று பிரார்த்தித்தார்கள் கோப்ரளய கோபில மஹர்ஷிகள்.

பெருமாள் அப்படியே இசைந்து தேவலோக சில்ப்பியை வருவித்து அவ் விடத்தில் ஒரு நல்ல நகரம் உண்டாக்கச் சொன்னுர். உடனே மதுராபுரி துவாரகாபுரி களுக்கு ஸமமாக வாஸுதேவ புரியைப் புதிதாக உண்டாக்கி, யானை குதிரை மாடு முதலிய வற்றுக்கு தனித் தனி இடங்கள் ஏற்படுத்தி, ஹரித்ரா நதியை நாலு மூலையாயுள்ள குளமாக்கி, நாலு பக்கத்திலும் நூற்றுக் கணக்கில் படிக்கட்டு அமைத்து அழகு படுத்தினுன் விசுவகர்மா.

[குளத்தை ஆகாச மாயும் யாகசாலை யாயும் உருவகப் படுத்தி வர்ணித் திருப்பது அத்புதமான ஸம்ஸ்க்ருத ஸாஹித்யமாய் உத்தம காவ்ய லக்ஷணமா யிருக்கிறது.]

விசுவகர்மா இப்படி ஆச்சரியமான தொரு குளம் அமைத்தது கண்டு கோப்ரளய கோபிலர்கள் ஸந்தோஷித்து,—"இதில் ஜலக்ரீடை செய்தருள வேண்டும்" என்று பெருமாளை ப்ரார்த்தித்தார்கள். கிருஷ்ணுவ தாரத்தில் தன்னோடு கூடிக் களித்த பதினுறுயிரம் தேவிமார்களை அங்கே வருவித்துக் கொண்டார் பெருமாள். அவர்களின் வருகை யறிந்த நாரதாதி முனிவர்களும் இந்திராதி தேவர்களும் இந்த ஜலக்ரீடை விநோதத்தைக் காண்பதற்கு

ஆகாசத்தில் சூழ்ந்து கொண்டார்கள். ஜலக்ரீடையில் ஒருவர் மேல் ஒருவர் தண்ணீர் இறைத்து விளையாடுவதற்கான துருத்தி குழாய் கொம்பு — முதலிய வற்றையும் ஸித்த மாக்கிக் கொண்டு பெருமாள் பெண்களோடு குளத்தில் இறங்க லானார். அப்போது ரிஷிகள் வந்து வணங்கி,—"பெருமானே! தேவரீரும் பெண்களும் ஆடை யாபரணங்களைக் குளக் கரையில் கழற்றி வைக்க வேண்டும். ஜலக்ரீடை முடித்துக் கரை யேறி அவரவர் களுடையதை அறிந்து எடுத்துக் கொள்ள வேண்டும்."—என்று ப்ரார்த்தித் தார்கள்.

பெருமாள் அப்படியே செய்து எல்லாப் பெண்களோடும் குளத்தில் இறங்கி, பெண்களின் மேல் நீரை இறைத்தார். துருத்தியால் ஊதி நீரை மேலே கிளப்பி விழச் செய்தார்; ஒவ்வொருத்தியின் மேலும் நீரால் அடித்தார். அவர்களும் பெருமாள் மேல் நீரை அடித்து ஆடினர். ஒவ்வொருத் தியையும் கட்டித் தழுவி நெடு நேரம் சுனையாடல் ஆடிக் களித்தான் எம்பெருமான்

பெண்களின் மஞ்சள் குங்குமப்பூ மணப்பூச்சு முதலியவை கரைந்து குளத்து நீர் முழுதும் மஞ்சளாய் மாறி நறுமணம் கமழ்ந்தது. ஆகாசத் திலிருந்து கண்டு களித்த தேவர்கள் ஸநகாதி யோகிகள் யாவரும் மகிழ்ந்து பூமாரி பொழிந்து ஹரித்ரா நதிக்குக் கிடைத்த பாக்கியத்தையும் சம்பகாரண்யத்தையும் கொண்டாடினார்கள்.

பெருமாளுடைய பாதத் திலிருந்து உண்டான கங்கையைக் காட்டிலும், சரீரத்தில் ஸம்பந்தப் பட்ட கல்யாணி நதியைக் காட்டிலும், திருவடியில் மிதிபட்ட ஸேதுவைக் காட்டிலும், பெருமாளுடைய வேர்வை யிலிருந்து உண்டான மத்ஸ்ய நதியைக் காட்டிலும், பெருமாளை மடியிலே படுக்க வைத்திருக்கும் மஹிமை வாய்ந்த காவேரியைக் காட்டிலும்,—கிருஷ்ணனும் கோப கன்னிகளும் தோய்ந்து குளித்துக் களித்தாடின பெருமை பெற்ற ஹரித்ரா நதி மிக மிகப் புனித மாயிற்றென யாவரும் கொண்டாடினர். (ஹரித்ரை என்றால் மஞ்சள்.) மஞ்சள் நதி என்று ஏற்பட்ட பெயர் இப்போது பதினாறாயிரம் கோபிமாரின் மஞ்சள் பூச்சு கரைந்துண்டான மஞ்சள் நிறத்தால் பொருத்த மாயிற்று.

தமக்காக ஸர்வேச்வரன் இப்படி ஸுலபனாய் வந்து ஜல க்ரீடை செய்யும் அதிசயத்தைக் கண்டு களித்த கோப்ரளய கோபி லர்கள் குளத்தைச் சுற்றி வந்து ஆநந்தக் கூத்தாடினர்.

மனம் போனபடி சுனையாட லின்பம் அனுபவித்த பிறகு, பெண்களைக் கரையேறி ஆடை யாபரணங்களை எடுத்து அணியச் சொன்னான் எம்பெருமான். அவர்கள் அணிந்ததும் அவன் கரையேறிய போது, அவனுடைய வற்றில் ஒரு பட்டாடையும், ஒற்றைக் குண்டலமும், ஒற்றைத் தாடங்கமுமே அங்கிருந்தது. அதை மட்டுமே அணிந்து நின்றான்.

அப்போது, சிவபெருமான் வந்து நந்த கோபனைப் பார்த்து, —"உன் மகன் நெடு நேரம் நீராட்டம் ஆடிக் களைத் திருக்கிறான். அவனுக்கு குழம்புப் பால் காய்ச்சிக் கொடுத்து களைப்பாற்று வாயாக.

"இந்தக் குளத்துக்குக் கிழக்கில் உன் வம்சியர்களான இடை யர்கள் வாழ்கின்றனர். அவ் விடத்தில் வெண்கலப் பாத்திரத்தில் "ஸ்ரீ க்ருஷ்ணாய நம:"-என்று மந்திரம் சொல்லி பாலைக் கொதிக்க வைத்து மகனுக்குக் கொண்டுவா. மற்றை ஊர்களில் பால் காய்ச்சினால் இவ்வளவு இனிப்பா யிராது. நீ இப்போது பால் காய்ச்சிக் கொடுத்த படியே என்றென்றும் உன் வம்சியர்கள் கொடுப்பார்கள்."—என்று சொன்னார். நந்தனும் அப்படியே பால் காய்ச்சி கொண்டு வந்து கொடுத்தான்.

அப்போது கோப்ரளய கோபிலர்கள் வந்து வணங்கி,— "ஸ்வாமி! ஒற்றைத் துணி, ஒற்றைக் குண்டலம், ஒற்றைத் தாடங்கமுமே தேவரீருக்குப் பொருத்தமா யிருக்கிறது. எப்போதும் இப்படியே இருப்பீராக."—என்றார்கள். பெருமாளும் இதற்கு இசைந்திருந்தார். ஒற்றை ஆடை ஒற்றைக் காதணியோடு எம் பெருமான் நிற்கும் நிலையைக் கண்ட ஸநகாதி மஹர்ஷிகள் அந்த அழகிலே ஈடுபட்டு, அவன் நின்ற அந் நிலையை பத்து சுலோகத் தால் வர்ணித்தனர். [அந்த சுலோகங் களையே பெருமாளுக்கு த்யாந சுலோகமாய்ச் சொல்லி இற்றைக்கும் அர்ச்சக ஸ்வாமிகள் தரிசனம் செய்து வைக்கிறார்கள். சுலோகங்களையும் அவற்றின் தமிழாக்கத்தையும் கடைசியில் காண்க.]



ராஜகோபாலன் தெப்பம்



ராஜகோபாலன் (உத்ஸவமூர்த்தி) புறப்பாட்டு திருக்கோலம்

இங்கே பெருமாளுக்கு ஸ்ரீ வித்யா ராஜகோபாலன் என்று திருநாமம் கொடுத்து ஸநகாதிகள் ஸ்தோத்ரம் செய்து போனார்கள். கோப்ரளய கோபிலர்கள் அந்த த்யாக சுலோகம் கேட்டுக் களித்து,-"பெருமாளே! இந்த திருக் கோலத்தோடு இங்கே எழுந்தருளி யிருந்து எக்காலத்திலும் இப்படியே ஸேவை ஸாதிக்க வேண்டும்."—என்று பிரார்த்தித்தார்கள்.

இப்படி முப்பத்திரண்டு ஸேவைகளையும் ஸேவித்தனர் ரிஷிகள். நந்த கோபனும் இடைப் பெண்களும் கொண்டு வந்த குழம்புப் பாலோடு பெரிய வநபோஜநத்துக்குத் தேவையான பல வகைப் பட்ட சித்ராந்நம் செய்வித்து பெருமாளுக்கும் தேவிமார்களுக்கும் அமுது செய்யப் பண்ணினார்கள் ரிஷிகள்.

பெருமாளுடைய ஜலக்ரீடை வைபவத்தால் ஹரித்ரா நதி எல்லா புண்ய தீர்த்தங்களையும் விட அதிகமான மஹிமை பெற்றுச் சிறந்தது. ஸௌராஷ்ட்ர தேசத்தரசன் ராஜசேகரன் என்பான் நன்றி கெட்டலைந்த பாபத்தை ஹரித்ரா நதியில் ஸ்நாநம் செய்து போக்கிக் கொண்டான்.

## நாலாம் அத்யாயம் முடிந்தது

[பெண்களோடு ஜலக்ரீடை நிர்வாணமாக சுனையாடுவதில்லை. மேலாடையைக் களைந்து உள்ளாடையும் மேல் கச்சுமாயிருந்து நீச்சடிக்கும் விளையாட்டாகும் இது.

இங்கும் முப்பத் திரண்டு தரிசனம் என்றே இருக்கிறது. ஒற்றைத் துண்டு ஒற்றைக் காதணி யோடு நிற்கும் நிலையையும் சேர்த்தால் கூட முப்பத் தொன்று தான் ஆகிறது. இடையில் ஏதோ ஒன்றுக்கு சுலோகம் விடுபட் டிருக்கிறது போலும்!

குழம்புப் பால்: க்ஷீர க்ஷோதம் என்று மூலத்தில் வார்த்தை. க்ஷீரக்ஷோதம் க்ஷீரக்ஷூண்ணம் — என்று இரண்டு சொற்கள் உண்டு. க்ஷீரக்ஷூண்ணம் திரட்டுப் பால், க்ஷீரக்ஷோதம் குழம்புப் பால். மன்னார்குடி ஸ்தல மாஹாத்மியத்தில் காணும் குழம்புப் பாலும் வநபோஜநமும் ஸ்ரீரங்கத்தில் நம் பெருமாள் திருப்பள்ளி யோடத்தில் அமுது செய்தருளுகிறார்; இவை மன்னார்குடித் தெப்பத்தில் இல்லாவிடில் உண்டாக்கத் தகும்.]

# ஐந்தாம் அத்யாயம்

## ஸௌராஷ்ட்ர ராஜாவின் கதை

கோதாவரி நதியின் வட கரையில் இருக்கிறது ஸௌராஷ்ட்ர தேசம். ஸிந்து தேசம் ஸௌவீர தேசங்களுக் கிடையில் ஸௌ ராஷ்ட்ர தேசம் நல்ல செழிப்புடன் விளங்குகிறது. அங்கே ஆற்றுப் பாசனமான நிலங்கள் குறைவு. வானம் பார்த்த பூமிகள் தான் அதிகம். அந்த நாட்டின் அரசன் ராஜ சேகரன் என்பவன் ராஜ் யத்தை அறநெறி வழுவாமல் ஆண்டு வந்தான். அவனுடைய பிதா வஸுமாந் என்பவனும் நியாயமாக ஆண்டு சென்ருன்.

ஸௌராஷ்ட்ர தேசத் திலுள்ள காட்டு வெளிகளில் காடு வாழ் சாதியான பிரஜைகள் பலர் பயிர் செய்து விளைவித்து வாழ்ந் திருந்தனர். ஒரு காலத்தில் காட்டு மிருகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து திரண்டு வந்து பயிர்களை அழிக்க லாயின. காடு வாழ் மக்கள் பயந்து ஓடி ராஜதானியில் புகுந்து ராஜ சேகர ராஜாவினி டம் முறை யிட்டார்கள். ராஜா அவர்களுக்கு அபயம் கொடுத்து, -"நான் பெரிய படை திரட்டி வந்து விலங்குகளை வேட்டை யாடிக் கொன்று உங்களுக்கு நன்மை செய்கிறேன். நீங்கள் சீக்கிரம் போய் உங்கள் இடத்திலேயே இருங்கள்."—என்று சொல்லி, சேனையைத் திரட்டிப் புறப்பட லானுன்.

அப்போது ஸௌவீர ராஜ்யத்தின் எல்லையைக் காவலிட்டுக் கொண்டிருந்த தளபதி ராஜ சேகரனுக்கு எழுதி யனுப்பின ஓலை வந்தது. அதைக் கணக்கர் களிடம் கொடுத்து படிக்கச் செய்தான் அரசன். அதில் எழுதி யிருந்ததாவது—

> "ஸௌவீர ராஜ்யத்தின் எல்லைப் புறத்தில் வேடர்கள் பதினு யிரவர் புகுந்து காசிக்கும் ஸேதுக்கும் யாத்திரை செய்யும் ஸாது ஜனங்களை அடர்த்து வழிப்பறி செய்கிருர்கள். இவர் களை உடனுடனுக ஓடி வந்து அடித் தொழிக்க வேண்டும்."

இப்படி ஓலையில் எழுதி யிருந்ததைக் கணக்கர் படித்தனர். அது கேட்ட ராஜ சேகரன் ஜயந்தன் என்ற ஸேநாபதியை வருவித்து, "சேனையைத் திரட்டி இப்போதே புறப்பட்டு எல்லைக் காவல் யாவும் செய்து ஜநங்கள் பயமின்றி பல இடங்களிலும் போக்கு வரத்து செய்யத் தேவையான வசதிகள் செய்வாயாக"—என்று

கட்டளை யிட்டு ராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்படைத்து, முதலில் காலாட் படை, பிறகு குதிரைப் படை, மூன்றாவதாக யானைப் படை, கடைசியில் தேர்ப் படை—என்று வகுத்து வரிசையாகப் புறப்படச் செய்து, ராஜ சேகரனும் தேரிலேறி ஸௌவீர ராஜ்யத்தின் எல்லைக்கு விரைந்தான். அங்கே வேடர் திருடர் வழிக் கொள்ளைக் காரர் யாவரும் ஒன்று திரண்டு அரசனுடைய சேனையை எதிர்த்துப் பெரிதாய் போர் செய்தனர். ராஜாவினுடைய படைக்கும் திருடர் படைக்கும் கடுமையாகப் போர் நிகழ்ந்தது. படைத் தலைவனை ஜயந்தனும் படை வீரர்களும் பல விதமான ஆயுதங்களை வீசினார்கள். கொள்ளைப் படையினர் யாவரையும் கொன்று, எஞ்சிய சிலரைப் பிடித்து கட்டிக் கொணர்ந்து மன்ன வனிடம் சேர்த்தான் ஜயந்தன்.

மன்னவன் மகிழ்ந்து சேனாதிபதியின் வீரத்தை மெச்சி, (கைதிகளாய் வந்த கொள்ளையர்களைச் சிறையி லடைக்கச் செய்து) ஜயந்தனையும் சம்மானித் தனுப்பி, போரில் மாண்டவர் போக எஞ்சிய படையோடு புறப்பட்டு காட்டுப் புறம் போகலானான்

பயிர்களை அழிக்கும் காட்டு மிருகங்களை வேட்டை யாடிக் கொன்று காடுவாழ் குடிகளுக்கு விலங்குகளினா லுண்டாகும் தீமையைப் போக்க வேண்டியது அவசிய மாயிற்று. விலங்குகளைப் பிடிக்க கூண்டுகளையும், யந்திரங்களையும், கயிறு வலை முதலியன வீச வல்ல வீரர்களையும், விலங்குகளை ஒரோர் குரலால் அழைத்து அருகில் வருவிக்க வல்ல வேடர்களையும் சித்தப் படுத்தி பெருஞ் சேனையும் வேடுவர்களும் புடை சூழ ராஜ சேகர மன்னவன் பெரிய குதிரை மேலேறிப் புறப்பட்டான். **ஜில்லிகா வநம்** என்ற பெருங் காடு கொடு விலங்கு களுக்குப் புகலிடமா யிருந்தது. அதனுள் புகுந்து நெடு நேரம் வேட்டை யாடிப் பல விலங்குகளைக் கொன்று வீழ்த்தினான் வேந்தன். யானைகள் ஈட்டியாலும் அங்கு சத்தாலும் குத்துண்டு மாய்ந்தன. மான்கள் பெட்டிகளுள் அடைபட்டு அழிந்தன. பன்றிகள் கயிறுகளில் சிக்கி இறந்தன. பல விலங்குகள் பாணங்களால் அடிபட்டு மடிந்தன.

இப்படி எல்லா விலங்குகளும் பிடிபட்டு அடிபட்டு வீழ்ந்து மடிகையில், ஒரு பெரிய காட்டுப் பன்றி மட்டும் எவ்வகையிலும்

பிடிபடாம லிருந்தது. வெளுத்த காலும் முகமும், கருத்த காதும் நகமுமாய் பயங்கரமா யிருந்த பெரிய பன்றி வாயு வேகமாய் ஓடி யோடித் தாவிப் பாய்ந்து கொண் டிருந்தது. அதை வேட்டை யாடிப் பிடித்துக் கொல்ல வேண்டு மென்று துணிந்தான் அரசன்; குதிரை மேலேறி நெடுந் தூரம் பன்றியை விரட்டிக் கொண்டு விரைந்தான். ஓரோரிடத்தில் மறைந்தும் தெரிந்தும் பாய்ந்தோடிய பன்றியைப் பின் தொடர்ந்து நெடுந் தூரம் போனான் அரசன். ஜில்லிகா வனம் முழுதும் தாண்டி அப்பால் நீரும் நிழலும் மானிடரு மில்லாப் பெரும் பாலை நிலத்தில் பல பல அம்புகளை விடாமல் வீசிப் பன்றியை வீழ்த்திக் கொன்றான்.

வேட்டை யாடிக் களைத்த வேந்தன் சிறிது நேரம் இளைப்பாற இடம் தேடி நெடுந் தூரத்தில் ஆலமரமும் நீரும் இருக்கு மிடத்தில் குதிரையை விட்டிறங்கி அமர்ந்து களை தீர்த்துக் கொண்டான். நற்பகல் நேரத்தில் அங்கிருந்த நீரில் ஸ்நானம் செய்து, விடாய் தீர்க்க நல்ல நீரில்லாமல் வேந்தன் வருந்துகையில், அங்கோர் பிராம்மணன் ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டு வந்தான். அவனி டம் கேட்டு வாங்கி மன்னவன் நீர் அருந்திக் களை தீர்த்ததும், ஒரு வரை யொருவர் விசாரித் தறிந்தார்கள்.

**யஜ்ஞசீலன்** என்று பெயர் கொண்ட பிராம்மணன் அரசனை அருகிலிருந்த தன்னுடைய ஆசிரமத்துக் கழைத்துப் போனான். பர்ண சாலையில் தன்னுடைய மனையாளோடு வாழும் பிராம்மணன் அக்நி ஹோத்ரம் தெய்வ பூஜை முடித்து, அதிதியாய் வந்த அரசனுக்கு நல்ல விருந் தளித்தான். இருவரும் உண்டு களித்து இளைப்பாறி உசாவுகையில் மன்னவன் தன்னை இன்னானென்று சொல்லி, வேட்டை யாடி வந்த விவரத்தை உரைத்தான். பிராம் மணன் பர்ண சாலையில் வாழும் விவரத்தையும், அவனுடைய பெயர் முதலான வற்றையும் கேட்டறிந்து,—"என்னிடம் வந்தால் உமக்கு எல்லா ஐசுவரியமும் கொடுக்கிறேன், வாரும்; நீங்கள் அளித்த விருந்தும் செய்த உபசாரமும் மிக மிக இனிது" —என்று சொல்லி மெச்சினான் ராஜா. அதற்குள் ராஜாவைத் தேடித் திரிந்த சேனை வீரர்கள் குதிரைக் காலடியையும் பன்றிக் காலடியையும் குறி வைத்து ஓடி வந்து பர்ண சாலையில் மன்ன வனைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

தேடிவந்த பெருஞ் சேனையோடு மன்னவன் புறப்படுகையில் யஜ்ஞசீலனைத் தன்னுடைய நகரத்துக்கு வந்து தன்னிடம் சம்மானம் பெற வேண்டுமென்று பிரார்த்தித்தான்.—"காட்டில் பர்ண சாலையில் ஏகாந்தமா யிருந்து நாட்டாரோடு உறவுமின்றி பகவத் தியாநத்தி லிருக்கும் என்போல்வார்க்கு ராஜ்யத்தில் என்ன வேலை? ஆகிலும், மன்னவனே ! நீ அன்போடென்னை அழைப்பதால் நான் செய்ய விரும்பும் ஒரு யாகத்துக்காக உன் ராஜ்யத்துக்கு வந்து உன்னைப் பார்க்கிறேன்."—என்று சொல்லி அவனை அனுப்பி விட்டான் பிராம்மணன்.

ராஜ சேகரன் ராஜ்யம் போய், கைதிகளாய் நிற்கும் கொள்ளையர்களைச் சிறையில் அடைத்தான். ராஜ்யத்தை அறநெறி வழுவாமல் ஆண்டு வருகையில், அவனுக்கு ஆண் மகவு பிறந்தது. அதற்கு **ஸ்வர்ண சிகாமணி** என்று பெயர் வைத்தான் ராஜா.

ராஜ சேகர ராஜன் தன் மகனையும் நாட்டையும் நன்றாய் பாதுகாத்து வருகையில், யஜ்ஞசீலன் யாகம் செய்ய விரும்பி அதற்கு வேண்டுவன வற்றை மனைவியோடு ஆலோசித்தான். "ராஜ சேகர ராஜனிடம் போய் யாகத்துக்குத் தேவையான பொருளைப் பெற்று வா"—என்றாள் மனைவி.

"அரசனிடம் போய் பயனில்லை. அவன் இங்கே நமக்கு வாக்குக் கொடுத்ததை மறந்திருப்பான். அவனைப் பார்ப்பதற்காக நெடுந் தூரம் வழி நடக்க வேண்டும். பல தேசங்கள் கடந்து போய் அவனைக் கண்டு கேட்டும் பலிக்காவிடில் என் செய்வது?" என்றான் யஜ்ஞசீலன். "நீ அவசியம் போக வேண்டும்"—என்று கடிந்து சொல்லி விட்டாள் மனைவி. யஜ்ஞசீலன் புறப்பட்டு நெடு நாள் நெடுந் தூரம் நடந்து, பல இடங்களில் கேட்டுக் கேட்டு ஸௌராஷ்ட்ர தேசம் போய், நகரம் அடைந்து அரமனை வாசலில் தன்னுடைய வருகையை அறிவித்தான்.

"பல ஆண்டுகளுக்கு முன் ஜில்லிகா வநத்தில் வேட்டையாடி வந்து என்னுடைய பர்ண சாலையில் போஜநம் செய்து போகையில், என்னைத் தன்னிடம் வந்து வெகுமதி பெற்றுப் போ—என்று அழைத்தார் அரசர். அதனால் இப்போது நான் வந்திருக்கிறேன்."—என்று சொன்னான் யஜ்ஞசீலன்.

காவலாள் போய் அரசனிடம் அறிவித்தான். "ராஜா எனக்கு ஒன்றும் ஞாபக மில்லை."—என்று சொல்லி மௌனமா யிருந்தான். பிராம்மணனிடம் இப்படிச் சொல்லி விடு—என்று கூட யாரையும் அவன் ஏவ வில்லை. யஜ்ஞசீலன் இரண்டு நாள் ராஜ த்வாரத்தில் காத்திருந்தான். அவனை யாரும் மதிக்கவே யில்லை. அவன் மனம் நொந்து போய், எப்படியாவது ராஜனைப் பார்க்க வேண்டு மென்று நிச்சயித்து அரமனைக்குள் புகுந்து, ஒரு ஆபரணத்தைக் களவாடி கள்ளத் தனமாய் வெளியே வந்து காவலாளர் களிடம் பிடிபட்டு ராஜ ஸபையில் நிறுத்தப் பட்டான்.

"ஏன் திருடினாய்? எப்படித் திருடினாய்?"—என்று ராஜ ஸபை யில் பலரும் கேட்க லானார்கள். "என்னைத் தன் ராஜ்யத்துக்கு ராஜா வரச் சொன்னதால் வந்தேன். இப்போது ராஜா என்னை மறந்து விட்டார். ராஜாவுக்கு என்னை அறிவிப் பதற்காக இப்படி திருடினேன்"—என்று எல்லா விவரத்தையும் சொன்னான் யஜ்ஞ சீலன். எனக்கு ஒன்றும் தெரியா தென்று சொல்லி, பிராம்மணனா யிருந்து இப்படி திருடலாமா?—என்று கடிந்து அவனை ராஜ்யத்துக் கப்பால் தள்ளச் செய்தான் அரசன்.

யஜ்ஞசீலன் மிகவும் மனம் வருந்தி, நெடுந் தூரம் வழி நடந்து தன் வீடு சேர்ந்து மனைவியிடம் எல்லா வற்றையும் சொல்லி துக்கித்து, முன் போல அக்நி ஹோத்ரம் தேவ பூஜை முதலிய வற்றை முறைப்படி செய்து கொண் டிருந்தான்.

யஜ்ஞசீலனைக் கடிந்து பேசி ராஜ்யத்துக் கப்பால் தள்ளி விட்ட மறு நாள் காலையில் தூங்கி யெழுந்த போது ராஜனுக்கு பைத்தியம் பிடித்தது. க்ருதக்நதா (செய்ந் நன்றி மறத்தல்) என்னும் கொடும் பாவம் அவனைப் பற்றிக் கொண்டது. மந்திரிகள் பல விதத்திலும் சிகித்ஸை செய்து பார்த்தனர். பைத்யம் நீங்க வில்லை. அவனைக் காவலில் வைத்துப் பாது காத்து சிகித்ஸை செய்கையில், அவன் காவலை யெல்லாம் கடந்து வெளி யேறினான். மந்திரிகள் பலவித மாய் பாடு பட்டும் மன்னனைக் கண்டு பிடிக்க முடிய வில்லை. இள வரசனை ஸ்வர்ண சிகாமணிக்கு பட்டாபிஷேகம் செய்து ராஜ்யம் நடத்தினார்கள் மந்திரிமார்.

ராஜா ஊரூராய்த் திரிந்து, இளைத்துக் கருத்து குரூபியாகி, அழுது, சிரித்து, அலறி, கீழே வீழ்ந்து புரண்டு, நடந்தும் ஓடியும் நெடுந் தூரம் சென்று கடைசியில் ஜில்லிகா வநம் போய் ஆலமரத் தடியில் கிடந்து கதறினான். மூன்று நாள் அங்கே தன்னறி வில்லாமல் அழுது புரண்டு சிறிது தூரம் போய் யஜ்ஞசீல னுடைய பர்ண சாலைக் கருகில் போனான்.

யஜ்ஞசீலன் அவனைப் பார்த்து, ஸௌராஷ்ட்ர ராஜன் —என்றறிந்து போஜந மளித்து உபசரித்தான். யஜ்ஞசீலனைக் கண்டு அவனுடைய உணவையும் உண்ட பிறகு அவனுக்குப் பைத்தியம் நீங்கி தன்னறிவு உண்டாயிற்று.

[ஸிந்து ஸௌவீர ராஜ்யங்களுக் கிடையில் ஸௌராஷ்ட்ர ராஜ்யம் கோதாவரியின் வடகரைக் கப்பால் இருக்கும் இடத்தையும், காசிக்கும் ஸேதுவுக்கும் யாத்ரிகர்கள் போகும் பாதைக் கருகில் ஜில்லிகா வநம் இருக்கும் இடத்தையும் ஆராய்ந்து நிச்சயிக்க வேண்டும்.

கொள்ளைக் காரர்களோடு நடந்த போரில் யுத்த வர்ணநமும் வேட்டை யாடுகையில் ம்ருகயா வர்ணநமும் காண்கையால், சம்பகாரண்ய மாஹாத்மியம் காவ்ய லக்ஷணம் நிறைந்த நூலாகிறது.]

### ஐந்தாம் அத்யாயம் முடிந்தது

# ஆறும் அத்யாயம்

## ஸௌராஷ்ட்ர ராஜன் செய்த கைங்கர்யங்கள்

யஜ்ஞசீலன் ராஜனைத் தன் ஆசிரமத்துக்கு அழைத்துப் போய் உணவளித்து,—"நீர் ஸௌராஷ்ட்ர ராஜாவான ராஜ சேகரர் அல்லவா? உமக்கு இந்த நிலைமை எப்படி உண்டாயிற்று?"—என்று கேட்டான்.

**ராஜா**—நீர் என் ராஜ்யத்துக்கு வந்து ஸபையில் என்னைப் பார்த்த போது உம்மைப் பற்றிய நினைவு எனக்கு யாதுமே இல்லை. நீர் குற்றம் செய்ததாக நிச்சயித்து உம்மை அவமதித்து ஊருக்கப் பால் தள்ளிய பிறகு, மறு நாள் காலையில் எனக்கு மதி மயக்கம் உண்டாயிற்று. உடனே நான் ராஜ்யத்தை விட்டு ஓடி வந்து இப்படி அலைகிறேன். நான் என்னறிவிழந்து செய்த தீமைக்கு என்னை மன்னிக்க வேண்டும்.

**யஜ்ஞசீலன்**—அரசே! உம்முடைய நன்றியைப் பரீக்ஷிப்பதற்காகவே நான் ஆபரணத்தைக் களவாடிப் பிடிபட்டு உம்முடைய ஸபையில் வந்து நின்று, நீர் வாக்குக் கொடுத்ததையெல்லாம் சொன்னேன். உமக்கு அப்போது ஒன்றும் நினைவில்லை. நாங்கள் காட்டி லிருந்து தவம் புரிபவர்கள். எங்களுக்கு நாட்டாரோடு ஒரு பணியுமில்லை. நீர் என்னை அவமதித்த போது கூட நான் உம்மைக் கோபத்தால் சபிக்க வில்லை. ஆகிலும், உம்முடைய ஆபத்து உம்மை விடவில்லை. நீர் செய்த அவமானத்தையும் பொறுத்துக் கொண்டு நான் திரும்பி வந்தேன்.

நீதி சாஸ்த்ரம், புராணம், முதலியவை கற்ற பிராம்மணர்கள் அறிவில்லாத அரசனுக்கு அறிவு புகட்ட வேண்டும். ஞானியான பிராம்மணன் தெய்வத்துக்கு சமமாவான். பிராம்மணன் எந்த ஆபத்திலும் அவமானத்திலும் பொறுமை இழக்கக் கூடாது. முனிவர் யோகிகள் முதலானோரின் தவம், சாபம் கொடாத வரையில் தான் சிறப்புறும். கோபித்து சாபம் கொடுத்தால் தவப் பயன் தொலைந்து போகும். யார் என்ன தீமை செய்தாலும் பிராம்மணன் அவனை சபிக்கக் கூடாது. சபித்தால் அவன் அப்போதே நசிப்பான்-

அரசன் சாஸ்த்ரங்களை ஆராய்ந்து பிராம்மணர்களையும் அழைத்து ஆலோசித்து அரசு செலுத்த வேண்டும். இப்படிச் செய்தால் தான் இறைவன் இன்புறுவான்; இல்லாவிடில் உன்னைப் போல் மயங்கி மானமிழந்து மடிந்து போவான்.

ராஜா உடனே எழுந்து நமஸ்காரம் செய்து,—"ஸ்வாமி! என்னைக் காத்தருள வேண்டும்."—என்று பிரார்த்தித்தான்.

**யஜ்ஞசீலன்**—அரசே! நீர் அஞ்ச வேண்டா! உம்முடைய பாபத்தைப் போக்க வழி சொல்லுகிறேன். என் ஆசிரமம் வந்தவர்களுக்கு யாதொரு துன்பமும் இராது. நீர் செய்த அவமானத்தை நான் சாந்த குணத்தால் பொறுத்திருக்கிறேன். நன்றி கெட்டவனுக்கு நன்மையே நேரிடாது. ஆகிலும், நீர் நன்றி மறந்த பாபம் போவதற்கு ஒரு வழி சொல்லுகிறேன்:

இந்த ஜம்பூ த்வீபத்தில் புண்ய க்ஷேத்ரங்கள் பல இருக்கின்றன. இவை, ஸ்வயம் வ்யக்தம் திவ்யம் ஸைத்தம் ஆர்ஷம்—என்று நாலு விதம். இவை பாபங்களைப் போக்கி ஐசுவர்யங்களைக் கொடுக்கும். இமய மலை முதல் ஸேது வரையில் கங்கை, நர்மதை, காவேரி, தாம்ரபர்ணி—முதலான நதிக் கரைகளில் பல க்ஷேத்ரங்கள் உள்ளன. இவற்றி லுள்ள விஷ்ணு க்ஷேத்ரங்கள் நூற்றெட்டு. இவற்றில் ஸ்ரீரங்கம் மிக்க விசேஷமானது. அதற்கு அக்னி மூலையில் காவேரிக்கு இரண்டு யோஜனை தூரத்தில் சம்பகாரண்ய க்ஷேத்ரம் இருக்கிறது. அதற்கு **தக்ஷிண த்வாரகை** என்று பெயர். அது பிரம்மாவினால் பூஜிக்கப் பட்ட இடம்; லக்ஷ்மி அக்னி பிருகு மஹர்ஷி—மூவரும் தபஸ் செய்த இடம். க்ருதயுகம் திரேதாயுகம் துவாபர யுகங்களில் பல பல மஹான்கள் அங்கே பெருமாளைப் பூஜித்தார்கள். துவாபர யுகத்தின் முடிவில் கோப்ரளய கோபில மஹர்ஷிகள் அங்கே தபஸ் செய்தனர். அவர்களுக்காக அங்கே கண்ணபிரான் ஆவிர்ப் பாவம் ஆகி, ராஜ கோபாலனாய் தரிசனம் கொடுக்கிறார். அந்தப் பெருமாளுடைய மஹிமையால் ஹரித்ரா நதி என்னும் புண்ய தீர்த்தம் எல்லா தீர்த்தங்களையும் விட மஹிமை வாய்ந்திருக்கிறது. அதில் பகவான் கோபிகளோடு ஜலக்ரீடை செய்தார். அதனால் அந்த தீர்த்தம் எல்லா பாபங்களையும் போக்க வல்லதாயிற்று.

அரசே! நீர் அங்கே போய் ஸ்நாநம் செய்தால் உம்முடைய பாபம் போய் ராஜ்யம் சேருவீர். உம்முடைய புத்திரன் ஸ்வர்ண சிகாமணி இப்போது ஸந்ததி யில்லாமல் இருக்கிறன்; அவனும் வந்து அங்கே ஸ்நாநம் செய்தால் நல்ல புத்ரன் பிறப்பான்.

**ராஜா**—ஸ்வாமி! அங்கே ஸ்நாநம் செய்ய வேண்டிய முறை யாது? அதற்குள்ள மந்திரம் என்ன?

**யஜ்ஞசீலன்**—அங்கே போய் நீர் ஸ்நாநம் செய்யும். அங்கே வேத வேதாங்கங்கள் கற்ற பிராம்மணர்கள் நிறைந் திருக்கிறர்கள். நீர் அங்கே போனல், அவர்கள் உமக்கு புராண க்ரமமாய் ஸ்நாநம் செய்விப் பார்கள். இடுப்பளவு நீரில் நின்று கொண்டு கிருஷ்ண நாமத்தைச் சொல்லி கிருஷ்ண பகவானைத் தியாநம் செய்து,—"என்னுடைய பாபத்தைப் போக்கி யருளும்"—என்று சொல்லி பிரார்த்தித்து மூன்று தரம் ஸ்நாநம் செய்து, கரையேறி நமஸ்காரம் செய்யும். உடனே உம்முடைய பாபம் போய் விடும்.

இப்படிச் சொல்லி பிராம்மணன் ராஜனை அனுப்பி விட்டான் ராஜனும் புறப்பட்டு, சம்பகாரண்யம் எங்கே யென்று வழி யெல்லாம் கேட்டுக் கேட்டு, பல தேசங்களையும் காடுகளையும் நதிகளையும் கடந்து முஷ்ணரண்யம் என்னும் ஸ்ரீ முஷ்ண க்ஷேத்ரம் போய், அங்கிருந்து காவேரியின் வடகரை போய், சக்ர தீர்த்தம் வழியாக சம்பகாரண்யம் சேர்ந்தான்.

யஜ்ஞசீலன் உபதேசித்த முறையாக அங்கே ஹரித்ரா நதியில் ஸ்நாநம் செய்தான் ராஜா. உடனே அவனுக்கு திவ்ய தேஜஸ் உண்டாயிற்று. பிரதி திநம் ஹரித்ரா நதியில் ஸ்நாநம் செய்து ராஜ கோபாலப் பெருமாளையும் தரிசித்துக் கொண்டு சில நாள் அங்கே இருந்தான். அவனுடைய ராஜ தேஜஸ் அதிகமாய் விளங்கிற்று. அவன் யார்—என்று பலரும் வினவ லானர்கள். அவனுடைய காந்தியைக் கண்டு பலரும் அதிசயித்து ஆலோசித்தார்கள். அப்போது அந் நாட்டை ஆண்டு கொண்டிருந்த சோழ ராஜனுக்கும் அவ்வரச னுடைய ராஜ தேஜஸ் தெரிய லாயிற்று. சோழ ராஜன் வந்து அவனை வணங்கி விசாரித்து, ஸௌராஷ்ட்ர

தேசத் தரசன் என்று அறிந்து தக்கபடி உபசரித்தான். ராஜ சேகரன் ஸௌகர்யமாக அங்கே வஸிப்பதற்கு வேண்டிய தொரு அரமனையையும், ஆட்களையும் பொருட்களையும் ஐசுவரியங்களையும் கொடுத்து ஆதரித்தான் சோழ மன்னவன்.

ராஜ்யத்தை இழந்து வந்தவனை சோழ மன்னவன் ஆதரித்தமைக்கு வியந்து ராஜ சேகரன் தன்னுடைய ராஜ்யத்துக்கு தூதர்களை அனுப்பச் சொன்னான். தூதர்கள் அங்குப் போய் ஸ்வர்ண சிகாமணி என்னும் புதல்வனைக் கண்டு, ஹரித்ரா நதியில் ஸ்நாநம் செய்த மஹிமையால் ராஜன் பைத்தியம் தெளிந்து, ராஜ கோபாலப் பெருமாளிடம் பக்தியோடிருக்கும் விவரத்தைச் சொன்னார்கள். "அரசே! நீங்கள் சீக்கிரம் வந்து என் ராஜ்யத் திலிருக்கும் பிதாவைப் பார்க்க வேண்டும்."—என்று சோழ ராஜன் சொல்லச் சொன்னதாய் தூதர்கள் அறிவித்தார்கள்.

தூதர்கள் சொன்னது கேட்டு, ஸ்வர்ண சிகாமணி பேராநந்தம் அடைந்து, தூதர்களை ஸம்மாநித்து விரைவில் புறப்பட்டான். சதுரங்க ஸைந்யத்தோடும், ஒட்டகை மேல் சுமத்தின அளவற்ற ஐசுவர்யத்தோடும் ஸ்வர்ண சிகாமணி புறப்பட்டு இரண்டு மாத காலத்தில் சம்பகாரண்யம் சேர்ந்தான்; முன்னிலும் மிக்க காந்தியோடு விளங்கும் பிதாவைக் கண்டு வணங்கினான். ராஜ சேகரன் தன் மகனுக்கு தன்னுடைய கதை முழுதையும் சொன்னான், பௌர்ணமி அமாவாஸை திருவோணம்—இந்த மூன்று நாட்களிலும் ஹரித்ரா நதியில் ஸ்நாநம் செய்து பிராம்மணர்களுக்கு சாஸ்திர விதியா யுள்ள பல விதமான தாநங்களையும் கொடுத்தான்.

ஹேமாப்ஜ நாயகி என்று திருநாம முள்ள நாச்சியாருக்கும் ராஜ கோபாலப் பெருமாளுக்கும் பிராகாரம், மண்டபம், கோபுரம்-எல்லாம் கட்டி வைத்து நல்லதோர் தேரும் நிர்மாணித்தான் ராஜ சேகரன். தன் மகனுக்கு மகவு பிறக்க வேண்டு மென்று விரும்பி, யஜ்ஞசீலன் சொன்ன படியே அவனை ஹரித்ரா நதியில் துவாதசாக்ஷர மந்த்ரத்தைச் சொல்லிக் கொண்டே ஸ்நாநம் செய்வித்து, ஸதாசார நியமத்தோ டிருந்து ராஜ கோபாலப் பெருமாளை ஸேவித்து மௌநமா யிருந்து த்யாநம் செய்து பிரார்த்திக்கச் சொன்னான்.

[பெருமாளுடைய வர்ணநமும் பிரார்த்தனை சுலோகங்களும்.]

பெருமாள் குழந்தையாக வந்து ஸ்வர்ண சிகாமணியின் மடியிலமர்ந்து,—"ராஜனே! உனக்குக் குழந்தை பிறக்கும். இந்த ஸந்தாந கிருஷ்ண விக்ரஹத்தை மடியில் வைத்துக் கொண்டு பிரார்த்திப் பவர்களுக்கும் குழந்தை பிறக்கும்."—என்று சொல்லி மறைந்தார்.

சில காலத்தில் ஸ்வர்ண சிகாமணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அங்கேயே இரண்டு வருஷம் குழந்தையோடும் தகப்பனோடும் இருந்து பெருமாளுக்குப் பல கைங்கர்யங்களையும் செய்து சோழ ராஜனிடம் விடைபெற்றுப் புறப்பட்டு ஸௌராஷ்ட்ர ராஜ்யம் சேர்ந்தான் ஸ்வர்ண சிகாமணி.

சம்பகாரண்யம், ஹரித்ரா நதி, ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாள்—இந்த மூவருடைய வைபவம் இப்படியாகவுள்ளது. இந்த மாஹாத்மியத்தைப் படிப்பவர்களும் புண்யவாங்களாவர்.

## ஆறும் அத்யாயம் முடிந்தது

# 7-ம் அத்யாயம்

ஆறு அத்யாயம் முடிய உள்ள கதையை ஸூதர் சொல்லி முடித்தார். அது கேட்ட சௌநகாதி மஹர்ஷிகள் மிகவும் ஸந்தோஷித்து, ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாளுக்காக உள்ள மந்திரத்தையும் அது உண்டான விதத்தையும் சொல்ல வேண்டுமாய் பிரார்த்தித்தார்கள். அதன் பேரில் ஸூதர் சொல்லலானார் :—

கிருஷ்ண பகவானுடைய சரித்ரம் மிக்க ஆச்சர்யமானது. எத்தனை பாவியானாலும் கிருஷ்ண பகவானை தியானித்தால் புண்ய சாலியாவான். கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியமானது துவாதசாக்ஷர மந்த்ரம். அது தான் —

**ஓம் நமோ பகவதே வாஸுதேவாய** என்பது. இது பன்னிரண்டு எழுத்து உள்ளது. இந்த பன்னிரண்டு எழுத்துக்களும் பன்னிரண்டு சூரியர்கள் போல ஜ்வலிக்கின்றன. மணிகள் கோத்த மாலை போல் இந்த அக்ஷரங்களாலான மந்திரம் விளங்குகிறது. மாலையிலுள்ள ஒவ்வொரு மணியும்போல இந்த மந்திரத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் ஜ்வலிக்கிறது. மந்திரத்தை ஜபித்துக் கொண்டு தபஸ் செய்து, மந்திரம் பலிக்க வேண்டுமானால் மந்திரத்தில் தீவிரமான பக்தி இருக்க வேண்டியது அவசியம். இந்த துவாதசாக்ஷர மந்திரத்தின் வைபவமே ஒரு தனி வித்தை; தனி சாஸ்திரம். இதற்கு துவாத சாக்ஷர வித்தை என்று பெயர்.

[மந்த்ர சாஸ்திரத்தின்படி ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள எழுத்துக்களின் சக்தியைச் சொல்லி ஒவ்வொரு எழுத்தின் வைபவம் மந்திரத்தின் உத்பத்தி, பீஜம் முதலானவை

இங்கே 15 சுலோகங்களில் காண்கின்றன. அவை ஸம்ஸ்க்ருத பாஷா ஸம்பந்தமாகையால் தமிழில் எழுதிப் பயனில்லையென்று விட்டிட்டு மேலே போகிறோம்.]

இந்த துவாத சாக்ஷர மந்திரம் நாலு வேதத்தின் ரஹஸ்யமாயிருக்கிறது. ஆசார்யன் உபதேசித்த க்ரமமாய் இந்த மந்த்ரத்தை சிரத்தையோடும் பக்தியோடும் ஜபித்துக் கொண்டிருப்பவன் வைகுண்ட லோகத்தில் விளங்கக் கடவன்.

இந்த மந்திரம் பிரம்மாவுக்கு இதே சம்பகாரண்ய க்ஷேத்ரத்தில் உபதேசம் ஆயிற்று. விஷ்ணு தன்னுடைய புத்ரனை பிரம்மாவுக்கு உபதேசித்தார்; பிரம்மா நாரதருக்கு உபதேசித்தார்; நாரதர் முதலில் பிருகு மஹர்ஷிக்கு உபதேசித்தார்; பிறகு பிரயாகா க்ஷேத்ரத்தில் கோப்ரளய கோபிலர்களுக்கு உபதேசித்தார். இந்த இரண்டு ரிஷிகளும் இந்த துவா தசாக்ஷர மந்திரத்தினால் தங்கள் விருப்பம் நிறைவேறப் பெற்றார்கள்.

இந்த் துவாதசாக்ஷர மந்திரம் போல அஷ்டாக்ஷர மந்த்ரமும் சிறந்தது. அது — **ஓம் நமோ நாராயணாய**—என்பது. அதையும் பிரம்மா முதலானோர் ஜபித்துப் பயன் கண்டார்கள். இந்த இரண்டு மந்திரத்தின் மஹிமையை பிரஹ்லாதன், அத்ரி மஹர்ஷி, வஸிஷ்டர், சுகர், நாரதர்—முதலானோர் நன்கறிவர். சம்பகாரண்ய க்ஷேத்ரத்திலேயே இந்த மந்திரங்களை பாகவதோத்தமர் பலர் ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றை ஜபிக்கிறவர்கள் உலக வாழ்க்கையில் ஸகல ஸௌபாக்யங்களையும் தந தாந்யங்களையும் அடைந்து புத்ரர் பௌத்ரர் முதலான பாக்யங்களையும் பெற்று சரீரம் போன பிறகு வைகுண்ட லோகத்தில் விஷ்ணு ஸாயுஜ்யம் அடைவர்.

இந்த இரண்டு மந்திரத்துக்கும் ஆகர்ஷணம், மோஹநம், ஸ்தம்பநம், மாரணம், உச்சாடநம், வசீகரணம் — என்று ஆறு சக்தி உண்டு. இந்த மந்திரங்களை சாஸ்திர முறைப்படி ஆயிரம் தரம் ஜபிக்கிறவன், அரசர்களையும் தேவர்களையும் தன் பக்கல்

ஆகர்ஷித்துக் கொள்வான் (இழுத்துக் கொள்வான்). நிஷ்காம மாக ஜபித்தாலும் இந்த மந்திரம் பயன் தரும். மொத்தம் ஏழு கோடி மந்திரங்கள் உள்ளன. அவையெல்லாம் புண்ணியத்தைக் கொடுப்பவை. அவற்றுள் மிக மிகப் புனிதமானவை துவாத சாக்ஷர அஷ்டாக்ஷர மந்திரங்கள்.

ஸ்ரீரங்கத்தில் அஷ்டாக்ஷர மந்திரம் விசேஷம். தக்ஷிண துவாரகை என்ற இந்த சம்பகாரண்ய க்ஷேத்ரத்தில் துவாதசாக்ஷர மந்திரம் விசேஷம்.

விஷ்ணுவுக்கு மிகவும் பிரியமான ஸ்தலங்கள் நூற்றெட்டு உள்ளன.

[அவையெல்லாம் இங்கே மூலத்திலுள்ளபடி வாக்கியமாயும் வர்ணமாயுமில்லாமல் வரிசைக் கணக்காக எண்ணிக்கையோடு எழுதப்படுகின்றன. அவற்றில் சில இரண்டு தரம் காண்கின்றன; சில இன்ன விடமென்று நிர்ணயிக்க முடியாமல் இருக்கின்றன. எல்லா க்ஷேத்ரங்களுக்கு முள்ள ஸம்ஸ்க்ருதப் பெயர்களுக்குத் தெரிந்த வரையில் தமிழ்ப் பெயர்களை ஊஹித்து பக்கத்திலேயே குறிப்பிடுகிறோம். இப்போது தெரியாதவற்றைக் கடைசியாக ஒரு அநுபந்தத்தில் தெரிவிக்கிறோம்.

நூற்றெட்டு க்ஷேத்ரங்களின் விவரம் அடுத்த பக்கத்தில் காண்க.]

1. ஜகந்நாதம்
(பூரி)
2. ஸ்ரீ கூர்மம்
3. வராஹம்
4. ஸ்ரீகாகுலம்
5. லோலாத்ரி
[தக்ஷிண ஸமுத்ரத்தருகில்
பாண நதிக் கரையில்]
6. வந மாலா ஸ்தலம்
7. வைகுண்ட கிரி
8. நந்திபுரம் (75)
(நந்திபுர விண்ணகரம்)
9. ஸ்ரீரங்க நகரம் (31)
10. ஸர்ப்ப புரி
(நாகபட்டணம்)
11. அநந்த புரம் (54, 94)
12. கநக கிரி
13. கோவர்த்தநம்
14. அஹோபலம் (பிலமல்ல)
15. பதரீ வநம் (50) [88
16. ஹஸ்தி கிரி (77)
(காஞ்சீபுரம்)
17. சேஷாசலம்
18. வெங்கடாத்ரி
19. பாண்டர கிரியில்
விட்டல ரங்கன் (பாண்டு
ரங்க விட்டலன்)
20. ஸுபர்ண பர்வதம்
(கருடாத்ரி)
21. தோதாத்ரி
(வானமாமலே)
22. மங்களாத்ரி (28)
23. சம்பகாரண்யம் (89)
24. சுவேதாசலம்
(திருவெள்ளறை)
25. ஹிரண்யாத்ரி
26. நமஸ்கார கிரி
27. வ்ருஷ பாத்ரி
28. மங்களாத்ரி (22)
29. வருணாத்ரி
30. ராமாத்ரி
31. ஸ்ரீரங்க விபிநம் (9)
விபிநம். காடு. இது ஏன்?
32. ப்ரமோதபுரம்
33. ஆகாச நகரம்
34. பாதாள நகரம்
(திருவிண்ணகர்)
35. பூர்வ புரம்
36. பக்தி ஸாரம்
(திருமழிசை)
37. பத்மநாபம்
38. அக்நி புரம்
39. சுவேத த்வீபம்
40. ஸ்ரீ சரண்யபுரம்
(சரண்யபுரம் ?)
41. மஹாரண்யம்
42. வர ஸ்தலம்
43. தக்ஷிண காசி
44. கஜ ஸ்தலம் (80)
(கஜேந்திர வரதர் உள்ள
கபி ஸ்தலம்)
45. ஸ்ரீநிவாஸம்
46. தர்ப்ப ஸ்தலம்
[ஸமுத்ராந்தே]
(தர்ப்பசயநம்)
47. ப்ரமர ஸ்தலம் (96)
(திருவண் வண்டூர்)
48. க்ஷீராம்புதி
(திருப்பாற் கடல்)
49. பதரீகாசிரம் (15)
50. பூத ஸ்தாநம்
(ஸ்ரீ பெரும்பூதூர்)
51. மேக புரம்
(கார்வானம்)
52. பக்த ஸாக்ஷி ஸ்தலம்
53. அநந்த சயநம் (11, 94)
தக்ஷிண ஸமுத்ரக் கரையில்

55. ஆதிகேச நாதம் (வ?)
56. கும்பகோணம்
57. அயோத்யை
58. ப்ரயாகை
59. துவாரகை
60. மாயாபுரி
61. அவந்தீ
62. ஹ்ருதய ஸ்தாநம்
63. காயா புரி
64. கங்கை [ஸமுத்ரம் சேரும் இடத்தில்]
65. சக்ர தீர்த்தம்
66. துளஸீ புரம்
67. க்ருத்ர புரம் (திருப்புட்குழி)
68. ப்ர பஞ்ஜநம்
69. நந்தி க்ராமம்
70. சித்ர கூடம்
71. தர்மபுரம்
72. மணிகூடம் (திருமணிக்கூடம்)
73. வியாக்ர புரம் (புலியூர்)
74. க்ருஷ்ணபுரம் (திருக்கண்ணபுரம்)
75. நந்திபுரம் (8) (— விண்ணகரம்)
76. கோஷ்டீ புரம் (திருக்கோட்டியூர்)
77. காஞ்சிபுரம் (16)
78. தஞ்சாபுரி (தஞ்சாவூர்)
79. நைமிசம்
80. வாரணபுரம் (44)
81. வராசிரமம்
82. ஹரிக்ஷேத்ரம் (அரிமேய விண்ணகரம்)
83. குருக்ஷேத்ரம்
84. கோபவதீ புரம்
85. ஸ்ரீ முஷ்ணம்
86. துவாரபுரி
87. அங்குலீயபுரி
88. அஹோபலம் (14)
89. தக்ஷிண த்வாரகை (24) (மன்னார்குடி.) சம்பகாரண்யத்தில் தக்ஷிண த்வாரகை தனி க்ஷேத்ரம்)
90. கடிகாசலம் (கடிகை நகர், சோள ஸிம்ஹபுரம்)
91. கேரள தேசத்திலுள்ளவையும் சேர்ந்து நூற்றெட்டு. ஆழ்வார்கள் பாடினவை 13 போக மற்றை நாலில் குருவாயூர் வர்க்கலை—ஜகந்நாதம் இரண்டு. இன்னும் இரண்டு தெரியவேண்டும்.
92. திருவண் பரிசாரம்
93. திருவாட்டாறு
94. திருவநந்தபுரம் (11, 54)
95. திருச்செங் குன்றூர் — திருச்சிற்றாறு
96. திருவண் வண்டூர் (47)
97. திருவாறன் விளை
98. திருவல்ல வாழ்
99. குட்ட நாட்டுத் திருப் புலியூர்
100. திருக்கடித்தானம்
101. திருக்காட்கரை
102. திருமூழிக் களம்
103. திருவித்துவக்கோடு
104. திருநாவாய்
105. ஜகந்நாதம்
106. குருவாயூர்
107. ?
108. ?

இந்த நூற்றெட்டு ஸந்நிதிகளையும் நினைப்பது, சொல்லுவது, ஸ்நாந காலம் சிராத்த காலங்களில் சொல்லுவது பாபத்தைப் போக்கும். இதைப் படித்தால் எல்லா பாபங்களுக்கும் பிராயச் சித்தமாகும்.

ஸ்நாந மாஹாத்மியம் படிப்பவன் ஸாயுஜ்யம் பெறுவான். ஸ்ரீரங்கம் ஆதி ஸ்தலமாயும் தக்ஷிண த்வாரகை அந்திய ஸ்தல மாயும் விளங்குகிறது. ஆகையால் இரண்டு இடத்துக்கும் ஏற் பட்ட அஷ்டாக்ஷரம் துவாத சாக்ஷரம் என்ற இரண்டு மந்திரங் களையும் அவசியமாய் ஜபிக்க வேண்டும்.

தக்ஷிண த்வாரகையான மன்னார்குடியில் துவாத சாக்ஷர மந்திரத்தை ஜபிக்க வேண்டும்; ஹரித்ரா நதிக்கரையில் நித்யமாக நூற்றெட்டு தரம் ஜபித்தால் தாரித்ர்யம் போய் எல்லா ஐசுவரியங் களும் உண்டாகும்; ராஜகோபாலப் பெருமாளிடம் பக்தி உண் டாகும்; புத்ரனில்லாதவனுக்குப் புத்ர பாக்யம் உண்டாகும்; பணமில்லாதவனுக்குப் பணம் கிடைக்கும்; மூடனும் வித்வா னுவான்; ஊமை வாசாலனுவான்; கன்னிப் பெண்ணுக்கு நல்ல வரன் கிடைப்பான்; மலடி பிள்ளை பெறுவாள்; எதை விரும்பி துவாத சாக்ஷர மந்திரத்தை ஜபித்தாலும் அது கிடைக்கும். ராஜகோபாலப் பெருமாள் எல்லா விருபபங்களையும் நிறைவேற்றிக் கொடுப்பார். யாதொரு பற்றுமில்லாமல் இந்த மந்திரத்தை ஜபிப்பவன் சரீரம் அழிந்தவுடன் வைகுண்ட லோகம் சேருவான். அதிதி பூஜை செய்யாதவனும், ஏகாதசியில் உபவாஸம் இல்லாத வனும், அக்நிஹோத்ரம் செய்யாதவனும் சம்ப காரண்ய வாஸத் தால் சுத்தனுவான். பக்தி இல்லாத அதமர்களும் சம்ப காரண்ய வாஸத்தால் யோகி ஆவார்கள்.

ராஜ கோபாலப் பெருமாளை சம்பகம் முதலான புஷ்பங்களால் அலங்கரித்தால் அவர் மிகவும் உகந்து எல்லா விருப்பத்தையும் தலைக் கட்டுவார்.

நவ ரத்நங்கள் போல சம்ப காரண்யத்தில் நவ தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் ஓரோர் மாஸம் ஸ்நாநம் செய்து கொண்டு ஒரு வருஷம் அங்கே வாஸம் செய்ய வேண்டும்.

## ஏழாம் அத்யாயம் முடிந்தது

# எட்டாம் அத்யாயம்
# நவ தீர்த்த மாஹாத்மியம்

க்ஷேத்ரத்தின் விசேஷமும் மந்த்ரத்தின் விசேஷமும் விவரிக்கப் பட்டது. இனி அங்குள்ள நவ தீர்த்தங்களின் விசேஷம் விவரிக்கப் படுகிறது :

சாஸ்த்ர ரீதியாக நியமமாய் ஸ்நாநம் செய்பவர்கள் மாக மாஸத்தில் (மாசி மாஸத்தில்) ஸ்நாநம் ஆரம்பிக்க வேண்டும்.

முதலில் **ஹரித்ரா நதியில்** ஸ்நாநம் ஆரம்பித்து, பிறகு மற்றை எட்டு தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்யக் கடவது. ஹரித்ரா நதியில் துவாத சாக்ஷர மந்த்ரத்தையாவது அஷ்டாக்ஷர மந்த்ரத்தை யாவது சொல்லிக் கொண்டு ஸ்நாநம் செய்பவன் முக்தி யடைவான். மாக ஸ்நாநத்துக்கு அங்கமாக சிலதாநங்களும் செய்யவேண்டும். ஸூர்யோதயத்துக்கு முன்பே எழுந்து சாஸ்த்ர விதிப்படி ஸந்த்யா வந்தநம் செய்து கையில் பவித்ரம் தரித்தபடியே ஹரித்ரா நதியில் மாக சுத்த ப்ரதமை முதல் ஸ்நாநம் செய்து, ஒரு திதிக்கு ஒவ்வொரு வஸ்துவாக வேத வித்தமர்களுக்கு தாநம் செய்யும் படி சாஸ்த்ரம் விதிக்கிறது. திதிகளின் வரிசைப்படி தாநம் செய்ய வேண்டிய வஸ்துக்களின் விவரமாவது :

1 தாம்பூலம்
2 வாழைப் பழம்
3 தேங்காய்
4 பலாப் பழம்
5 நெல்லிக் காய்
6 கிழங்கு
7 இஞ்சி
8 பூசணிக் காய்
9 பால்
10 தயிர்
11 நெய்
12 வெண்ணெய்
13 மஞ்சள்
14 கோரோசனை
15 தயிர் சாதம்
(பூர்ணிமையில்)

16 சந்தநம்
17 பயறு
18 உளுந்து
19 துவரை
20 நாரத்தம் பழம்
21 எலுமிச்சை
22 எள்ளு (தாம்ர பாத்ரத்
23 அரிசி (தில்
24 நெல்
25 கோதுமை
26 கடலை
27 வஸ்த்ரம்
28 கம்பளி
29 கோபீ சந்தநம்
30 திருமண்
(அமாவாஸ்யையில்)

வேத வித்தமரான பிராம்மணர்களுக்கு ஒவ்வொரு நாளும் மந்த்ர பூர்வமாக தக்ஷிணையோடு இப்படி தன் சக்திக் கேற்றபடி தாநம் செய்பவன் நல்ல ஐசுவரியத்தோடு ஸுகமாயிருப்பான். ஹரித்ரா நதியில் மாக ஸ்நாநம் முடிந்த பிறகு அந்த தாநம் செய்வது விசேஷம். வேறு எந்த தாநம் செய்ய நேர்ந்தாலும் அதை ஹரித்ரா நதியில் செய்வது உத்தமம். ஹரித்ரா நதியில் நித்யமாகவே ஸ்நாநம் செய்வது நலம். எல்லா மாஸத்திலும் எல்லா திதிகளிலும் அதில் ஸ்நாநம் செய்ய வேண்டும். பூர்ணிமை அமாவாஸ்யை சந்த்ர க்ரஹணம் ஸூர்ய க்ரஹணங்களில் முக்கிய மாக ஹரித்ரா நதியில் ஸ்நாநம் செய்ய வேண்டியது அவசியம். மாக ஸ்நாநத்தின் கடைசி நாள் ஹரித்ரா நதிக்கு நறு மணம் மிக்க மலர்கள் சந்தநம் கஸ்தூரி கோரோசநம் கர்ப்பூரம் முதலியவை ஸமர்ப்பிக்க வேண்டும். மாக மாஸம் முழுதும் ஸ்நாநம் செய்ய முடியாத போனால், மூன்று நாளாவது ஸ்நாநம் செய்து முப்பது நாளுக்கு முள்ள தாநங்களைச் செய்வது நலம்.

மற்றை எட்டு தீர்த்தங்களிலும் எட்டு மாஸத்தில் ஸ்நாநம் செய்ய வேண்டும். கோபில கோப்ரளய மஹர்ஷிகளுக்காக பகவாந் சம்பகாரண்ய க்ஷேத்ரத்தை பிருந்தாவநமாயும் ஹரித்ரா நதியை கோமதீ நதியாயும் உகந்தான். மாக மாஸம் தவிர மற்றை மாஸங்களிலும் ஹரித்ரா நதியில் ஸ்நாநம் செய்யலாம். பால்குந மாஸத்தில் இங்கே ஸ்நாநம் செய்து தாநம் கொடுக்க வேண்டும். பெருமாளுக்கு பிரம்மா மஹோத்ஸவம் நடத்தி ஹரித்ரா நதியில் தான் அவபிருத ஸ்நாநம் செய்து வைத்தான். பால்குந மாஸத்தில் இங்கே கோபிலர் கோப்ரளயர்—என்னும் ரிஷிகள் ராஜ கோபாலப் பெருமாளுக்கு பதினெட்டு நாள் உத்ஸவம் துவாதசாக்ஷர மந்த்ரத்தைக் கொண்டு பாஞ்ச ராத்ர ஆகம விதிப்படி செய்து வைத்தார்கள். ஹரித்ரா நதியில் பால்குந மாஸத்தில் ஸ்நாநம் செய்பவனுக்கு பிரம்ம லோகத்தில் வாஸம் கிடைக்கும்.

பிறகு வைசாக பூர்ணிமையில் உத்ஸவம் செய்து வைத்து, அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் வந்து சேரும்படியான வைபவமுள்ள ஹரித்ரா நதியில் ஜல க்ரீடை மஹோத்ஸவம் ரிஷிகள் நடத்தியதால் வைசாக ஸ்நாநம் இங்கே விசேஷம்.

காவேரியில் துலா ஸ்நாநம் விசேஷம். ஹரித்ரா நதியும் காவேரியே யாகையால் இங்கே துலா ஸ்நாநம் ஐப்பசியில் செய்ய வேண்டியது.

மாகம், பால்குநம், வைசாகம், துலா—இந்த நாலு மாஸம், அமாவாஸை பூர்ணிமை கிரஹண காலம் — இவற்றோடு ரோஹிணி திருவோணம் — என்ற இரண்டு நக்ஷத்ரங்களிலும் ஸ்நாநம் செய்ய வேண்டும். இந்த நக்ஷத்ரங்களில் ஸ்நாநம் செய்தால் க்ருஷ்ண பகவானுக்கு ப்ரியமாயிருக்கும்.

2. **துர்வாஸ தீர்த்தம்:** ஸ்வாயம்புவ விமாநத்துக்கு மேற்கில் வில்லடி தூரத்திலுள்ள இந்த தீர்த்தத்தில் ஆனி மாஸத்தில் ஸ்நாநம் விசேஷம். இங்கே சனிக்கிழமையில் ஸ்நாநம் செய்வதும் மிக்க விசேஷமாகும். குரு நிந்தை யென்னும் மஹா பாபத்தைப் போக்க வல்லது துர்வாஸ தீர்த்த ஸ்நாநம். இங்கே அசுவத்த விருக்ஷம் நிறைந்திருக்கிறது. துர்வாஸ மஹர்ஷிக்கு இங்கு பகவாந் வரம் கொடுத்ததால் துர்வாஸ தீர்த்தம் என்று பெயராயிற்று. இங்கே பகவத் கீதை பாராயணம் செய்வது சிறந்த புண்யமாகும்.

3. **க்ஷீராப்தி (திருப்பாற் கடல்):** என்னுச் செடி நிறைந்த இடம் இது. இங்கே (மகரம்) தை மாஸத்தில் ஸ்நாநம் விசேஷம். லக்ஷ்மி இங்கே தபஸ் செய்தாள். இதில் வெள்ளிக்கிழமைகளில் ஸ்நாநம் செய்வது உத்தமம். இங்கே லக்ஷ்மீ நாராயணப் பெருமாளுக் கெதிரில் ஸ்நாநம் செய்து கோ தாநம் கொடுப்பவனுக்கு லக்ஷ்மீ கடாக்ஷம் உண்டாகும். அவன் அரசனுவான்.

4. **கோபிகா தீர்த்தம்** க்ஷீராப்தி என்னும் திருப்பாற் கடல் தீர்த்தத்துக்கு தென் கிழக்கில் இருக்கிறது. இங்கே கந்யா மாஸத்தில் (புரட்டாசியில்) ஸ்நாநம் செய்வது விசேஷம். கோப கன்னிகைகள் க்ருஷ்ணனைத் தனியாக அழைத்து ஜல க்ரீடை பண்ணிக் களித்த இடம் இதுவாதலால் கோபிகா தீர்த்தம்—என்று பெயராயிற்று. புதன்கிழமைகளில் க்ருஷ்ண ஷடக்ஷர மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டு க்ருஷ்ணனை த்யாநித்து இங்கே ஸ்நாநம் செய்பவன் ஸுகியாக வாழ்வான். சந்தந மரங்கள் நிறைந்த இந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து பள்ளிக் கட்டில் தாநம் கொடுக்கத் தக்கது.

5. **ருக்மிணி தீர்த்தம் :** கோபிகா தீர்த்தத்துக்கு மேற்கில் ருக்மிணி தீர்த்தம் இருக்கிறது. இங்கே அசுவத்தம் (அரச மரங்கள்) விசேஷம். ஆடி மாஸத்து பூர்வ பல்குனி நக்ஷத்ரம் ஆடிப் பூரம் லக்ஷ்மியினுடைய நக்ஷத்ரமாகிறது. ஆடி மாஸமும் ஆடிப் பூரமும் ஸோம வாரங்களும் இங்கே ஸ்நாநத்துக்கு விசேஷ காலங்கள். லக்ஷ்மீ மந்த்ரத்தைச் சொல்லிக் கொண்டு இங்கே ஸ்நாநம் செய்து கந்யா தாநம் கொடுப்பது மிக்க புண்யமாகும். இங்கே ஸௌமங்கலி களுக்கு குங்குமம் கொடுப்பதும் மிக்க விசேஷம்.

6. **அக்நி குண்ட தீர்த்தம்:** ருக்மிணி தீர்த்தத்துக்கு தெற்கில் அக்நி குண்ட தீர்த்தம். இதற்கு **கோப்ரளய தீர்த்தம்** என்ற பெயரும் உண்டு. இங்கே கார்த்திகை மாஸம் முழுதும் ஞாயிற் றுக்கிழமைகளிலும் ஸ்நாநம் விசேஷம். ஸ்நாநம் செய்து தீப தாநமும், அகரு (அகில் கட்டை) தாநம் கொடுப்பதும் மஹா புண்யமாகும். பலாச விருக்ஷங்கள் (புரச மரம்) நிறைந்த இடம் இது. இங்கே யாகம் கூட செய்யத் தகும். இந்த தீர்த்தத்தில் ஔபாஸநம் ஒரு தடவையாவது செய்தால், அப்தோர் யாமம்— என்ற க்ரியை செய்ததற்கு ஸம மாகும்.

7. **க்ருஷ்ண தீர்த்தம்** அக்நி குண்ட தீர்த்தத்துக்கு வட மேற்கில் இருக்கிறது. ஸ்வாயம் புவ விமாநத்தில் விழும் தீர்த்தம் முழுதும் க்ருஷ்ண தீர்த்தத்தில் நிரம்புகிறது. சம்பக வ்ருக்ஷம் (செண்பக மரமும்) துளஸி வநமும் நிறைந்த இடம் இது. [இந்த இடத்தில் தான் சம்பக விருக்ஷம் ப்ரஸ்தாவிக்கப் படுகிறது. இது வரை இந்த சம்ப காரண்ய மாஹாத்மியத்தில் சம்பக விருக்ஷத்தைப் பற்றி யாதுமே சொல்லவில்லை. இந்த கிருஷ்ண தீர்த்தத்திலுள்ள சம்பக விருக்ஷத்தினால் தான் சம்ப காரண்யம் — என்ற பெயர் உண்டாயிற்று போலும்.]

மார்கழி மாஸத்தில் இங்கே ஸ்நாநம் செய்வது விசேஷம். ஷோடச தாநம் என்னும் பெரிய தாநம், பதினாறு வஸ்துக்களைக் கொடுக்கும் தாநம், இந்த தீர்த்தத்தில் செய்வது விசேஷம்.

நமோ ப்ரஹ்மண்ய தேவாய, கோப்ராஹ்மண ஹிதாய ச ;
ஜகத் திதாய க்ருஷ்ணாய, கோவிந்தாய நமோ நம :

என்னும் மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டு மார்கழி மாஸத்தில் கிருஷ்ண தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்ய வேண்டும். மாஸாநாம் மார்கசீர்ஷோஸ்மி—மாஸங்களுக்குள் நான் மார்கழி மாஸமாயிருக்கிறேன்—என்று கண்ணன் கீதையில் அருளிச் செய்தானுகையால் மார்கழியில் க்ருஷ்ண மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டு க்ருஷ்ண தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தால் விசேஷ பலன் உண்டு.

[8, 9-**சங்க சக்ர தீர்த்தங்கள்** : சங்கு போலிருப்பதால் சங்க தீர்த்தம் என்றும் சக்ரம் போலிருப்பதால் சக்ர தீர்த்தம்—என்றும் பெயராயிற்று.]

8. **சங்க தீர்த்தம்** ஸ்வாயம்புவ விமாநத்துக்கு தெற்கில் இருக்கிறது. (சிராவணம்) ஆவணி மாஸத்தில் இங்கே ஸ்நாநமும் ரத்ந தாநமும் அஷ்டாக்ஷர மந்த்ர ஜபமும் விசேஷம்.

9. **சக்ர தீர்த்தம்** ஸ்வாயம்புவ விமாநத்துக்கு வடக்கிலிருக்கிறது. இங்கே (சைத்ர) சித்திரை மாஸத்தில் ஸ்நாநமும் ரத்ந தாநமும் அஷ்டாக்ஷர மந்த்ர ஜபமும் விசேஷம்.

ஒவ்வொரு தீர்த்தத்துக்கும் விருக்ஷம் ரிஷி தேவதை முதலான பல முக்கியங்கள் உண்டு. விருக்ஷம் முன்பே சொல்லப்பட்டது. ஒவ்வொரு தீர்த்தத்திலுள்ள ரிஷிகளின் விவரமாவது :—

[இங்கே தீர்த்த வரிசை மாறியிருப்பதால் முதலில் சொன்ன வரிசை பிராக்கட்டில் காட்டப் படுகிறது.]

1. ஹரித்ரா நதிக்கு பிருகு
2. க்ருஷ்ண தீர்த்தத்துக்கு நரன் (7)
3. திருப்பாற் கடலுக்கு நாராயணன்
4. சங்க தீர்த்தத்துக்கு கோபிலர் (8)
5. ருக்மிணி தீர்த்தத்துக்கு ஆநந்தர் கர்த்தமர், ஸௌர்யன், அக்நி பிக்ஷிதர்
6. துர்வாஸ தீர்த்தத்துக்கு துர்வாஸர் (2)
7. அக்நி குண்ட தீர்த்தத்துக்கு ஸாக்ஷாத் யஜ்ஞ புருஷன், கோப்ரளயர், நாரதர். (6)
8. கோபிகா தீர்த்தத்துக்கு உத்தவர் (4)
9. சக்ர தீர்த்தத்துக்கு சொல்ல வில்லை.

ஓவ்வொரு தீர்த்தத்துக்கு பகவானுடைய திவ்யாயுதம் ஒன்று ரக்ஷகமாயிருக்கும். அதன் விவரமாவது :

எல்லா தீர்த்தங்களிலும் த்வாரகா நாதனுன கிருஷ்ணனே ரக்ஷகனுயிருக்கிருன்.

1. அவன் தெற்கிலும் வடக்கிலும் தன்னுடைய சங்கம் (8)
2. சக்ரம்—இரண்டு ஆயுதங்களையும் வைத்திருக்கிருன். (9)

அவனுடைய மூவளைவாயுள்ள கோல் இடைப் பெண்களுக்கு மிக்க ஆநந்தத்தைக் கொடுத்தது. கோலான அந்த ஆயுதம் அங்கே கண்ணில் புலப்படாமலே இருக்கிறது. அது பூதம் பிரேதம் பிசாசுகளையும் அஸுரர் ராக்ஷஸர் முதலானுரையும் தண்டிக்க வல்லது.

3. ஸர்வேசுவரனுடைய **நந்தகம்** என்னும் கத்தி "நாந்தக வாள்" நிசா தீர்த்தம் என்னும் ஹரித்ரா நதி தீர்த்தத்தில் இருக்கிறது. (1)
4. சார்ங்க வில் திருப்பாற் கடல் தீர்த்தத்தில் (3)
5. **தாமரை** கோபிகா தீர்த்தத்தில் (4)
6. **ஸ்ருவம்** அக்நி குண்டத்தில்
7. கௌமோதகி என்னும் கெதை ருக்மிணி தீர்த்தத்தில்; (5)
8. க்ருஷ்ண பக்தி மயமாயிருக்கும் **சக்தி** ஆயுதம் க்ருஷ்ண தீர்த்தத்தில் (7)
9. ஹலம்-கலப்பை, முஸலம்-உலக்கை — இந்த இரண்டு ஆயுதங்களும் துர்வாஸ தீர்த்தத்தைப் பாதுகாக்கின்றன. (2)

அஸுரர்களை தண்டிப்பதற்காக ஆயுதங்கள் ஒவ்வொரு தீர்த்தத்திலும் இருக்கின்றன.

இப்படி நவ தீர்த்தங்களுள்ள இந்த க்ஷேத்ரம் மிகப் புண்ணியமானது; எல்லாருக்கும் மோக்ஷம் கொடுக்க வல்லது. க்ருஷ்ண-ப்ரீதி—என்று சொல்லி எல்லா தர்மங்களைக் கொடுக்க வேண்டும்; ஏதாவது கொஞ்சம் அவரவர் சக்திக்குத் தக்கப்படி தாநம் செய்ய வேண்டுமேயன்றி ஒன்றும் கொடாமல் சூந்ய மாக்கக் கூடாது.

சௌநக முநிவரே ! ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாளுக்கு ஏற்பட்ட வஸந்தோத்ஸவம் முதலியவற்றின் விவரம் சொல்லுகிறேன். கேளும்.

ஆதியில் பிரம்மா தன்னுடைய பிரம்ம கல்பத்தில் க்ருத யுகத்தில் தனக்கு ப்ரத்யக்ஷமான விஷ்ணுவுக்கு, தான் உபதேசம் பெற்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தின்படி பங்குனி அவிட்டத்தில் உத்ஸவம் ஆரம்பித்து, கருடனைக் கொடியில் ஏற்றி, எல்லா தேவர்களையும் வருவித்து, கல்யாணோத்ஸவமும், ரோஹிணியில் ரத யாத்ரையும், அவபிருத ஸ்நாநமும் செய்து வைத்தான். எல்லா தேவதைகளும் வந்து தரிசித்து பெருமானை ஸ்தோத்ரம் செய்து தங்களுக்குத் தேவையான வரங்களைப் பெற்றுப் போயினர்.

த்ரேதா யுகத்தில் லக்ஷ்மி, பிருகுவின் பிரீதியால் தனக்கு வரம் கொடுத்த பெருமாளுக்கு புஷ்ய மாஸம் (தை மாஸம்) சுக்ல பக்ஷம் புஷ்ய நக்ஷத்ரத்தில் புஷ்ப ராகத்தாலும் புஷ்பங்களாலும் அலங்கரித்த ரதோத்ஸவம், அதற்கு ஒன்பது நாள் முன்பே ரேவதியில் துவஜாரோஹண பூர்வமாக ஆரம்பித்து அவபிருத ஸ்நாநமும் செய்து வைத்தாள்.

பிறகு துவாபர யுகத்தில் அக்நி பகவாந் தனக்கு ப்ரத்யக்ஷமான ராஜ கோபாலப் பெருமாளுக்கு வஸந்த ருதுவில் சித்திரா பூர்ணியில் சித்திரை உத்ஸவம் செய்து வைத்தான்.

பிறகு அதே யுகத்தில் பிருகு மஹர்ஷி கிரீஷ்ம ருது ஜ்யேஷ்ட ஆனி மாஸத்தில், பூர்ணிமையில் ஹரித்ரா நதியில், தெப்பத் திருநாள் நடத்தி வைத்தார்.

துவாபர யுகத்தின் முடிவில் கோபில கோப்ரளய மஹர்ஷிகள் வைகாசி விசாகம் வெள்ளிக்கிழமையில் ரதோத்ஸவமாம்படி ராஜ கோபாலப் பெருமாளுக்கு உத்ஸவமும் ஹரித்ரா நதியில் அவபிருதமும் நடத்தி உகப்பித்து மோக்ஷம் பெற்றார்கள்.

கலி யுகத்தில் ராஜசேகர ராஜன் துலா மாஸத்தில் தீபாவளி முதலான உத்ஸவம் செய்து வைத்தான். மற்றை அரசர்களும் இந்தப் பெருமாளுக்கு உத்ஸவங்கள் உண்டாக்கினர்.

ஸ்ரீ ராஜ கோபால எம்பெருமான் எல்லாருடைய மநோரதங்களையும் நிறைவேற்றிக் கொடுத்த சம்பகாரண்ய க்ஷேத்ரத்தில் விளங்குகிறான்.

இப்படி இந்த மாஹாத்மியத்தை ஸூதர் சௌநகாதி மஹர்ஷிகளுக்கு நைமிசராண்யத்தில் சொல்லி முடித்தார். இந்த மாஹாத்மியம் படித்தால் எல்லா மங்களங்களும் கை கூடும். சௌநகர் முதலான ரிஷிகள் ஸூதரை நமஸ்காரம் செய்து நன்றி செலுத்தினார்கள்.

**எட்டாம் அத்யாயம் முடிந்தது.**

## த்யாந சுலோகம்

**[ஐந்தாம் அத்யாயம் கடைசியில்]**

---

தேதி பகவாந் தேவோ, கோபில ப்ரீதி காரணாத்
தாடங்க குண்டலாதீந், த்ருத்வா தேவோ வ்யரோசத
தாத்ருசம் தேவதேவேசம் ஸநகாத்யா: ஸமீக்ஷ்ய ஹி
அந்தரிக்ஷே ஸ்திதா: ஸர்வே வர்ணயந்தி தாதக்ருதிம்

தம்மில்ல நிசயே நைவ கேச பந்த க்ருதேந ச
பஃச்சாதீஷத் க்ருதோச்சேந சூடா கேசேந ரஞ்ஜிதம்

ஸுதாகர ஸமாநாஸ்யம், கருணா பூர்ண லோசநம்
மந்தஸ்மிதோல்லஸத் குந்த தந்தபந்து ப்ரியங்கரம்

மூர்த்திமந் முகுராகார கண்டஸ்தல விராஜிதம்
தில ப்ரஸூந சாம்பேய கலிகாகார நாஸிகம்

கம்பு க்ரீவம் மஹோரஸ்கம் கரிராட்துண்ட பாஹுகம்
தாடங்க குண்டல தரம் வாமதக்ஷிண கர்ணயோ :

ருக்மிணீ ஸத்ய பாமாப்யாம் தக்ஷிணோத்தர பார்சுவத:
விராஜமாந வேத்ரேண தக்ஷிணே த்ரிணதேந வை

விலஸத் ஸத்ய பாமாம்ஸ ந்யஸ்த வாம கராம்புஜம்
ஈஷத் பங்கீக்ருத கடிம் ஏக சேலாவ்ருதம் சுபம்
ரம்போரும் காஹளாகார ஜங்கா யுக்மேந சோபிதம்
ஈஷத் குஞ்சித வாமாங்க்ரிம் த்ருட விந்யஸ்த தக்ஷிணம்
பாதாம்புஜ லஸந் மஞ்ஜு மஞ்ஜீர கடகாஞ்சிதம்
ஏதாத்ருசாக்ருதிம் தேவம் ஸாக்ஷாந் மந்மத மந்மதம்

ஸ்ரீ வித்யா ராஜகோபாலம் ப்ரணம்ய ஸநகாதய: [ப்ரபேதிரே
ப்ரஹ்மணா ஸஹிதா : ஸர்வே ஸ்வம் ஸ்வம் லோகம்

# ராஜ கோபாலன் வடி வழகு

இந்த வடிவழகு முழுதும் உத்ஸவ எம்பெருமான் விஷயமேயன்றி மூலவருடைய தல்ல. மூலவர் திருநாமம் வாஸுதேவன்; அவர் நாலு திருக்கைகளுடன் எழுந்தருளியிருக்கிறார்.

வலக்கையில் மாடு மேய்க்கும் கோலும் ஸத்யபாமைப் பிராட்டியின் தோளில் வைத்த இடக்கையுமாய் நிற்கிறார் உத்ஸவர்:

பின்னே விரித்த குழலும்
முன்னே முடிந்த கொண்டையும்
மதி யொத்த முகமும்
கருணை பொங்கிய கண்ணிணையும்
பூத்த புன்முறுவலில் தும்பைப்பூ வன்ன பற்களும்
கண்ணாடிபோல் மின்னும் கன்னமும்
எள்ளுப் பூவும் சண்பக மொட்டும் போன்ற மூக்கும்
சங்கு போல் வரி படிந்த கழுத்தும்
அகன்ற மார்பும், ஆனைக் கை போல் பருத்த கையும்
ஒரு காதில் தாடங்கமும் ஒரு காதில் குண்டலமும்
வல வருகில் ருக்மிணியும் இட வருகில் சத்திய பாமையும்
வலக் கையில் மூ வளைவான பிரம்பும்
சத்திய பாமையின் தோளில் வைத்த இடக் கையும்
சிறிதே சாய்ந்த இடையும் ஒற்றைத் துணியும்
வாழைபோல் பருத்து மழ மழப்பான துடையும்
எக்காளம் போல் மேலே பருத்துக் கீழே குறுகின காலும்
அழுத்தி நின்ற வலக் காலும்
சிறிதே சாய்த்த இடக் காலும்
சதங்கைகளணிந்த திருவடியும்
மன்மதனுக்கும் மன்மதனாய் விளங்கும்
ராஜ கோபாலப் பெருமாளே நமக்குத் தஞ்சம்.

ஸ்ரீ:

# ஸ்ரீ ராஜ கோபால ஸ்வாமி அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம்

1. ஸ்ரீ க்ருஷ்ணாய நம:
2. ராஜ கோபாலாய
3. ஸ்ரீகாந்தாய
4. தேவகீ ஸுதாய
5. ஸ்ரீ சம்பகேச்வராய
6. ஸ்ரீமதே
7. கோவிந்தாய
8. கருடத்வஜாய
9. வாஸு தேவாய
10. அரவிந்தாக்ஷாய
11. சம்பகாரண்ய நாயகாய
12. ருக்மிணீ வல்லபாய
13. விஷ்ணவே
14. கோபிலாபீஷ்ட தாயகாய
15. கேசவாய
16. கேசி ஸம்ஹாரிணே
17. காளிந்தீ ரமணாய
18. ஹரயே
19. ஸ்வாயம்புவவிமாநஸ்தாய
20. ஸதா கோப்ரளயார்ச்சிதாய
21. தக்ஷிண த்வாரகா நாதாய
22. ஸ்ரீ சம்பக வநாச்ரயாய
23. ஹரித்ரா தடிநீ தீர விலாஸிநே
24. விச்வ வந்திதாய
25. நந்த ஸூநவே
26. யது ச்ரேஷ்டாய
27. நாரத ஸ்துத வைபவாய
28. ராஜசேகர ராஜேந்த்ர க்ருதக்நத்வ விமோசகாய

ஓம்

29. ராதா பயோதராஸக்தாய
30. ராஜசேகர பூஜிதாய
31. மாதவாய
32. மதுரா நாதாய
33. மஹா மாயாய
34. அக நாசநாய
35. நாராயணாய
36. ஹ்ருஷீகேசாய
37. ஸ்ரீதராய
38. கோபிகா ஸ்துதாய
39. தாமோதராய
40. ஜகந்நாதாய
41. பகவதே
42. புருஷோத்தமாய
43. உரு காயாய
44. த்ரிலோகேசாய
45. வாமநாய
46. மது ஸூதநாய
47. த்ரிபங்கி மதுராகாராய
48. பரமாத்மநே
49. த்ரிவிக்ரமாய
50. லாவண்ய தாம்நே
51. நித்ய ஸ்ரீயை
52. ஸத்ய பாமா ப்ரியாய
53. வேத்ர ராஜித ஹஸ்தாக்ராய
54. வேணுநாத விநோதவதே
55. ஸத்ய பாமாம்ஸ விந்யஸ்த பாணி யுக்ம ஸரோருஹாய
56. மந்தஸ்மித முகாம்போஜாய

57. மங்களாலய விக்ரஹாய
58. ஸ்ரீ சம்பக மஹீபாலாய
59. விஜய ப்ரிய ஸாரதயே
60. யசோதாநந்த ஜநகாய
61. ததி பாண்ட ப்ரபேதநாய
62. ததிபிந்து லஸத் காத்ராய
63. நவநீதாபஹாராய
64. உலூகல நிபத்தாங்காய
65. முகுந்தாய
66. முக்தி தாயகாய
67. ஆச்சர்ய மூர்த்தயே
68. ஆர்த்தி க்நாய
69. நந்தகோப விமோசகாய
70. பக்த ப்ரியாய்
71. பக்த வச்யாய
72. ப்ருகு ஸேவ்யாங்க்ரி [பங்கஜாய
73. வத்ஸதாநவ ஸம்ஹார்த்ரே
74. வத்ஸலாய
75. வத்ஸ பாலகாய
76. கோவர்த்த நாசல தராய
77. கோபாலாய
78. கோகுலேச்வராய
79. ஆபீர காமிநீ காந்தாய
80. பாலாய
81. சகட பேதநாய
82. வேத்ர தாரிணே
83. த்விஜாத்யக்ஷாய
84. வாஸுதேவ புரீச்வராய
85. பர்ஹாவதம்ஸ ருசிராய
86. ப்ருந்தாவந ரதோத்ஸு [காய
87. த்ரிணதாக்ர மஹா ரத்ந சோபி தண்ட லஸத் கராய
88. ஹாரபாஸ கதி ச்லாக்யாய
89. சாம்பேய குஸும ப்ரியாய
90. கமலார்ச்சித பாதாய
91. கமலாஸந வந்திதாய
92. ரக்தாப்ஜ நாயிகா நாதாய
93. ராஸக்ரீடா ரதோத்ஸு [காய
94. ஹரித்ரா ஸிந்து ஸலில க்ரீடாஸக்த வதூவிடாய
95. வேணுவாத்யைக ரஸிகாய
96. தேவாய
97. வைணவிகோத்தமாய
98. காநோத் பூதாஷ்ட [சேஷ்டாய
99. ஸித்தநாரீ பரிஷ்க்ருதாய
100. ப்ரணயி ஸ்கந்த நிக்ஷிப்த [புஜ மாலா விராஜிதாய
101. ஸம்ப்ராப்த திவ்ய ஸ்த்ரீ [பாவாய
102. முக்தஸங்க வரப்ரதாய
103. பீதாம்பராய
104. கநச்யாமாய
105. வநமாலிநே
106. ஜநார்த்தநாய
107. சம்பகாரண்ய நிலயாய
108. தக்ஷிண த்வாரகேச்வ [ராய

ஓம் ஸ்ரீ ருக்மிணீ ஸத்ய பாமா ஹேமாப்ஜ நாயிகா ஸமேத ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமிநே நம:
ஸ்ரீ சம்பகேசாய நம:

# ஸ்ரீ செங்கமலத் தாயார் அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம்

1. ஸ்ரீயை நம:
2. பத்மாயை
3. பத்ம நிலயாயை
4. பத்மாக்ஷ்யை
5. பத்ம வாஸிந்யை
6. பத்மாஸநாயை
7. ரமாயை
8. ராமாயை
9. லக்ஷ்ம்யை
10. ராஜீவ லோசநாயை
11. நந்தாயை
12. பத்மா வத்யை
13. திவ்யாயை
14. வரதாயை
15. காம ரூபிண்யை
16. ஸுநந்தாயை
17. நந்திந்யை
18. நந்த்யாயை
19. போதாயை
20. ஸத்ய வாதிந்யை
21. மஹா லக்ஷ்ம்யை
22. மஹா மாயாயை
23. மஹா பாதகநாசந்யை
24. மஹா ஸ்ரீயை
25. மாலிந்யை
26. பத்ராயை
27. ஸுபத்ராயை

ஓம்

28. ஸுர வந்திதாயை நம:
29. மஹஸே
30. வித்யுதே
31. ப்ரபாயை
32. வேத்யாயை
33. விநதாயை
34. விமலாயை
35. ஸத்யை
36. தரண்யை
37. தாரிண்யை
38. ரோதஸே நம:
39. வித்யுந் மாலாயை
40. விலாஸிந்யை
41. சந்த்ரிகாயை
42. சந்த்ரவதநாயை
43. சந்த்ர ரேகாயை
44. திவாயை
45. நிசாயை
46. காயத்ர்யை
47. ஸுரதாயை
48. வித்யாயை
49. திவ்யாலங்காரபூஷிதாயை
50. அதித்யை
51. தித்யை
52. மாயாயை
53. மஹா போகாயை
54. மஹா பலாயை

ஓம்

55. வாந் தேவ்யை நம:
56. வஸுதாயை
57. தீவ்ராயை
58. சாந்தாயை
59. பிரம்ம பாவம்கதாயை
60. கௌர்யை
61. கோதாவர்யை
62. கங்காயை
63. கோமத்யை
64. விந்த்ய வாஸிந்யை
65. ஜடிலாயை
66. சண்டிகாயை
67. ப்ராஹ்ம்யை
68. வைஷ்ணவ்யை
69. தண்ட தாரிண்யை
70. ஸௌதாமந்யை
71. ஸதா பத்ராயை
72. சித்ராயை
73. நாராயண்யை
74. ரத்யை
75. வாமாயை
76. வலாஹகாயை
77. தேவ்யை
78. வேத வேத்யாயை
79. வர ப்ரதாயை
80. பலாக்யை
81. வாமநாயை
82. பூத்யை

ஓம்

83. ஸ்துதயே நம:
84. ஸ்துத்யாயை
85. ஸரஸ்வத்யை
86. ஸீதாயை
87. வேகவத்யை
88. மேதாயை
89. த்ரௌபத்யை
90. ரத்ந மாலிந்யை
91. ரத்நாவள்யை
92. ஸதோதாராயை
93. ஸ்ரீ தேவ்யை
94. ஸாகராத்மஜாயை
95. மாதவ்யை
96. மதுரா நாதாயை
97. மகரந்தாயை
98. மதாலாஸாயை
99. காளிந்த்யை
100. காமுக்யை
101. காள்யை
102. வாருண்யை
103. விக்ந நாசந்யை
104. தேவ தூத்யை
105. மஹா விபூத்யை
106. பாரத்யை
107. பாமிந்யை
108. சிவாயை

ஓம் ஸ்ரீ சம்பக லக்ஷ்ம்யை நம:

ஓம் ஸ்ரீ ரக்தாப்ஜ நாயிகாயை நம:

## ஸ்ரீ வித்யா ராஜகோபாலன்

பெருமாளுக்கு இப்படித் திருநாமம் இரண்டு மூன்று இடத்தில் காண்கிறது. ஸ்ரீ வித்யா—என்று ஒரு மந்த்ரம் உண்டு. அதற்கு ஸம்பந்தமுள்ள பெருமாள் என்று அர்த்தமில்லை. ஸ்ரீ என்பதை உபசாரச் சொல்லாக்கி வித்யா ராஜ கோபாலன் என்று அர்த்தம். இப்படித் தான் பெயர் வரக் காரணம் என்னவென்ருல், பெரியோர்களிடம் கேட்டறிய வேண்டும். ஸந்தான கோபாலன் வித்யா ராஜ கோபாலன்—என்று சில மூர்த்திகள் இருப்பதாய், அவற்றில் இந்தப் பெருமாள் வித்யா ராஜ கோபாலன் — என்று தெரிகிறது.

## அஹோபிலம்

அஹோபலம் என்று 108 திவ்ய தேசக் கணக்கில் இரண்டு இடத்தில் வருகிறது. அங்கே, பலம் தான் பிலமல்ல என்று குறிப்பு எழுதினேம்.

இந்த மாஹாத்மியத்தில் பலம் என்று காண்கிறது. ஆனுல், அஹோபிலம் — என்பது தான் சரி. பிலம் என்ருல் குகை. அஹோபிலத்தில் குகையிலும் பெருமாள் எழுந்தருளியிருக்கிருர். அங்கே நவ நரஸிம்ஹன் என்று ஒன்பது நரசிங்கர்கள் எழுந்தருளி யிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் குகையி லிருப்பவர். ஆகையால், அஹோபிலம் என்பது தான் சரி.



கர்ப்பகிருஹத்தில் கஜலக்ஷ்மியாக செங்கமல நாச்சியார் (உத்ஸவர்)



கர்ப்பகிருஹத்தில் பசுக்களின் நடுவில் ராஜகோபாலன் (உத்ஸவமூர்த்தி)

# உத்ஸவங்கள்

சித்திரை : கோடைத் திருநாள் (சைத்ரோத்ஸவம்) 10 நாள். அக்ஷய த்ருதீயை 4-ம் திருநாளாக இருக்க வேண்டும். அன்று கருட ஸேவை.

வைகாசி : **வஸந்தோத்ஸவம்** 10 நாள். கடைசி நாள் பௌர்ணமி ஒரு விநாடியாவது இருக்க வேண்டும், அன்று கருட ஸேவை.

ஆனி : **தெப்பத் திருநாள்** 10 நாள். பௌர்ணமி யன்று ஹரித்ரா நதியில் தெப்பம். துவஜா ரோஹணமுள்ள உத்ஸவம் இது. வாஹநங்களின் விவரம் :

மு. திரு. திருச் சிவிகை
2. ஸூர்ய ப்ரபை
3. சேஷ வாஹநம்
4. கருட ஸேவை
5. ஹநுமாந்
6. யானை வாஹநம்
7. திருச் சிவிகை
8. காலை : நவநீத கிருஷ்ணன்
ராத்ரி : குதிரை வாஹநம்
9. **தெப்பம்**
10. ஸப்தாவரணம்

ஆடி : **திருவாடிப் பூரம்** செங்கமல நாச்சியாருக்கு 10 நாள் உத்ஸவம். பூரம் கடைசி நாள்.

1. தோளுக்கினியான்
2. ஹம்ஸம்
3. சேஷ வாஹநம்
4. கருடன் ; பெருமாளுக்கு
ஸிம்ஹம் : நாச்சியாருக்கு.
5. கமல வாஹநம்
6. யானை வாஹநம்
7. சூர்ணாபிஷேகம் ஆகி
தோளுக்கினியானில் புறப்பாடு, பிறகு பூப் பல்லாக்கு
8. குதிரை வாஹநம்
9. திருத்தேர். நிலை சேர்ந்த
பிறகு திருமஞ்சனம்.
10. ஸப்தாவரணம்

ஆடி : **ஜேஷ்டாபிஷேகம்** சுக்ல ஏகாதசியில்

ஆவணி : பவித்ரோத்ஸவம் 10 நாள். சுக்ல ஏகாதசி முதல். 10-ம் திரு. ஹரித்ரா நதியில் தீர்த்தவாரி.

புரட்டாசி : **நவராத்ரி.** விஜயதசமி 10-ம் நாளாயிருக்க வேண்டும். அன்று ராத்ரி கோபீநாதன் கோயிலில் குதிரை வாஹநம் ஏறி பெருமாள் அம்பு போடுவது.

ஐப்பசி : **தீபாவளி.** ஆழ்வார்கள் மங்களா சாஸநம். பெருமாள் திரு முன்பு பட்டோலை வாசித்தல்.

**கோலாட்ட உத்ஸவம்.** தீபாவளி அமாவாஸை முதல் 10நாள்

கார்த்திகை : திருக் கார்த்திகை தீபம். கர்ப்பூரத்தினுல் சொக்கப் பனை.

மார்கழி : **அத்ய யனோத்ஸவம்** வைகுண்ட ஏகாதசிக்கு முன் 10 நாள் பகல் பத்து. ஏகாதசியிலிருந்து இராப் பத்து 10 நாள். ஏகாதசியன்று மூலவரான ஸ்ரீ வாஸுதேவனைத் திருமுடி முதல் திருவடி வரை ஸேவிக்கலாம். பூவங்கி ஸேவை விசேஷம்.

தை : **சங்கராந்தி.** திருச் சிவிகையில் புறப்பாடு.

,, 2-ம் தேதி **கனு.** காலை : நாச்சியார் தோளுக்கினியானில் புறப்பாடு. மாலை : பெருமாள் குதிரை வாஹநத்தில் புறப்பாடு.

தை 3-ம் தேதி **மட்டையடி.** காலையில் பெருமாள் கோபீநாதன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, ராத்ரி குதிரை வாஹநத்தில் புறப்பட்டு, ராஜ வீதியில் ஹநுமாந் ஸந்நிதி முன்பாக திருமங்கை யாழ்வார் வேடுபறி நடக்கும். பிறகு ஆழ்வாருக்கு ஸேவை ஸாதிப்பது.

பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் மட்டையடி என்னும் ஊடல். புராணம் படித்து நாச்சியரை ஸமாதானப் படுத்துதல்.

தை 4-ம் தேதி **ஏகாஸநம்.** மட்டையடி ஆன மறுநாள் ருக்மிணி ஸத்ய பாமை ஹேமாப்ஜ நாயகியோடு பெருமாளுக்கு தாயார் ஸந்நிதியில் ஏகாஸநம். ஸ்தாநீகம் சம்பக மன்னுர் தீக்ஷிதர் ஸமர்ப்பித்த ஊஞ்சலில் நாள் முழுதும் எழுந்தருளி ஸேவை ஸாதிப்பார்.

**தாயார் அத்ய யனோத்ஸவம் :** தை 4 தேதிக்குப் பிறகு வரும் வெள்ளிக்கிழமையில் ஆரம்பித்து 10 நாள் உத்ஸவம். நித்யமாக பெருமாள் நாச்சியார் ஏகாஸநம்.

மாசி : **டோலோத்ஸவம்** (ஊஞ்சல் திருநாள்) மாசி மகம் ஒரு விநாடி இருந்தாலும் அன்று 9-ம் திருநாள்.



ராஜ கோபாலன் : பஞ்சமுக ஹநுமான் வாஹநம்

பங்குனி : **பிரம்மோத்ஸவம்** 18 நாள். பங்குனி ரோஹிணி ஒரு விநாடி இருந்தாலும் அன்று 17-வது நாள் திருத்தேர்.

| | | |
|---|---|---|
| 1. | துவஜா ரோஹணம் | திருச் சிவிகை, கொடிச் சப்பரம், கல்யாணக் கோலம். |
| 2. | புன்னை மரம் | கண்ணன் திருக்கோலம் |
| 3. | ஹம்ஸம் | ராஜா ,, |
| 4. | கோவர்த்தந கிரி | கண்ணன் ,, |
| 5. | பஞ்ச முக ஹநுமாந் | மரவுரி ராமன் ,, |
| 6. | கண்ட பேருண்ட பக்ஷி | ராஜா ,, |
| 7. | ஆளும் பல்லாக்கு | ,, |
| 8. | ரிசிய மூக பர்வதம் (சித்திர கூடம்) | பட்டாபிராமன் |
| 9. | ஸிம்ஹ வாஹநம் | ராஜா |
| 10. | ஸூர்ய ப்ரபை | வேணுகோபாலன் |
| 11. | சேஷ வாஹநம் | பரம பத நாதன் |
| 12. | கருட ஸேவை | வைர முடி அலங்காரம் |
| 13. | ஹநுமாந் | ராமன் |
| 14. | யானை வாஹநம் | ராஜாலங்காரம் |
| 15. | திருச் சிவிகை சூர்ணோத்ஸவம் | |
| | ராத்ரி : பூப் பல்லாக்கு | கல்யாணோத்ஸவம் |
| 16. | காலையில் பல்லாக்கு | அத்புதமான வெண்ணெய்த் தாழி ஸேவை |
| | ராத்ரி : | குதிரை வாஹநம் |
| 17. | திருத்தேர் | |
| 18. | ஸப்தாவரணம் | |

# உபயக்காரர்கள்

---

1. தேவங்குடி, டி. ஜீ. செளரி நாயுடு :
   சித்திரை கோடைத் திருநாள் முதல் திரு.
2. மன்னார்குடி டி. எஸ். லக்ஷ்மீ நாராயண செட்டியார் 2
   கோயில் : 3
3. அஹோபில மடம் 4
   ,, 5—8
4. மன்னார்குடி கே. சேஷன் 9
   ,, 10
5. எஸ். கே. வைத்தியநாத அய்யர் : வஸந்தம் 9
6. கே. என். ராஜய்யன் செட்டியார் ,,
   விசாகம் கருட ஸேவை 10

**தெப்பத் திருநாள்** கோயில் திருச் சிவிகை 1
,, ஸூ. ப்ரபை 2
,, சேஷ வாஹநம் 3

7. தேவங்குடி ஜீ. பார்த்தஸாரதி நாயுடு : தெப்பத் திரு.
   கருட சேவை 4

ஸர்வ மாங்யம் ஹநுமாங் 5

கோயில் யானை 6
,, திருச் சிவிகை 7
,, காலை வெண்ணெய்த் தாழி 8

வளையல் காரத் தெருவார்கள் ,,
ராத்ரி : குதிரை வாஹநம்

8. ஸேது பாவா சத்திரத்தார் :
   தெப்பம் மய்ய மண்டபம் 9
   கோயில் ஸப்தாவரணம் 10

9. மன்னார்குடி ஆர். சின்ன ஸ்வாமி செட்டியார் :
தோளுக்கினியான் ஆடிப் பூரம் முதல் திரு.
கோயில் ஹம்ஸம் 2

10. (22) எ. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், அக்ரஹாரம்
சேஷ வாஹநம் 3

11. ராஜப்பையன் சாவடி ஜி. டி. கிருஷ்ண ஸ்வாமி நாயுடு
பெருமாள் கருட வாஹநம்
நாச்சியார் ஸிம்ஹ வாஹநம் 4

12. எ. ராஜ விநாயகம் பிள்ளை : கமல வாஹநம் 5

13. எஸ். வி. நாராயண ஸ்வாமி நாயுடு : 6
யானை வாஹநம்

14. வக்கில்கள் 7
(சூர்ணாபிஷேகம் தோளுக்கினியானில் முதல் புறப்பாடு)

15. கே. நடேசக் கொத்தனார் : ராத்ரி பூப் பல்லாக்கு ,,

16. வர்த்தகர் தொழிலாளர் சங்கம் : குதிரை வாஹநம் 8
கோயில் திருத் தேர் 9

17. டி. நாராயண ஸ்வாமி அய்யர்
தேர் நிலை சேர்ந்ததும் பிறகு திருமஞ்சனம் ,,

18. பூக் கடைக்காரர்கள் : பூப் பல்லாக்கு 10

19. எஸ். வரதாசார்யர், மாஜி பெடரல் கோர்ட்டு ஜட்ஜ்
ஜேஷ்டாபிஷேகம்

20. பி. ராகவ தீக்ஷிதர் : பவித்ரோத்ஸவம் 2
திருமஞ்சனம்

21. ஹை ஸ்கூல் உபாத்யாயர்கள் தீர்த்தவாரி 10

(நவராத்ரி 9 நாளும் கோயில்)

22. (10) எ. ஸ்ரீ நி வா ஸ அய்யங்கார் அக்ரஹாரம் :
விஜயதசமி: ராத்ரி கோபிநாதன் கோயிலுக்கு எழுந்தருளி குதிரை வாஹநத்திலிருந்து அம்பு போடுதல்

[ கோலாட்ட உத்ஸவம் பத்து நாளும் கோயில் ]

23. சா. கன்னையா பிள்ளை, ராஜப் பையன் சாவடி : திருக்கார்த்திகை

[பகல் பத்து 10 நாளும் கோயில்]

24. காரக்கோட்டை நரசிங்க ராவ் : வைகுண்ட
ஸுந்தர ராஜ ராவ் ஏகாதசி

25. கர்ஸன் கம்பெனியார், சென்னை: இராப் பத்து 2

26. வெங்கட்டூர் மடம் 6

27. ஜட்கா வண்டிக்காரர்கள்: குதிரை வாஹனம் 8

28. வெங்கடாசார்யர் : மோஹநாவதாரம் 9

29. சேரன்குளம் சின்னப் பண்ணையார் 10

30. (59) தர்மகர்த்தா டி. எஸ். ஸ்வாமிநாத உடையார் : சங்கராந்தி திருச் சிவிகை

31. (36) பி. டபிள்யூ. டி. ஆபீஸ் : கனு
காலை : தாயார் தோலுக்கினியான்
மாலை : பெருமாள் குதிரை வாஹநம்

32. கோயில் : மட்டையடி பல்லாக்கு

33. கோபால அய்யர் : மட்டையடி யன்று ராத்ரி

34. ஸ்தாநீகர் சம்பக மன்னூர் தீக்ஷிதர் எஸ்டேட் :

[ தாயார் அத்ய யநோத்ஸவம் 10 நாளும் ]

35. ராமாநுஜ கிருஷ்ண அய்யர், வட கோவனூர் ஊஞ்சல் உத்ஸவம் திரு. 7

36. (31) பி. டபிள்யூ. டி. ஆபீஸ்: பிரம்மோத்ஸவம் மு. திரு திருச் சிவிகை

37. தாலூகா ஆபீஸ் ,, முதல் திரு. ராத்ரி கொடிச் சப்பரம்

38. பத்ம ஸாலேயார் தெரு பட்டரையார் திரு. 2
புன்னை மரம்

39. ஸ்ரீமதி என். கே. ஆர்யா பாய் அம்மாள், கீழ ராஜ
வீதி, ஹம்ஸம் 3

40. வானமாமலே ஜீயர் ஸ்வாமிக்காக சேரன்குளத்தார் 4
கோவர்த்தநம்

41. செங்குந்த பட்டரையார் : பஞ்ச முக ஹநுமாந் 5

42. வர்த்தக சங்கத்தாரும் வாணியப் பட்டரையாரும் 6
கண்டபேருண்ட பக்ஷி

43. சேரன்குளம் சின்னப் பண்ணையார் :
ஆளும் பல்லக்கு 7

44. விசுவ பிராம்மண பட்டரையார்: ரிசியமுக பர்வதம் 8

45. தாலூகா ஆபீஸ் டபேதார்கள் : ஸிம்ஹ வாஹநம் 9

46. அகமடியார் சங்கம் : ஸூ. ப்ரபை 10

கோயில் 11

47. கோபாலனும் பிராந்தியங்கரையாரும்
கருட ஸேவை 12

48. யானைமால் தோட்டம் கபாடக்காரர்கள்: ஹநுமாந் 13

49. பழையனூர் உடையார் : யானை வாஹநம் 14

50. திட்டாணி முட்டம் ஸ்வர்ணச்சார் ஸ்வாமி
குமாரர்கள் : திருக்கல்யாணம்

51. பி. எஸ். டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் 15
திருச் சிவிகை சூர்ணோத்ஸவம்

52. ஸ்ரீமதி டி. எஸ். ஆர். தர்மாம்பாள் அம்மாள் : ரதம்

53. கருப்பட்டி மூலே கே. ஜி. ஸுப்ரம்மண்ய
உடையார் : ராத்ரி பூப் பல்லாக்கு
தேவகோட்டை ராமஸ்வாமி செட்டியார்

54. வடிவேல் கோனார் : காலே வெண்ணெய்த் தாழி 16

55. வெ. தனபால செட்டியார், ஹநுமார் கோயில் தர்மகர்த்தா : மாலை குதிரை வாஹநம் 16

56. தென்பரை உத்ராதி மடம் : திருத்தேர் 17

57. கே.எஸ்.ஸந்தாந கிருஷ்ண முதலியார்: தீர்த்தவாரி

58. (30) தர்மகர்த்தா டி. எஸ். ஸ்வாமிநாத உடையார் திருமஞ்சனம்

59. ஸ்ரீ அஹோபில மடம் : ஸப்தாவரணம் 18

60. திருவேங்கடம் செட்டியார் : பங்குனி உத்தரம் தாயார் தோளுக்கிளியான்

61. (8) ஸேது பாவா சத்திரம் : விடாயாத்தி 1

62. கும்பகோணம் கே. ஆர். ராமச்சந்திர ராவ் 2

63. ஸோம ஸுந்தர உடையார் 3

64. மன்னார்குடி முனிசிபாலிடியார் 4

65. ஆர். லக்ஷ்மண தீக்ஷிதர் 5

66. யு. பி. நாயுடு பண்டு டிரஸ்டி டி. எஸ். வெங்கடராயலு நாயுடு, தஞ்சை, கிருஷ்ண தீர்த்தத்தில் தெப்பம் 6



உபய நாச்சிமாரோடு ராஜ கோபாலன் : தெப்பத்தில் ஸேவை



ராஜ கோபாலன் : கண்ட பேருண்ட பக்ஷி வாஹநம்

# தினசரி பூஜை நைவேத்தியங்கள்

1. **விசுவ ரூபம் :** காலை 7 மணி பால்
2. **திருவனந்தல் :** ,, 8 மணி தயிர் சாதம்
3. **காலை சந்தி :** ,, 9-30 மணி பொங்கல் புளியோதரை
4. **உச்சிக் காலம் :** ,, 11-30 மணி வடிசல், பாயஸம், பருப்பு, கரியமுது வகைரா வடை, தேங்குழல்.
5. **நித்யாநு ஸந்தாநம்** மாலை 5 மணி தோசை
6. **இராக் காலம் :** ராத்ரி 8 மணி உப்பு சம்பா வடிசல்
7. **அர்த்த ஜாமம் :** ,, 9-30 மணி சர்க்கரைப் பொங்கல், மோதகம், பால், தாம்பூலம்.

# விசேஷ வாஹநங்கள்

1. **பஞ்சமுக ஹநுமாந் :** பிரம்மோத்ஸவத்தில் ராமாவதார ஸேவை.

2. **கோவர்த்தந கிரி :** கிருஷ்ணன் எடுத்துத் தாங்கி நின்ற மலை.

3. **கண்ட பேருண்ட பக்ஷி :** இரு தலைப் பக்ஷி.

4. (குருந்த மரம்) ரிகியமூக பர்வதம் என்றும் பெயர்.

5. தங்கக் குதிரை வாஹநம்.

6. தங்கக் கருட வாஹநம், — தங்கக் குதிரை — இரண்டும். ஒரு துரை தன்னுடைய வயிற்று நோய் தீர வேண்டுமென்று பெருமாளைப் பிரார்த்தித்துக் கொண்டு அது தீர்ந்தவுடன் செய்து ஸமர்ப்பித்ததாகக் கேள்வி.

# நித்தியப்படி தேசாந்தரி கட்டளைகள்

1. **ஸ்ரீ சம்பக மன்னார் தீக்ஷிதர்** *எஸ்டேட் கட்டளை : தினசரி பகலில் 1 மரக்கால் அரிசி தயிர் சாதம், கட்டளை மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீ ரெ. ராம ஸ்வாமி தீக்ஷிதர் — பகலில்*

2. **கோபாலன் கட்டளை :** *தினசரி பகலில் 1 1/2 மரக்கால் தயிர் சாதம். வட பாதி மங்கலம் ஸ்ரீ வி. எஸ். தியாக ராஜ முதலியார் டிரஸ்டி.*

3. **கே. ஆர். எம். எஸ்டேட் :** *தினசரி பகலில் 1 படி, 4 தேசாந்தரிகளுக்கு அலங்காரமாக போஜநம், டிரஸ்டி, ஸ்ரீ ஜி. பால கிருஷ்ண முதலியார்.*

4. **ஏ. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் கட்டளை ;** *தினசரி ராத்ரி 2 படி தயிர் சாதம். டிரஸ்டி, ஸ்ரீ ஏ. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்—ராத்ரி*

5. **ஏ. ஆர். ஆர். கட்டளை :** *ராத்ரி 1 படி தயிர் சாதம். டிரஸ்டி, ஸ்ரீ ஏ. ராஜ கோபால அய்யங்கார்.*

6. **தொண்டமான் கட்டளை :** *ராத்ரி அரைப் படி தயிர் சாதம். டிரஸ்டி, புதுக்கோட்டை ஸம்ஸ்தானம்.*

# பெருமாளுடைய திருநாமங்கள்

1. குலோத்துங்க சோழ விண்ணகர ஆழ்வார்
2. வண் துவராபதி ஆழ்வார்
3. வண் துவராபதி மன்னனார்
4. ராஜாதி ராஜ விண்ணகரப் பெருமாள்

இப்படி 4 பெயர்கள் கல்வெட்டுகளில் காணகின்றன.

**கோயிலின் அமைப்பு :**

கிழக்குப் பார்த்த கோயில். அர்த்த மண்டபத்தின் தென் புறத்தில் விக்நேசுவரரும் வடபுறத்தில் துர்க்கையும் இருக்கிறார்கள்.

செங்கல் கட்டிடமாயுள்ள விமானத்தைச் சுற்றிலும் கண்ண பிரானுடைய பல செயல்கள் சுதை வேலையாக அமைந்துள்ளன.

**க்ஷேத்ரத்தின் பெயர்கள்**

1. மன்னார்குடி
2. மன்னார் கோயில்
3. ராஜ மன்னார் கோயில்
4. சம்பகாரண்யம்
5. வண் துவராபதி
6. தக்ஷிண த்வாரகை
7. வாஸுதேவ புரி
8. ஸ்வயம்பூ ஸ்தலம்

1. மன்னார்குடி (மன்னனாரின் குடி)

2. மன்னார் கோயில் (மன்னனாரின் கோயில்)

3. ராஜ மன்னார் கோயில் : ராஜா ஸம்ஸ்கிருதம், மன்னார் தமிழ் ; இரண்டும் சேர்ந்த தொடரே ஒரு திருநாம மாயிற்று.

4. சம்பகாரண்யம் — செண்பக மரங்கள் அடர்ந்த காடு.

5. வண் துவராபதி. த்வாரவதி, துவாரகை..
வண்-வளப்பமுள்ள துவார்கை.

6. தக்ஷிண த்வாரகை : வடக்கிலுள்ள துவாரகா புரிக்குப் போலியாய் தக்ஷிண தேசத்தில் அமைந்த துவாரகை இது.

7. வாஸுதேவ புரி. ஸ்ரீ வாஸுதேவப் பெருமாள் வஸிக்கும் புரி.

8. ஸ்வயம்பூ ஸ்தலம். ஒருவரால் ஆக்கப் படாமல் தாமாக ஆவிர்ப்பவித்த பெருமாளுடைய ஸ்தலம்.

**காலக் கணக்கு :**

கல்வெட்டுக்களின்படி கோயில் கட்டடம் அமைந்த காலம்: முதல் குலோத்துங்க சோழன் ஆட்சியில் 43-ம் ஆண்டில், அதாவது கி. பி. 1113ல் ஒரு கல்வெட்டு இந்தக் கோயிலில் காண்கிறது. அதில் குலோத்துங்க சோழன் விண்ணகரம் — என்று இவ்வூர் குறிக்கப் பட்டிருப்பதால், முதல் குலோத்துங்க சோழன் கட்டின கோயில் என்றும் இற்றைக்கு சுமார் 850 வருஷத்துக்கு முற்பட்டதென்றும் தெரிகிறது.

இந்த காலக் கணக்கு கட்டடத்தைப் பற்றியது. க்ஷேத்ரமும் மூர்த்தியும் நெடுநாள் முன்பே கலியுகத்தின் ஆரம்பத்திலேயே உண்டாயின :

**கல் வெட்டுக்கள் :**

கர்ப்ப கிருஹம், அர்த்த மண்டபம், மூன்றும் கோபுரம் — இந்த மூன்று இடங்களிலும் 6 கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| முதல் குலோத்துங்க சோழன் | காலத்தில் | 2 |
| த்ரிபுவந சக்ரவர்த்தி ராஜ ராஜ தேவர் | ,, | 1 |
| ,, ராஜ ராஜேந்திர சோழ தேவர் | ,, | 2 |
| கோனேரின்மை கொண்டான் | ,, | 1 |

# ஊரின் அமைப்பு

— ○ —

மன்னார்குடி நகரம் தஞ்சை ஜில்லாவில் ஒரு தாலூகா தலைநகர். மன்னார்குடி என்ற பெயராலேயே ரயிலடி ஏற்பட்டிருக்கிறது. அங்கிருந்தும் ஹரித்ரா நதி என்னும் ரயிலடியிலிருந்தும் சுமார் ஒரு மைல் தூரத்தில் ஊர் அமைந்திருக்கிறது.

ஜனத் தொகை: 1906 கணக்கின்படி—20,449.

**பாமணியாறு:** பாம்பணி எனப் பெயருள்ளது. ஊருக்கு வடக்கில் ஹரித்ரா நதிக்கும் அப்பால் ஓடும் இந்த நதி கிழக்கே போய் தெற்கில் திரும்புகிறது.

வைகாசிப் பௌர்ணமி காலையில் பெருமாள் கருட வாஹநத்தில் புறப்பட்டு பாமணி யாற்றில் தீர்த்தம் ஸாதிப்பார்.

பிரம்மோத்ஸவத்தில் திருமுளைக்கு மண்ணும் ஆடி சுக்ல ஏகாதசியில் ஜேஷ்டாபிஷேகத்துக்கு தீர்த்தமும் பாமணியாற்றிலிருந்து கொண்டு வரப் படுகிறது.

சம்பகாரண்ய மாஹாத்மியம் என்ற ஸ்தல புராணத்தில் பாமணியாற்றைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. ஹரித்ரா நதி என்ற தெப்பக்குளம் தான் காவேரியின் மகளாக சொல்லப் படுகிறது. இதனால் மாஹாத்மியம் ஏற்பட்ட காலத்தில் பாமணி யாறு இல்லையென்றும் பிறகு வெட்டின ஆறு என்றும் தெரிகிறது.

**புராதநப் பெயர்:** சுத்தமலி வளநாட்டுப் பிரம்மதேயம் தனியூர் **ராஜாதி ராஜ சதுர்வேதி மங்கலம்** என்றும் குலோத்துங்க சோழ விண்ணகரம் என்றும் கல் வெட்டுக்களில் காண்கிறது.

# மன்னார்குடி பற்றி சர்க்கார் புஸ்தகம்

ஜில்லா கெஜடீர் — என்று 1906-ல் சர்க்கார் அதிகாரிகள் ஒவ்வொரு ஜில்லாவைப் பற்றியும் ஒரு புஸ்தகம் வெளியிட்டார்கள். அதில் தஞ்சாவூர் பற்றிய புஸ்தகத்தில் மன்னார்குடி ஊரையும் கோயிலையும் பற்றி சில விவரம் காண்கிறது. அதாவது :

மன்னார்குடியில் (1906ல்)

| | |
|---|---|
| ஜனத் தொகை | 20,449 : அதில் |
| முஸ்லீம்கள் | 651 |
| கிறிஸ்துவர்கள் | 540 |
| ஜைநர்கள் | 153 |

மற்றவர்கள் ஹிந்துக்கள். அவர்களில் பிராம்மணர்கள் மிக ப்ரஸித்தமானவர்கள்.

இங்கே முனிசிபாலிடி, டிபுடி கலெக்டர் தாசில்தார் ஸப்-ரிஜிஸ்தரார் ஆபீஸ்கள், முனிசிப் கோர்ட்டு, போலீஸ் ஸ்டேஷன், காலேஜ் பள்ளிக்கூடங்கள், ஸம்ஸ்க்ருத பாடசாலை முதலியவை இருக்கின்றன. [காலேஜும் ஸம்ஸ்கிருத பாடசாலை—இரண்டும் இப்போது இல்லை.]

மன்னார்குடி மிகப் புராதநமான க்ஷேத்ரம். இங்குள்ள கோயில்கள் சோழ மன்னர்களால் கட்டப்பட்டவை. இங்கே 25 சிலா சாஸநங்கள் சர்க்கார் அதிகாரிகளால் நகல் எடுக்கப் பட்டன. (85—109/1897.) அந்த சாஸநங்களில் சோழ பாண்டிய ஹொய்ஸால மன்னர்கள் கொடுத்த மாந்யங்கள் தெரிகின்றன. இந்த தேசத்தில் ஹொய்ஸால தேசத்தார்கள் (மைசூரார்) யாருமே இப்போது இல்லை. ஊருக்கு மேற்கில் மைசூர் அரமனை ஒன்று இருந்ததாய்ச் சொல்லுகிறார்கள். அது இருந்த சுவடு யாதுமே தெரியவில்லை.

ராஜ கோபால ஸ்வாமி கோயில் தவிர, ஜயங்கொண்ட நாதர் கோயில் ராஜாதி ராஜேசுவரர் கோயில் இரண்டும் இங்கே பிரஸித்தம். இவை ராஜாதி ராஜனால் 1018—53 கி. பி. யில் கட்டப் பட்டன. ராஜ கோபால ஸ்வாமி கோயில் குலோத்துங்க சோழனால் 1070—1118ல் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

ஜயங்கொண்ட நாதர் கோயிலில் காய்ச்சும் பால் ஒரு போதும் கெடுவதில்லை என்று பிரஸித்தி. இந்தக் கோயிலில் பால் காய்ச்சி உறை குத்தி அனுப்ப வேண்டுமென்று காசி முதலான தூர தேசங்களிலிருந்து கூட அடிக்கடி பலருக்குக் கடிதம் வந்து கொண்டிருந்தது.

நாயக மன்னர்களில் கடைசியாயிருந்தவர், 1673ல் இறந்தவர், ராஜ கோபால ஸ்வாமி கோயிலுக்கு அதிகமான கட்டடத் திருப்பணிகள் செய்து வைத்தார். இந்தக் கோயிலில் ஐந்து பெரிய கோபுரங்கள் இருக்கின்றன. இங்கே பெரிய கருங் கல் கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றில் நுட்பமான சில்ப்ப வேலைகள் மிகக் குறைவு. திருச்சிராப்பள்ளிக்கு எட்டுக் கல் தென் கிழக்கில். இங்கிருந்து சுமார் 50 மைல் தூரத்துக்கு அப்பாலுள்ள மாமலை என்ற இடத்திலிருந்து இங்கே கற்கள் வந்து கோயில் கட்டிடம் வேலை நடந்திருக்க வேண்டும். அது தான் இவ்வூருக்கு ஸமீபமான கற் பாறை.

ராஜ கோபால ஸ்வாமி கோயிலுக்கு 780 ஏகரா பூமியும் வருஷத்தில் 6000 ரூ. சர்க்கார் பணமும் இருக்கிறது. இது மிகவும் பிரஸித்தமான கோயில். ஆந்திர தேசத்திலிருந்து கூட இங்கே வருஷம் சுமார் 15, 20 ஆயிரம் யாத்ரிகர்கள் வந்து பங்குனியில் பிரம்மோத்ஸவ தரிசனம் செய்கிறார்கள். ஆடியில் செங்கமல நாச்சியார் உத்ஸவமும் இங்கே விசேஷம். அதற்கும் யாத்ரிகர் அதிகமாய் வருகிறார்கள். உத்ஸவம் மட்டுமல்லாமல் நித்யப்படியில் கூட இந்தக் கோயிலுக்கு ஸேவார்த்திகள் அதிகம். புத்ர பாக்கியம் இல்லாதவர்கள் இங்கே அதிகமாய் வருகிறார்கள். கோயிலுக்குள்ளிருக்கும் ஸந்தாந கோபாலன் என்ற கண்ணன் விக்ரஹத்தை வாங்கி சிறிது நேரம் மடியில் வைத்துக் கொண்டால் குழந்தை பிறப்பது நிச்சயம் என்ற நம்பிக்கை இங்கு விசேஷம். அது அப்படியே பலித்து வருகிறது. கோப்ரளய தீர்த்தம் என்ற

குளத்தின் கரையில் தபஸ் செய்து கொண்டிருந்த கோபில கோப்ர ளய ரிஷிகளுக்காக இங்கே பெருமாள் பிரத்யக்ஷமாகி, கோயிலும் உண்டானதாக மாஹாத்மியத்திலிருந்து தெரிகிறது.

இங்கே, ஹரித்ரா நதி திருப்பாற் கடல் கோப்ரளய தீர்த்தம்— முதலான பல புண்ய தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றில் சில மாஸம் திதி நக்ஷத்ரம் வாரங்களில் ஸ்நாநம் செய்தால் விசேஷ புண்ணியம் உண்டென்று சாஸ்த்ரம் சொல்லுகிறது.

**ஹரித்ரா நதி என்பது** கிருஷ்ணன் கோபிகளோடு ஜலக்ரீடை செய்த குளம். ஆற்றைக் குளமாக அடைத்து கிருஷ்ணன் ஜல க்ரீடை செய்தான்.

**திருப்பாற் கடல்,** பிருகு மஹர்ஷி தபஸ் செய்து லக்ஷ்மியைப் புத்ரியாகப் பெற்று ராஜ கோபாலப் பெருமாளுக்கு விவாஹம் செய்து கொடுத்து மாமனாராக ஆன இடம்.

மன்னார்குடி ஜைனர்களுக்குக் கூட கொஞ்சம் விசேஷமான க்ஷேத்ரம். இங்கே ஒரு ஜைநக் கோயில் இருக்கிறது. ஜைநர்கள் அங்குப் போய் தரிசனம் செய்கிறார்கள். இங்கே 153 ஜைநர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு ஜைநர் தஞ்சை ஜில்லாவில் வேறு எங்கும் இல்லை.

மன்னார்குடி பெரிய புண்ய க்ஷேத்ரமாயிருப்பதோடு கைத்தறி நெசவுத் தொழிலுக்கும் பிரஸித்தமான இடம். இது ஒரு காலத்தில் நெசவுத் தொழிலுக்கு சிறந்த ஊராய் விளங்கிற்று. இப்போது கூட இங்கே துணி நெசவு செய்யும் கைக்கோளர் 400 வீட்டுக்காரர் இருக்கிறார்கள். ஆண்களுக்கு வேண்டிய ஜரிகை வேஷ்டி 120-ம் நம்பர் நூலில் ஆச்சர்யமாக நெசவு செய்யும் இடம் இது. பெண்களுக்கு வேண்டிய சீலையும் இங்கே நெசவு நடக்கிறது. கும்பகோணம் போல மன்னார்குடியும் பித்தளைப் பாத்திரங்களுக்கு பிரஸித்தமான இடம்.

[ 1906ல் இருந்த விவரம் இப்படி சர்க்கார் புஸ்தகத்தில் காண்கிறது. இப்போதைய விவரம் அறிந்து கொள்ளுங்கள்.]

# பழைய பதிப்புகளில் காணும் சில விசேஷங்கள்

செண்பகாரண்யத்தல புராணச் சுருக்கம்—என்ற பெயரில் தேவஸ்தாநத்தார் இதுவரை மன்னார்குடி தமிழ் ஆசிரியர் ஸ்ரீ ப. ராமநாத பிள்ளை அவர்களைக் கொண்டு தொகுத்த புஸ்தகம் 5 தடவை அச்சிடப்பட்டது. அதிலுள்ள சில விசேஷங்கள் இங்கே வரிசையாக சேர்க்கப் படுகின்றன.

**முன்னுரை :**

" திருவிளங்கி வளர் செம்பக வனத்தின் மிகுசீர்
மருவி நின்றுள சுயம் பெனும் விமானமதிலே
பொருவில் சேனை முதலாதியர் தொழப் புகழ் மிகுந்
தருள் பொருந்தி யழகான வடிவா யனு தினம்
ஸ்ரீ வாசுதேவனும் ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாளும் விளங்கும்..."

(பக். 2.) **தீர்த்தங்கள் 10**: என்று பாமணி யாற்றையும் கணக்கிட்டிருக்கிறது. பாமணியாறு பற்றிய பேச்சே மாஹாத்மியத்தில் இல்லை. ஆக, நவ தீர்த்தம் — என்றபடி தீர்த்தங்கள் 9 தான். தீர்த்தங்களின் விவரம் முழுதும் எட்டாம் அத்யாயத்திலுள்ளபடி 43-48 பக்கங்களில் காணலாம்.

ஹரித்ரா நதியை முதலாக வைத்து மற்றைய தீர்த்தங்கள் மூலக் கிரந்தத்தில் கணக்கிடப்பட்டுள்ளன. ஸ்ரீ ராமநாத பிள்ளை அவர்களின் தொகுப்பில் கோப்ரளய தீர்த்தத்தை முதலாக வைத்து கணக்கிடப் பட்டுள்ளது.

**கோப்ரளய தீர்த்தம்** ஓமக் குளம் என வழங்கும்; கோப்ரளய கோபிலர்கள் யாகம் செய்த இடம். இங்கே அக்நி மூலையில் உபய நாச்சிமாருடன் வாஸுதேவ மூர்த்தி ஒரு கோயிலில் எழுந்தருளியிருக்கிறார்.

(பக். 3) **கிருஷ்ண தீர்த்தம்**: கோயிலையடுத்து அக்நி மூலையில் அழகிய மய்ய மண்டபத்துடன் கூடியது. பிரம்மோத்ஸவ முடிவில் விடாயாற்றித் தெப்பம் இங்கே நடக்கும்.

மன்னார்குடி பாங்கு மானேஜர் ஸ்ரீ எஸ். ராகவ அய்யங்கார் பலருடைய உதவியால் இந்த தீர்த்தத்துக்கு அழகான படித்துறை கட்டி, மய்ய மண்டபத்தையும் சீர் செய்து வர்ணம் தீட்டி விளங்கச் செய்தார்.

**சங்கு தீர்த்தம் :** சங்கு தீர்த்தத் தெருவில்.

**துர்வாஸ தீர்த்தம் :** கஜேந்திர மோக்ஷம், யானை விழுந்தான் குளம்—என்று வழங்கும்.

(பக். 4) **ஹரித்ரா நதி :** விஸ்தீர்ணம் 23 ஏகரா. மத்தியில் பிராகாரம் திரு மதிளுடன் கூடிய கோயிலில் ருக்மிணி ஸத்ய பாமா ஸமேதராய் வேணு கோபாலன் எழுந்தருளியிருக்கிறார்.

**திருப்பாற் கடல் :** பிருகு மஹர்ஷி லக்ஷ்மியை விவாஹம் செய்து கொடுத்து, அவளைக் கீழே விடாதபடி வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்தபடி லக்ஷ்மீ நாராயணப் பெருமாள் கோயில் தென் கரையில் இருக்கிறது.

**கோபீநாத தீர்த்தம் :** கோபினாங் குளம்,இரட்டைக் குளம்,— என்று வழங்கும். தனியாகக் காத்திருந்த ஒரு கோபிக்கு கண்ணன் சேவை சாதித்த இடம் இது. இங்கே கோணப் பெருமாள் கோயிலில் வேணுகோபாலன் ருக்மிணி ஸத்ய பாமையுடன் எழுந்தருளியிருக்கிறார்.

(பக். 5) **மூலவர்** வாஸுதேவன் நாலு **திருக்கைகளுடன்** ஸ்ரீ தேவி பூமி தேவிகளுடன் நின்ற திருக் கோலமாய் எழுந்தருளியிருக்கிறார்.

**உத்ஸவர்** ராஜகோபாலன் பின்னே பசு மாட்டின் மேல் சாய்ந்தாற்போல் நின்று, ஒற்றைத் துணியும், ஒரு காதில் ஓலையும் (தாடங்கமும்), மறுகாதில் குண்டலமும், கையில் கோல் பிடித்துச் சிறிதே சாய்ந்து நிற்கும் திருக்கோலம்; இருபுறத்திலும் ருக்மிணி ஸத்ய பாமை. கோபாலன் அழகொழுகும் தேமல் புள்ளிகள் வாய்ந்தவராய் எந்த அலங்காரத்திலும் அழகும் மந்த ஹாஸமுமாய் விளங்குவது பரமாநந்தக் காட்சியாகும்.

**ஸந்தாந கோபாலன்** ஆதிசேஷ சயநராய் கட்டை விரலைச் சுவைத்திருக்கும் திருக்கோலம்.

(பக். 12) **நவநீத சேவை :** கண்ணன் பாலனாய்த் தவழும் திருக் கோலத்தில் வெண்ணெய்க் குடத்தோடு பல்லக்கில் எழுந் தருளும் முன்னழகும், பின்னழகும் காணக் காணத் தெவிட்டாத இன்பம் தரும்.

தவம் புரிய நினைத்து மகளாகிய
காவிரிக் கரையின் றனக்குத் தெற்கில்
நவம் புரியுஞ் **செம்பகமாவன**
மானவுத்தம நற்றலத்தை நண்ணி
உவந்துறு தேனிறைந்த மல ருறைந்திட
வண்டினஞ் சேவலுடனே கோழி
திவந்தருவான் மஞ்ஞை யிவை யழகொழி
செய்துற நிரம்பிச் சிறக்கலாகி

(பக். 18) முசுகுந்த சக்ரவர்த்தி சிவபெருமானிடம் துவாத சாக்ஷர மந்திரத்தை உபதேசம் பெற்று, அவர் கட்டளையின்படி சம்பகாரண்யத்தில் தவம் செய்தார்; பெருமாள் காட்சி தந்து மோக்ஷம் கொடுத்தார்.

[சம்பகாரண்ய மாஹாத்மியம் என்ற மூலக் கிரந்தத்தில் முசு குந்தன் கதை இல்லை. மஹாபாரதம், ஹரிவம்சம் சேஷ தர்மம் பிரம்மாண்ட புராணம், ஸ்காந்த புராணம் நாகர கண்டம், ஸ்ரீரங்க புராணம், திருப்பதி புராணம்—இவற்றில் இந்த க்ஷேத்ரத்தின் பெருமை விரிவாயுள்ளது—என்று எழுதியிருக்கிறது. முசுகுந்தன் கதை அவற்றில் இருக்கலாம்.]

— ● —

# திருவாபரணங்கள்

1941 வரையில் இருந்த 1,24,000 ரூ. பொருமானமுள்ள பழைய ஆபரணங்களை உருக்கி கீழ்க்கண்டவை செய்யப்பட்டன.

1. தங்கக் கிரீடம்

2. உபய நாச்சியாருக்கு 3 வடம் சங்கிலி

3. மூலவர் ஸ்ரீ வாஸுதேவப் பெருமாளுக்கு 700 பவுனில் தங்கக் கிரீடம்

4. பந்தே கோல் (செண்டு) 100 பவுன்

5. வெள்ளி திருச் செவி. (காது காப்பு)

6. **வெங்கட கிரி ராஜா வஜ்ர கண்டி :** (நெல்லூர் ஜில்லா) வெங்கட கிரி ராஜா அவர்கள் புத்திர பாக்கியமில்லாமலிருந்து, ஸ்ரீ ராஜ கோபாலன் ஸ்வப்நம் ஸாதித்தபடி இங்கே வந்து ஸந்தாந கோபாலப் பெருமாளை மடியில் எழுந்தருளச் செய்து, அதன் பயனாய் ஏழு புத்ரர்களைப் பெற்றார். அது முதல் அந்த ராஜ வம்சம் வாழையடி வாழையாக விளங்குகிறது. அவர் பெருமாளுக்கு வஜ்ர கண்டி (வைர மாலை) ஒன்றும் ஸந்தாந கோபாலனுக்கு பதக்கம் ஒன்றும் ஸமர்ப்பித்தார்.

# மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி கோயில் அமைப்பு



# மன்னார்குடி நகரம்



N
W
E
பாமணியாறு
மேலராஜ வீதி
கடைத் தெரு
கீழராஜ வீதி
காந்தி ரோடு
தஞ்சாவூர் ரோடு
வடுவூர் வழி
பட்டுக்கோட்டை ரோடு
V.O.C. ரோடு
1
2
3
4
5
6
8
11
12
13
14
15
16
17
18
19
20
21
23
25
26
27
28
29
30
31
32
33
34
35
36

# பிராகாரங்கள்

1. திருவுண்ணாழி ப்ராகாரம்
2. கருடன் ப்ராகாரம்
3. சம்பக ப்ராகாரம் [செண்பக மரங்கள் அதிகம். க்ஷேத்ர விருக்ஷம் : (புன்னாகம்—புன்னை மரம்]
4. காசி ப்ராகாரம்
5. நாச்சியார் ப்ராகாரம்

**கோபுரங்கள் 16 :** முதலில் உள்ளது பெரிய ராஜ கோபுரம், 154 அடி உயரம்.

**கருட கம்பம் :** 54 அடி உயரம். உச்சியில் கருடன் அஞ்சலித்த கையராய் மேற்கு நோக்கி பெருமாளை ஸேவித்த வண்ணமாயிருக்கிறார். அதிலேயே தீபம் வைக்கவும் இடமிருப்பதால் அது தீப ஸ்தம்பமும் ஆகிறது.

திருமங்கையாழ்வார் பஞ்சு மூட்டைகளை அடுக்கி இந்த ஸ்தம்பத்தை நிறுத்தி வைத்ததாகக் கேள்வி.

# கோயில் அமைப்பு விளக்கம்

[பக்கத்திலுள்ள பிளான்படி]

---

1. செங்கமல நாச்சியார் ஸந்நிதி
2. ராஜகோபால ஸ்வாமி ,,
3. லக்ஷ்மீ நாராயணன் ,,
4. வேணு கோபாலன் ,,
5. அநந்த பத்மநாபன் ,,
6. வெங்கடேசப் பெருமாள் ,,
7. ரங்கநாதர் பாதம் ,,
8. ராமன் ,,
9. வைகுண்ட சாயி ,,
10. (திருவடி) அனுமான் ,,
11. திருமங்கையாழ்வார் (குமுதவல்லி ஸமேதராக)
12. சக்கரத்தாழ்வான் ,,
13. மணவாள மாமுனிகள் ,,
14. நம்மாழ்வார் ,,

14 (அ) ஆண்டாள் ,,

15. சேனாபதி ஆழ்வார் ,,
16. திருப்பள்ளி அறை ,,
17. அறை
18. பெருமாள் கோயில் ,,
19. தொண்டரடிப் பொடி ஆழ்வார் ,,
20. யாகசாலை ,,
21. குலசேகர ஆழ்வார் ,,
22. முதலாழ்வார்கள் ,,

[1. பொய்கை யாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்]

23. மடைப்பள்ளி
24. உக்ராணம்
25. கண்ணாடி யறை
26. வஸந்த மண்டபம்
27. உள் துறை மணியம் அறை
28. ஸ்ரீ வேதாந்த தேசிகர்
29. தேவஸ்தாநம் ஆபீஸ்
30. ஆயிரக்கால் மண்டபம் (இராப்பத்து மண்டபம்)
31. பெருமாள் ஆஸ்தாந மண்டபம்
32. சரக்கறை
33. உடையவர் ஸந்நிதி
34. வாஹந மண்டபம்
35. கூரத்தாழ்வான்
36. வைகுண்ட வாசல்
37. கொட்டகை மண்டபம்
38. வைகுண்ட ஏகாதசி மண்டபம்
39. ஆழ்வாராசார்யாள் மேடை
40. நரஸிம்ஹ ஸ்வாமி

## ப்ராகாரங்கள்

1. சிறிய திருவுண்ணாழி
2. பெரிய ,,
3. சம்பக ப்ராகாரம்
4. காசி ப்ராகாரம்
5. நாச்சியார் ரத வீதி

— ★ —

**ஸ்தல விருக்ஷம் :** *புன்னாகம் (புன்னை மரம்). முதல் பிரா காரம் வட பாகத்தில் இருக்கிறது.*

**சண்பக மரங்களும்** *நிறைந்துள்ளன. சம்பக ப்ராகாரம் என்றே மூன்றும் பிராகாரத்துக்குப் பெயர். வடபுறத்தில் செண்பக மரங்கள் இருக்கின்றன.*

— ○ —

## மண்டபங்கள்

1. **வல்லாள மஹா ராஜன் மண்டபம்**
2. **ஆயிரக்கால் மண்டபம்**
   *இரண்டும் கோயிலுக்குள் உள்ளன*
3. **கருட வாஹந மண்டபம்**—*கீழ ராஜ வீதியில்*
4. **யானை வாஹந மண்டபம்**—*திருப்பாற் கடல் வீதியில்*
5. **பலகணி மண்டபம்**—*ஹரித்ரா நதி தெற்கு வீதியில்*
6. **வெண்ணெய்த் தாழி மண்டபம்**
   *மகிமை சாமி அய்யன் தெரு (காந்தி ரோடு)*
7. **புன்னை வாஹந மண்டபம்**
   *பாமணி யாற்றுக்கு அக் கரையில்*

### ராஜ கோபால ஸ்வாமியைச் சேர்ந்த
## சுற்றுக் கோயில்கள்

1. **லக்ஷ்மீ நாராயணப்** *பெருமாள் கோயில்—*
   *திருப்பாற் கடலில்*
2. **கோப்ரளயர் கோயில்**—*பட்டுக்கோட்டை ரோடு*
3. **பிடாரி கோயில்**—*உப்புக் காரத் தெரு*
4. **ஐயனார் கோயில்**—*வளையல் காரத் தெரு*

## ஊரிலுள்ள மற்றைய கோயில்கள்

1. நாக நாத ஸ்வாமி கோயில்—பாமணி யாற்றுக்கப்பால்
2. கோபீ நாதன் கோயில்—கோபீநாதன் குளத்துக் கருகில்
3. சொக்க நாதர் கோயில்—பாமணியாறு மேல் கரை
4. கைலாஸ நாதர் கோயில்—கீழ ராஜ வீதி
5. அனுமார் கோயில்—மேல வாசல்
6. மேல மாரியம்மன்

**கருட ஸேவைகள் :**

1. சித்திரை—அக்ஷய த்ருதீயை
2. வைகாசி—பௌர்ணமி விசாகம் காலையில் பாமணி யாற்றுக்கு எழுந்தருளல்
3. ஆனி—தெப்பத் திருநாள்
4. ஆடி—திருவாடிப் பூரம் 4-வது நாள்
5. பங்குனி—பிரம்மோத்ஸவத்தில்

**ஊருக்குச் சிறப்பு மொழி**

திருவாரூர் தேரழகு, திருவிடை மருதூர் தெரு வழகு,
வேதாரண்யம் விளக் கழகு, காஞ்சிபுரம் குடை யழகு;
திருவரங்கம் நடை யழகு, **மன்னார்குடி மதிள் அழகு.**
மன்னார்குடி மதிள் வானளாவி நிற்பது காண்க.

**துர்க்கை விக்நேசுவரர்கள் :** ஸ்ரீ ரங்கம் ரங்க விமானத்தில் வலது புறம் விக்நேசுவரரும் இடது புறம் துர்க்கையும் இருப்பது போல, இங்கு அர்த்த மண்டபத்தின் வலது புறம் (தெற்கில்) விக்நேசுவரரும் இடது புறம் (வடக்கில்) துர்க்கையும் இருக்கிறார்கள்.

## கோயில் நிலங்கள்

| | நன்செய் ஏகரா | புன்செய் ஏகரா |
|---|---|---|
| திறப்பு : | 848. 53 | 26. 93 |
| இனும் : | 10. 31 | 258. 58 |
| நத்தம் : | | 18. 55 |
| | 858. 84 | 304. 06 |

பசலி 1367ல் நெல் வரவு 11,209 கலம்

,, ,, ரொக்கம் வரவு ரூ. 20,857. 06

## அபிவிருத்திகள் :

(1) விமானங்களுக்கு திருப்பணி வேலை.

(2) நூல் நிலயம் ஸ்தாபிக்கும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

**யானை :** 40 வருஷமாய் தொடர்ச்சியாக இருந்து வருகிறது

## சத்திரங்கள்

1. **வானமாமலை மடம் :** கோயில் வாசலில் வடபுறம்.
2. **அஹோபில மடம் :** கோயில் வாசலில் தென்புறம்.
3. **ஸேது பாவா சத்திரம் :** ஹரித்ரா நதிக்கு ஈசாந்ய பாகத்தில்; அந்ந தாநமும் தங்கு வசதியும்.
4. **ஒந்திரியர் சத்திரம் :** பாமணியாற்றுக்கு வட கரையில். பிரம்மோத்ஸவ காலத்தில் பல இடங்களில் அந்ந தாநம் நடக்கும்.

## சில சாஸநங்கள்

இந்தக் கோயிலில் 8 சாஸநங்கள் உள்ளன. (வால்யூம் 6ல் 56—63) அவற்றையும் இதில் காணலாம்.

# பாடல் சிறப்பு

— ★ —

மன்னார்குடி ராஜகோபாலன் பேரில் ஆழ்வார் பாடல் இல்லை யாகையால். இது நூற்றெட்டுத் திருப்பதியில் சேர்ந்த மங்களா சாஸநஸ்தலமல்ல. ஆனால், ஸ்ரீவைஷ்ணவ பரம்பரையில் கடைசி ஆசார்யரான ஸ்ரீ மணவாள மாமுனிகளின் அபிமாந ஸ்தலம்—என்று இதற்கு ஒரு சிறப்பு உண்டு.

ஸ்ரீ ராமாநுஜர் "ஒரு நாயகமாய்"—என்ற திருவாய் மொழி (4. 1.) மைசூர் திருநாராயண புரத்தெம் பெருமானுக்கு ஸமர்ப் பித்தாற் போல, மணவாள மாமுனிகள் "தீர்ப்பாரை யாமினி" என்னும் திருவாய்மொழி (4. 6.) மன்னார்குடி ராஜகோபாலப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார்.

ஒரு நாயகமாய் என்ற முதல் பாட்டில் திருநாரணன் என்று இருப்பதால் அந்த திருவாய் மொழியை மைசூர் திருநாராயண எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்தார் ராமாநுஜர். தீர்ப்பாரை என் னும் திருவாய்மொழி 10-ம் பாட்டு, உன்னித்து என்பதில் வண்டு வராபதி மன்னனை — என்றிருப்பதால் வண்டுவராபதி, தக்ஷிண த்வாரகை, துவாரவதி — என்ற மன்னார்குடி எம்பெருமானுக்கு இதை ஸமர்ப்பித்தார் ஸ்ரீ மணவாள மாமுனிகள்.

உன்னித்து மற்றொரு தெய்வந்தொழாள், அவனையல்லால்
நும்மிச்சை சொல்லி நும் தோள்குலைக்கப்படும், அன்னைமீர்!
மன்னப்படு மறைவாணனை வண்டுவராபதி
மன்னனை ஏத்துமின், ஏத்துதலும் தொழுதாடுமே.

ஸம்ஸ்கிருதத்திலுள்ள சம்பகாரண்ய மாஹாத்மியத்தையே ராஜகோபால பிள்ளை அவர்கள் தமிழில் புராணம் பாடியிருப்பதாக பழைய பதிப்புகளில் குறிப்பிட்டிருக்கிறது.

# கல்வெட்டு எழுத்துக்கள்

## கோநேரின்மை கொண்டான் சாஸநம்

வரி

ஸ்வஸ்தி ஸ்ரீ
திரிபுவன
சக்ரவர்த்திகள்
கோநேரின்மை
கொண்டான் ரா
ஜாதி ராஜசதுர்
வேதி மங்கல
த்து சபையார்
க்கு இவ்வூரில்
ராஜா திராஜவி
ண்ணகரஎம்பெரு
மாள் திருவிடையா
ட்டம் ஆனநிலம் ப
ன்னிரண்டு மாவுக்கு
ம் பன்னிரெண்டாவது
வரையும் பத்தாக
விட்டு பத்து நாலு க
டமை கொண்டார் க
ள் ஆகவும். இந்நாளே தி
ருவாராதனை குறை ஊ
டொறும் கேட்டோ
ம் பதிமூன்றுவது ஆ
டிமாத முதல் முதலி
டங்க இறை இலி ஆக
விடவும் நம்முடைய ஆ
ட்டைப் பிறந்த நாள் ஆன
புரட்டாதி மூலத்திலே
திதம் ஆக ஸர்வ வாஹ
னங்களிலும் ஊரிலே
திருநாள் எழுந்தருளு

வரி

விக்கவும் இக்கோ
யிலில் நலிவு செய்யா
தொழியவும் பண்ணி
க் குடுக்க இவை வழு
தய தரையன் எழு
த்து நாள் இருநா
ற் றறு பத்தொன்று
திருவாராதனமும்
நடத்தி திருப்பிரியு
ம் பெருமாள் ஆட்டை
த் திருநக்ஷத்திரத்தி
லே புரட்டாதி மாதம்
மூலத்திலே திவ்யமா
க கொண்டு திருநா
ள் எழுந்தருளியும்
பிரசாதிக்கவு. மா
சந்தோறும் திங்
கள் திருநாள் எழுந்த
ருளவும் சர்வவாகனங்களில்
மாறி அருளி எழுந்தருளவும்
எழுதின திருமுகப்படியே
எழுந்தருளிவிக்கவும்
இப்படிக்கு எழுதின திருமு
கப்படியே கல் வெட்டி
கொள்ளக்கடவதாகவும் சொ
ன்னோம். இப்படிசெய்கபண்
பால் உ
ளூர் தலை சேலத்துடையா
ன் ... ... ... ஈயனெழுத்து.

## 56-வது சாஸநத்தின் கருத்து

[த்ரிபுவந சக்ரவர்த்தி கோநேரின்மை கொண்டான் என்று பெயருள்ள அரசன் ராஜாதி ராஜ சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரிலுள்ள ஸபைக்கு எழுதிக் கொடுத்த சாஸநம் இது.

ராஜாதி ராஜ விண்ணகர் எம்பெருமானுக்குச் சொந்தமான 12 மா நிலத்தை 13 வது வருஷத்திலிருந்து இறையிலியாக்கினன் அரசன். 10க்கு 4 வீதம் நிலக் கடமை செலுத்த வேண்டியிருப்ப தால் ஸ்வாமி கைங்கர்யங்களைக் குறைக்க நேரிட்டதென்று ஸபை யார் முறையிட்டார்கள். கடமை செலுத்துவதை நீக்கி, அந்தத் தொகையில் எல்லா கைங்கர்யங்களையும் செய்து கொண்டு தன்னுடைய பிறந்த நாளான புரட்டாதி மூலத்திலும் விசேஷ உத்ஸவம் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிருன் ராஜா.]

---

### 57 வது சாஸநம்

மூலஸ்தாநம் தெற்குச் சுவரிலுள்ளது

1. ஸ்வஸ்தி ஸ்ரீ: வ புகழ் மாது விளங்க ஜ்ய மாது விரும்ப நில மகள் நிலவ மலர் மகள் புணர உரிமையில் சிறந்த மணி முடி சூடி மிநவர் நிலைகெட வில்லவர் குலைதர எனை மந்நவ ரியலுற் றிழிதர திக்கனைத்துந்தந் சக்கர நடாதி வீர ஸிம்ஹாஸநத்துல குடையாளொடும் வீற்றிருந்தருளிய கொவிராஜ கெஸரி வந்மராந த்ரிபுவந வர்த்திகள் ஸ்ரீ குலொத்துங்க சொழ

2. தெவர்க்கியாண்டு 418 ஆவது மகர நாயற்று பூர்வ பக்ஷத்து த்ரயொதசியும் திங்கட்கிழமையும் பெற்ற திருவாதிரை நாள் சுத்த மலிவள நாட்டு ப்ரஹ்ம தெயம் தனியூர் ஸ்ரீ ராஜாதி ராஜச் சதுர்வேதி மங்கலத்து நடுவில் திருமுற்றமாந ஸ்ரீ குலொத் துங்க சொழ விண்ணகராழ்வார் கொயிலில் முந்பில் மாவிக்கிழெய் [ய] ஒயூதி பெருங்குறி கொட்டிக் கூட்டங் குறைவறக் கூடியிருந்து மஹா ஸபை

3. யார் ஸபா வ்யவஸ்தை பண்ணினபடி காடும் நாடும் நகரங்களும் கள்ளப் பற்று மகப்பட முப்பதி நாயிரங் காசுக்கு மாவீந்து இறுக்கக்கடவொமாகவும் மாவீயுமிடத்து அம்பலத்திலெ பெருங்குறி கொட்டிக் கூட்டங் குறைவறக் கூடிக் கொயிற்றம ரோடுங் கூடி இருந்து மடக்கு மாவிலெ மாவீயுக் கடவொமாகவும் மாவீந்த காசிறுக்குமிடத்து ஓலைகளாலும் கொயிற்றமர்க்குச் சொலைத் தாங்கலாலும் ஓழியக்

4. குண்டிகையிலேயிட்டுக் கைச்சாத்துக் கொள்ளக் கடவொ மாகவும் மாவீந்த காசிறுக்குமிடத்து நாளொபாதி காசெல்லொ மொக்க இறுக்கக் கடவொமாகவும் கார் பசானம் முக்காசும் தைம் மாஸ மகப்பட நெராக இறுக்கக் கடவொமாகவும் ஒரு பூக் காசும் பசாநக் காசும் ஆண்டா சறுதியாக நெராக இறுக்கக் கடவொ மாகவும் இப்பரி சிருதாரை இரட்டி இறுப்பிக்கக் கடவொமாகவும் குடி மகனை இறைக் கூலி கொண்டானை நா

5. கொண்ட வஸ்துக்கு ... வநுக்கு திரியக் குடுப்பித்து ராஜ தண்டமாக இவ்வஸ்துவுக்குமாக மடங்கு தண்டமாகக் கொள்ளக் கடவொமாகவும் வெள்ளான் வெட்டி கொள்ளவிட்டு வெள்ளாநும் ... மடக்கிலெ குரம்படைத்து வெட்டிக் கொள்ளக் கடவொமாகவும் பிராம்மணரையும் வெள்ளாரையும் வாரக் குடிமை தவிரக் கடவொமாகவும் கொயிற்றமரைக் காணுமிடத்து பஞ்ச முங்...ல்லது காணக் கடவொமல்—

6. ... வும் கண்டால் கூடப் புறப்பட்டு ... டவொமாகவும் ......ல்லது...ய்வார் திருவாணை உலகுடையார்...கடவொமாகவும்

7. ... யும் பணியால் ... பட்டர் பணியாலும்...முடையாங் பட்டர் பணியாலும் ... ம் பட்டர் பணியாலும்

8. ......பணியாலும் கிழக்குச் செரி...பட்டர் பணியாலும்... லொகமா தெவிச் செரி ... ட்டர் பணியாலும் பாண்டி ... பட்டர் பணியாலும் கூட்டக் கணக்கு நாணலூருடையாங் எழுத்து

## 57 வது சாஸநத்தின் கருத்து

[முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் ஏற்பட்ட சாஸநம் இது.

418-ம் வருஷம் தை மாஸம் சுக்ல பக்ஷம் த்ரயோதசி திருவாதிரை திங்கட்கிழமையில்—

ராஜாதி ராஜ சதுர்வேதி மங்கலத்தில் குலோத்துங்க சோழ விண்ணகராழ்வார் கோயிலுக்கு முன் தர்மயூதியில் கூடின மஹா ஸபையார், வேலைக்காரர்களோடு கலந்து ஆலோசித்து, கிராமத்திலுள்ள நிலங்களுக்கு 30,000 காசு கொடுத்து விட்டு, ஸபையாரே நில வரியை வசூலிப்பதும் வரி கொடாதவர்களுக்கு அபராதம் முதலிய தண்டனை விதிப்பதுமாகச் செய்து கொண்ட உடன்படிக்கை முழுதும் இந்த சாஸநத்தில் எழுதப்பட்டிருக்கிறது.]

## 58 வது சாஸநம்

அதே கோயிலில் வடக்கு மேற்கு தெற்குச் சுவர்களிலுள்ளது

1. ஸ்வஸ்தி ஸ்ரீ: [11] த்ரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தெவர்க்கு யாண்டு இருபத்திரண்டாவதின் எதிராமாண்டு மினர் நாயற்று அபர பக்ஷத்து நவமியும் திங்கள் கிழமையும் பெற்ற பூராடத்து நாள் சுத்த வல்லி வள நாட்டுத் தனியூர் ஸ்ரீ ராஜாதி ராஜச் சதுர்வேதி மங்கலத்து உடையார் ஸ்ரீ கயிலாஸமு—

2. டையாரான ராஜாதி ராஜீச்வர முடையார் கொயிலிலெ ஸபையாரும் மஹாஸபையாரும் ஜயங்கொண்ட சொழப் பெரிளமை நாட்டும் ராஜாதி ராஜப் பெரிளமை நாட்டும் நாலாயிரப் பெரிளமை நாட்டும் ஆளப் பிறந்தான் பெரிளமை நாட்டும் சங்கை கொண்ட சொழப் பெரிளமை நாட்டும்

3. நாட்டவரோடும்கூட இருந்து வ்யவஸ்தை பண்ணினபடி நம்முர் பரப்பிலெ காசும் நெல்லும் ஆகப் பலவகை வந்த படி தண்டிக் கொள்கையாலெ எங்களுக்குத் தரிப் பறுதியாலெ வெள்ளாழ்மை செய்து குடி இருக்கப் பொகுதில்லையென்று நாட்டவர் வந்து சொல்லுகையாலும் இப்படியாகையால் ஊர்

4. தரிப்பறுதி உண்டாயிருக்கையாலும் நம்மூர் இந் நாள் முதல் ப்ரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி தெவை செய்யுமிடத் துக்காவெரிக் கரையில் நம் முர்க்கொலறை செய்யுமடத்து நில ஒபா திக்குக் குடிப் பற்றுன நிலத்துக்கு வெள்ளாழர் கரை செய்யவும் அல்லாத திருமுகத் தெவையாய் வரும் ஆளும்

5. பண்டமும் ஊணைபாதி படவும் சென்னிர் வெட்டி செய்யுமடத்து அளக்கச் செய்யவும் இராஜ ராஜ புரத்துக்கு காசு பண்டார முள்ளிட்ட நெட்டாள் செய்யுமடத்து ஆட்டைக்கு மாத் தால் ஒரு ஆளாக வந்த ஆள் பொகவும் இதுக்கு மெற்படப் பொகா தொழியவும் இராஜ ராஜ புரத்து குறைவறுப்பு எடு—

6. க்கு மடத்து எடுக்க வேண்டுவது குறைவறுப்பு எடுக்க வும் அல்லாத ஆளுக்கு ... த கூலியென்று கூட்டிக் கொள்ளா தொழியவும் மக்கட் செவகப் பெற்றுக்குப் பரப்பு ஒரு மாவுக்கு குறுணியாகத் தண்டுகிற நெல்லு மக்கட் செவகர் கொண்டு சிறு முறி யெடுத்துத் தெவை செய்விக்கவும் சிறு—

7. முறிக்கா சென்றிடா தொழியவும் உடையார் ஸ்ரீ கயிலாஸ முடையார் திருவிழா எழுந்தருளுமிடத்து பரப்பிலே மாதத்தால் ஒரு காசும் நாழி அரிசியும் தண்டிக் கடவார் - வசமெ குடுக்கவும் எழுந்தளிவித்துத் திருவிளக்குப் பிடிக்கவும் வண்டுவராபதி மன்ன ஞர் திருவிழா எழுந்தருளுமிட—

8. த்து மாத்தால் ஒரு காசும் நாழி அரிசியும் தண்டிக் கடவார் வசமெ குடுக்கவும் எழுந்தருளிவித்து திருவிளக்குப் பிடிக் கவும் பிணே உண்டார்க்குப் படையிலார் பெற்றுக் காசு கொள்ளு மிடத்து உலகுடைய பெருமாள் [ப்ர] ஸாதஞ் செய்தருளி இட்டரு ளின நினைப்பின்படியெ குடுக்கவும் ஊரில் விநி—

9. யொகமென்று பரப்பில் காசும் நெல்லும் வரக் கொண்டு நியோகம் எழுதித் தண்டாதொழியவும் வரிக்கற்றை இடுமிடத்து அம்பலம் மெய்வேண்டும் கற்றை வரிக் கொண்டு இடவும் வகைப் பெறு தண்ட நாயகப் பெறென்றும் புரவரி முதல் கைக் கணக்கு முதல் தண்டாளர் முதல் கண் காணிக்க—

10. ணக்கர் முதலுக் கென்றும் படையிலார்க் கென்றும் கட்டளைகளில் குடும்பக் காசும் நெல்லும் வரிக் கொண்டு தண்டிக்

குடா தொழியவும் ஆண்டு தொறும் குடும்பு மாறி இடவும் இடுமடத்து கட்டளைக்குப் பொருந்திஞரை இடவும் பிடாகைகளுக்கு ப்ராஹ்மணக் குடும்பு செய்தல் குடிகிழ் அனுஸரி—

11. த்தல் செய்யா தொழியவும் ஊரில் மடக்கு மாவில் ஸபா வினியொகம் வரிக் கொண்டு செலவழியுமிடத்து பதிநாலாவது கார்வரையும் வரிக்......தபடியெ காருக்கு மடக்கு ஒரு மாவுக்கு முப்பது காசும் பசானத்துக்கு மடக்கு ஒரு மாவுக்கு ஐம்பதாக வந்த காசும் பரப்பில் முன்பி-

12. வாண்டுகளும் கூட வினியொகத்துக்கு பரப்பு ஒரு மாவுக்கு முன்ருகத் தண்டி வருங் காசும் பரப்பில் தவிர்த்து மடக்கிலெ மடக்கு ஒரு மாவுக்கு முப்... நூற்று ஒரு பது காசு மடக்கிலெ கொள்ளவும் இதில் பதிஞலாவது கார் வரையும் பெற்றுவந்தார்க்கு பெற்று வந்தபடியெ பெறவு—

13. ம் கடவதாகவும் பிராமணர் பொக் கடமை சுட்டி வெள்ளாழர் அகங்களில்ப்புக்கு ஒடுக்கா தொழியவும் பிராமணரை யாதல் நாட்டில் வெள்ளாழரையா......குடும்பும் மாவும் செய்தாரை யாதல் ஊர்க் கணக்கரையாதல் பிராமணரிலும் வெள்ளாழரிலும் முதலிகளுக்கு கொள்ளச் சொன்ஞர்

14. உண்டாகில் கிராமத் துரொகிகளும் நாட்டுத் துரொகி களாகவும் மற்றும் ஊர்க் காரியஞ் சுட்டிச் செலவழிய வெண்டுவ துண்டாகில் மஹா நியொகம் எழுதி......கொண்டு செலவழியவும் நாலாங் கட்டளை ஐஞ்சாங் கட்டளை ஆருங் கட்டளையால் வந்த மடக்கு ஊரிலெ கூட்டங்களிலெ

15. செரவும் பிறித்து கட்டளைக் கூட்டம் என்று செய்யக் கடவ தல்லாததாகவும் இப்படி வ்யவஸ்தை பண்ணினமையில் இப்படி பெசி உடையார் ஸ்ரீ கயிலாஸ முடையார் கொவிலிலும் வண்டுவராபதி மந்நஞர் கொயிலிலும் கல்லுவெட்டிக் குடுப்பதாக நாங்கள் நாலாயிர வரும் எழுத் திட்ட

16. மஹா நியொகப்படியும் ஸபையார் எழுத்திட்ட நியோ கப்படியும் இவ......

17. ட்டிக் குடுத்தொம் இப்படியை அழிய எங்களில் செய் தாருண்டாகில் கிராமத்.....

18. டது படக் கடவர்களாச் சொன்னோம். இப்படி செய்க பணியால் ஊர் கணக்கு நெற்.....

19. கற்பகப் பிரியனும் நாலாயிரப் பிரியனும் செகலுடையாங் கருணகரப் பிரியனு.....

20. வரங்கப் பிரியனும் மஹா ஜனப்பிரியனும் துறைமுகங் குடையான் பிரமப் பிரியனு ச

58 வது சாஸநத்தின் கருத்து :

[ராஜாதி ராஜனுடைய ஆட்சியின் 22-வது வருஷத்தில் ஏற் பட்ட சாஸநம் இது.

பங்குனி மாஸம், கிருஷ்ண பக்ஷம், நவமி, பூராடம், திங்கட் கிழமையில்—

ஸபை யாரும் மஹா ஸபை யாரும்—பேரிளமை நாடுகள் பல வற்றுக்குமுள்ள நாட்டவரின் வேண்டுகோளின்படி, ராஜாவின் கட்டளையை அநுஸரித்து சர்க்காருக்கும் கோயிலுக்கும் கொடுக்க வேண்டிய பல தொகைகளைப்பற்றி—ஸபையாரும் மஹா ஸபை யாரும் ஒப்பந்தம் செய்து கொண்ட விவரம் இந்த சாஸநத்தில் பதிவாயிருக்கிறது. சர்க்கார் அதிகாரிகள் தங்களுக்குத் தோன்றிய படி யெல்லாம் வரி வசூலித்துத் தொந்தரவு செய்ததால் இப்படி ஒப்பந்தம் செய்து கொள்ள நேர்ந்தது.]

59.வது சாஸநம்

அதே கோயிலில் மேற்கு தெற்குச் சுவர்களிலுள்ளது

1. ஸ்வஸ்தி ஸ்ரீ [11] த்ரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜேந்திர சொழதெவற்கு யாண்டு 21-வது கற்கடகஞயற்று அபரபக்ஷத்து துவாதசியும் புதன்கிழமையும் பெற்ற ரொஹிணி நாள் சுத்த மலிவளநாட்டு தனியூர் சிராஜாதி ராஜச் சதுர்வெதி மங்கலத்து ஸ்ரீ மற்றுவரா பதிம...மண்டலத்தார் மடத்து வ்ருதிக்கும்

வண்டுவராபதி மஹா முனிகளும் இவர் சிஷ்யை பெரிய பிராட்டியும் தங்கள் அர்த்தமிட்டு கொண்டு இவற்கு மடப்புற இறை இலியாய் அனுபவித்து பொதுகிற இவ்வூர் பிடாகை......சொழ நல்லூர் ராஜாதிராஜவதிக்கு மெற்கு ஜயங்கொண்ட சொழ வாய்க் காலுக்கு வ......ணுற்று முன்ரு......த்து நெ க மா......

2. இரண்டாங் கண்ணுற்று இரண்டாஞ் சதிரத்து நெ. 2 மாவும் அபிமான ராம நல்லூர் பாண்டிமா தெவி வதிக்கு மேற்கு ஜயங்கொண்ட சொழ வாய்க்காலுக்கு வடக்கு முதல் கண்ணுற்று முன்ருஞ் சதிரத்து நெ. ...ம் ஆக நெ. 3 - மா......வ்வும் இவர் திருனமத்துக் காணியாக தந்தபடி ஸ்ரீ ஸெனுபதி யாழ்வார் திரு வருளால் இவற்கு ஸ்தான நியொக மெழுதிக் கொடுத்தபடியெ இவர் தரமுள்ளதனையும் தாமெ அனுபவித்து ஆட...... பதின் கல நெல்லு திருமுற்றப் பண்டாரத்திலெ......ராகவும் இவற்கு பின்பு இவ...பெரிய பிராட்டிக்கும் இம் மட பரி—

3. சாரிகையாய் பொதுகிற வெள்ளாட்டிக்கும் ஜீவனத் துக்கும் புடவைக்கும் ஞளொன்றுக்கு பதிங்கல......வந்த நெல்லு பெறக் கடவதாக ஸ்ரீ ஸெனுபதி யாழ்வார் திருவருளா லெழுதிக் கொடுத்த ஸ்தான னியொகப்படியெ இந் நெல்லும் பெற......கு பின்பு இவ் வண்டுவராபதி மஹாமுனிகள் சிஷ்யர்க்ளில் இவன் கனிஷ்டராய் இம்மடத்திலெ வர்த்தித்து இம்மடமும் ஞெக்கி பொதுவார் இன்னெல்லு பெற்று பொது மிடத்து [சிஷ்ய]...தாமாக பெற்று பொதக்கடவர்களாகவும் இ......ம் மடம் அழிவு சொன்னது இனிலத்துக்கு......ற இட்டு மென்து குடுக்க கடவதாக குடுத் தமைக்கு இவ்வண்டுவராபதி மஹாமுனிகளெழுத்து. 11—

[கடைசி 5 வரிகள் வலப்புறம் ஓரத்தில் கட்டப்பட்டுள்ளன.]

59 வது சாஸநத்தின் கருத்து

[மூன்ருவது ராஜேந்திர சோழன் ஆட்சியின் 21-வது வருஷத் தில் ஏற்பட்ட சாஸநம் இது.

ஆடி மாஸம், கிருஷ்ண பக்ஷம், துவாதசி, ரோஹிணி, புதன் கிழமையில்—

மடப்புற இறையிலியாக உள்ள நிலங்களை வண்டுவராபதி மஹாமுநிகளுக்கும் அவருடைய சிஷ்யையான பெரிய பிராட்டி என்பவளுக்கும், மடத்து வ்ருத்திக்கும் ஜீவநாம்சமாக துவராபதி மன்னனார் (ராஜகோபாலப் பெருமாள்) கோயில் அதிகாரிகள் ஸேநாபதி.ஆழ்வார் திருவருளால் எழுதிக் கொடுத்தார்கள்.]

60 வது சாஸநம்

அதே கோயிலில் இரண்டாம் பிராகாரம் தெற்குச் சுவரில் உள்ளது

1. ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு முப்பத் தொன்று......னசம்பந்தச் சதுர்வெதி மங்கலத்து மெஷநா......ல் கலுடையான் கருணா கரப் பிரியன் கண்டு......லைப் புறமாக முன்பிலாண்டுகளும் பெற்று...... ப் பத்தொன்றுவது......ல் நெல்லுக்கு திருமு......கொ......

2. ணப் பிள்ளையான கொயிற்பொ......ன ப்ரஹ்மா ராயர் காணியாகக் கொண்ட நி......குஜ......ண்ட சொழவாய்க் காலுக்கு வடக்கு [ ரு ]-ங் கண்ணாற்று 3-ஞ் சதிரத்து......தென் மெற் கடைய்ந்த நிலத்து மெற்கடை ... திடலுள்பட எட்டுக் கூர் ஸ்ரீ கொவிந்... இவன் தம்பி [வா]...ட்டனும்...

3. ...ருமா அரைக் காணியும் திருமாலைப்புற இறையிலியா... கார் மறு பயிர் செய்து கொண்டு மன்...வட்டி...திருமாலை ... ந் தாழ்வி......கடவராகவும் இன்னிலத் ... துவரும் கடமை நம்முரி லெவ ... ண்டு கடமை இறுக்க கடவொமாக......ளும் இப்படி பணியால் கணக்கு...

4. ...எழுத்து உ நிலம் ஒ ... எங்களூர் சிரங்கநாத பட்டன் எழுத்து உ நல ...... எழுத்து கொவிந்த பட்டன் எழுத்து உ மாங் களூர் சிராம......பட்டன் எழுத்து [11]

60 வது சாஸநத்தின் கருத்து

[இன்னாரென்று சொல்லாத ஒரு ராஜாவின் ஆட்சியில் 31-வது வருஷத்தில் ஏற்பட்ட சாஸநம் இது.

ராஜாவின் கீழ் அதிகாரி, பிரம்மா ராயர் என்று பட்டப் பேருள்ள ஒருவன் திருமலைப் புற இறையிலி என்ற சில நிலங்களை

உழுது பயிரிட்டு சில கார்யங்களுக்கு உபயோகித்துக் கொள்ளும்படி சில ஜநங்களுக்குக் கொடுத்து விடுவதைக் குறிக்கிறது இந்த சாஸநம். ஜநங்கள் தங்கள் சொந்த பாகத்திலிருந்து வரி செலுத்துவதாயும் இதில் ஒப்புக் கொள்கிறார்கள்.

இந்த சாஸநத்தின் கீழுள்ள வேறு இரண்டு வரிகளில்— முதலாவது ஜடா வர்ம ஸுந்தர பாண்டியனுக்குள்ள பொன் மேய்ந்த பெருமாள் என்னும் பட்டப் பெயரைக் குறிப்பிட்டு மேலே சொன்ன காரியத்துக்காகவே ஏற்பட்ட ஒரு நன்கொடையும் பதிவாயிருக்கிறது.

61 வது சாஸநம்

அதே பிராகாரத்தில் மேற்குச் சுவரிலுள்ளது

1. ... பிரிதிவி ராச்சியம் பண்ணியலுளா நின்ற சகாத்தம் 1499 இதன் மெல்ச் செல்லா நின்ற இசுவர ஸம்வத்ஸரத்து

2. ... [பூர்வ] பக்கத்து துவாதெசியும் குருவாரமும் பெற்ற அசுவதி நக்கத்திறத்து நாள் பெருமாள் வண்டுவராபதி மன்னனார் நம் திருமல நம்பி திருமல தாத்தாசா—

3. ... ளெயிட்ட சுதந்திறம் தா ... நம் (ந்) திருவிளையாட்டம் வெட்கொவநூரில் தானம் திருவாய் மொழிப் பிள்ளை தரப்பில் கொண்ட கூட்டமாங்—சம் நிலம் அறுவெலியும் ஒரு குள—

4. ... ... க்கு பொலியூட்டுக்கு சமப்பித்து அதுக்கு நாள் ஒன்றுக்கு அமுது செய்து வர கட்டளையிட்ட அமுது ... இதுக்கு தளிகை 12 இந்தத் தளிகை ... நாயக்கர்

5. ... ... கர் செய்து தமக்கு விட்டவன் விழுக்காடு நாலத்தொன்றுக்கு தளிகை மூன்றும் முன் அகரப் பாடும் முத்தத்தமும் தெசாந்திரி முத்திரையும்

[இந்த சாஸநம் மிகவும் அழிந்திருக்கிறது. கற்களும் வரிசை மாறிக் கிடக்கின்றன. கீழே தனி சாஸநமாய் 2 வரி இருக்கிறது.]

1. ஸ்வஸ்தி ஸ்ரீ [11] கண்டு பெருமாள் அழகிய மணவாளப் பெரும ஊ லிம் மெஷ நாயறு முதல் ... ாரிய ... நிற்கூட்டப் பெரு மக்களும் மஹா ஸபையாரும் கணக்கு ... நெற்குப்பை உடையா... ...தண்டுகளும்...திருமாலைப் புறமாக பெற்றுப் பொதுகிற னெல் லுக்கு......

2. ங் கொண்டவாசில் நாராயணப் பிள்ளையான கொயில் கண்டு திரு ...ளிட்டு தான் வேண்டும் பயிற்ச் செய்து கொண்டு கல்லு வெட்டவும் இன்னிலம் நாலு மாவுங் ெ...... லே எடுக்கும் ஸ்ரீ பாதந்தாங்கு ... ராயர் காணி ... ... ணியாகக் கொண் ... ... பச்சிமொத்தர சது ...... பொன்மெந்த பெருமாள் ... சந்திராதித்த வரை செல்ல ... ...

3. ... நம் ... ஆகக் குறுணி பிசாதமும் காவுமு ... ழத்து ... ... க் கணக்கும் ...ச்ச பிறசாதமும் கொவில் கண

[இந்த சாஸகம் அழிந்தும், துண்டு துண்டாயும் இருக்கிறது.]

## 61 வது சாஸநத்தின் கருத்து

சகாப்தம் 1499, ஈசுவர வருஷத்தில் எழுதி வைத்த சாஸகம் இது; இரண்டாவது ஸ்ரீரங்க ராஜனுடையதா யிருக்கக் கூடும்.

வண்டுவராபதி மன்னனுக்கு (ராஜ கோபாலப் பெருமா ளுக்கு) திருமலை நம்பி திருமலைதாதாசாரியரும் திருவாய் மொழிப் பிள்ளையும் வெட்கோவனூரிலுள்ள நிலங்களை அஷ்டமாம்சமாயும் தங்களுக்கு பெருமாள் பிரஸாதம் கிடைக்கவேண்டியதாயும் எழுதி வைத்த விவரங்கள் இதில் பதிவாகியுள்ளன.

## 62 வது சாஸகம்

### இரண்டாம் பிராகாரம் வடக்குச் சுவரிலுள்ளது

1. ...... ஸமர்ப்பித்த படியாலெ இந்த னிலம் இருவெலியும் ஞன்ரா ... திலெ ஒப்புக் கொ—

2. ...இரண்டரைத் தளிகைக்கும் அச்சுதப்ப நாயக்கர் கட்டளையிட்ட சம்பா அ ... இரண்டரைத்தளிகை பிரஸாதமும்

3. ... ஊ யிட்டபடியாலெ இதிரண்டரை தளிகை பிரஸாத மும் ளுள்தொறும் அள ... கையிலெ நம்முட பெரிய அண்ணர்

4. ... ந்திரார்க் கஸ்தாயியாக தாநபாலநயோர் மத்யே... — தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநா தச்யுதம் பதம்

62 வது சாஸநத்தின் கருத்து

அச்சுதப்ப நாயகர் கட்டளையின்படி நிலங்களை தானம் செய்து பிரஸாதம் கொடுக்க வேண்டிய விவரத்தையும் குறிப்பிட்டதை மேலே சொன்ன 2-வது ஸ்ரீரங்க ராஜனே பதிவு செய்யும் சாஸநம் இது.

63 வது சாஸநம்

கோயில் அறையிலுள்ளது

1. ... ருபுவனச் சக்ரவர்த்திகள் எம்மண்டலமுங் கொண் டருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தெவற்கு ... ஷப நாயற்று அபர பக்ஷத்து சதுர்தசியும் நாயற்றுக்கிழமையும் ெ ... வளநாட்டுத் தனியூர் ஸ்ரீ ராஜாதிராஜ சதர்வெதி மங்கலத்து ஸ்ரீமத் ... ஸ்ரீ ஸெநாபதி ஆழ்வார் திருவருளா ... மிக ளுக்கு இவ்வூர் ராஜாதி...

2. ... திப் பொருள்ச் செலவொலை காட்டக் கடவதல்லாத தாகவும் இப்படி ஸம்மதித்து வி ... ருளறக்கைக் கொண்டு விற்று விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்த ஸ்ரீ ......யில் ஸ்ரீ ஸெநாபதி ஆழ்வார் திருவருளால் கன்மிகனுக்கு இராயூர்ச் சொ ... ன் இப்படி ஸம்மதித்து இன்னிலம் நாலுமாக் காணியும் புணை விலையாக விற்றுக் குடு ...

63 வது சாஸநத்தின் கருத்து

எம்மண்டலமும் கொண்டருளியவன் என்று பட்டப் பேருள்ளவன் ஸேநாபதி ஆழ்வார் திருவருளால் கன்மிகனுக்கு நிலத்தைக் கிரயம் செய்து கொடுத்ததைக் குறிக்கும் சாஸநம் இது.

## சாஸநம் பற்றிய குறிப்பு

*கோயில்களிலுள்ள சிலா சாஸநங்களை சர்க்கார் அரும்பாடு பட்டு, நகல் எடுத்து அச்சிட்டு வைத்திருக்கும் புஸ்தகங்கள் சர்க்கார் லைபிரரிகளிலும் பெரிய காலேஜ் லைபிரரிகளிலும் தவிர, மற்றை இடங்களில் கிடைப்பதில்லை. ஒவ்வொரு தேவஸ்தாநமும் தன் சம்பந்தமுள்ள சாஸநங்களை சர்க்காரிடமிருந்து தருவித்து தனிப் புஸ்தகமாக அச்சிட்டு வைத்துக் கொள்ளாவிடில், இந்த அருமைச் செல்வம் கிடைக்காமற் போய் விடுமென்ற பீதியால் மன்னார்குடி ராஜகோபாலன் கோயில் சாஸநங்களையும் அவற்றின் கருத்துக்களையும் இந்தச் சிறு புஸ்தகத்தில் சேர்த்திருக்கிறேன்.*

*சாஸநத்திலுள்ள சில கிரந்த எழுத்துக்கள் இங்கு தமிழிலேயே அச்சிடப் பட்டுள்ளன.*

*மன்னார்குடியிலுள்ள மற்றைக் கோயில்களின் சாஸநங்களும் உள்ளன. அவை பின் வருமாறு :*

*ஸௌத் இன்டியன் இன்ஸ்க்ரிப்ஷன்ஸ் வால்யூம்* 6.

1. *ஜயங்கொண்ட நாதர் கோயில் சாஸநங்கள்* 35—41
2. *அண்ணமலை நாதர் கோயில் சாஸநங்கள்* 42—47
3. *கைலாஸ நாதர் கோயில் சாஸநங்கள்* 48—55

## *தா பாத்ரங்கள்

**அக்நி:** *கருடனை அம்ருதம் எடுக்க வொட்டாமல் தடுத்து, அவனால் சபிக்கப்பட்டு அந்த சாபம் போவதற்காக மன்னார்குடியில் தபஸ் செய்து தேஜஸ்ஸை அடைந்தான்.* பக்கம் 20—21

**கோப்ரளயர் கோபிலர்:** *கிருஷ்ணனை தரிசிக்க விரும்பித் தவம் புரிந்தார்கள். கலியுகத்தில் கிருஷ்ணன் மன்னார்குடி க்ஷேத்ரத்தில் இவர்களுக்கு பிரத்யக்ஷமானான்.* (3)

**சிவன்:** *ஜலக்ரீடை செய்து களைத்துப்போன கிருஷ்ணனுக்கு திரட்டுப் பால் காய்ச்சிக் கொடுக்கச் சொன்னார்.* (24)

**செங்கமல நாச்சியார்:** *ஹேமாப்ஜ நாயகியில் பார்க்க.*

**ஜயந்தன்:** *ஸௌராஷ்ட்ர தேசத்து மந்த்ரி.* (26)

**நாரதர்:** *கோபில கோப்ரளய ரிஷிகளுக்கு யமுநா நதிக் கரையில் துவாதசாக்ஷர மந்த்ரம் உபதேசித்து, கிருஷ்ண தரிசனத்துக்காக தபஸ் செய்யச் சொன்னார்.* (4)

**பார்க்கவி:** *பிருகு மஹர்ஷியின் புத்ரி.* ,,

**பிரம்மா:** உலகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தி தன்னொருவனுக்கு மட்டுமே உண்டென்று கர்வித்து மதி யிழந்தார். மன்னார்குடி க்ஷேத்ரத்தில் தபஸ் செய்து பகவானை தரிசித்து அங்கே ஸ்வாயம்புவ விமாநத்தில் பிரதிஷ்டை செய்து வைத்து பங்குனி ரோஹிணியில் ரதோத்ஸவம் நடத்தி வைத்தார். (15)

**பிருகு:** *பகவானை சபித்து, அந்த தோஷம் நீங்குவதற்காக மன்னார்குடியில் தபஸ் செய்து, லக்ஷ்மியை புத்ரியாகப் பெற்று ராஜ கோபாலப் பெருமாளுக்கு விவாஹம் செய்து கொடுத்தார்.* (16—19)

**யஜ்ஞ சீலன்:** *பிராம்மணன். ஸௌராஷ்ட்ர ராஜனுக்கு காட்டில் உணவளித்து உபசரித்தான்; ராஜனுக்கு ராஜ கோபாலப் பெருமாளின் வைபவத்தை உபதேசித்தான்.* (28—35)

**ராஜ கோபாலன் :** *உத்ஸவர்; பிருகு மஹர்ஷியின் புத்ரியான ஹேமாப்ஜ நாயகியை (செங்கமல நாச்சியாரை) திருமணம் செய்தவர்.* பக்கம் 17—19

**ராஜ சேகரன் :** *ஸௌராஷ்ட்ர ராஜா.* (27)

**வஹ்னி முகர் :** *கோப்ரளய கோபில ரிஷிகளின் பிதா. பக்.* (2)

**வாஸுதேவப் பெருமாள் :** *மூலவர். முதல் முதலில் பிரம்மாவுக்கு பிரத்யக்ஷமான பெருமாள்.* (15)

**ஸ்வர்ண சிகாமணி :** *ராஜ சேகர ராஜனுடைய புத்ரன்.* (35)

**ஸ்வயம் புவ விமானம் :** *தானாகத் தோன்றிய (ஆவிர்பவித்த) விமானம்; பிரம்மா உண்டாக்கின விமானம்.* (15)

**ஸௌராஷ்ட்ர ராஜா :** *(ராஜ சேகரன்)—யஜ்ஞ சீலன் என்ற பிராம்மணனை அவமதித்து, பைத்தியம் பிடித்தவனாகி அந்த பிராம்மணனுடைய உபதேசத்தால் ராஜ கோபாலப் பெருமாளை ஸேவித்து பைத்தியம் நீங்கி, பல் கைங்கர்யங்கள் செய்தான்.* (26—35)

**ஹேமாப்ஜ நாயகி :** *திருப்பாற் கடலில் பொற்றாமரையில் பிறந்த லக்ஷ்மி. ஹேமாப்ஜம்-பொற்றாமரை. செங்கமல நாச்சியார் என்ற பெயரும் உண்டு.* (16—19)

## திருத்தங்கள்

*பக்கம்*

14 *மல்லர் இருவர் வந்து "**கம்ஸனை**"—என்றதை **கண்ணனை** என்று திருத்துக.*

15 *பொற்கோல்—தங்கக் கோல். மூ வளைவான பொற்கோல் - மூன்று வளைவுகளுள்ள தங்கக் கோல். மூன்று வளைவாயிருப்பது கோலல்ல. கோலில் தொங்கும் (சாட்டைக் குச்சியிலுள்ள) சாட்டைக் கயிறு மூன்றாய் மடிந்திருக்கிறது.*

மாட்டை அடிக்க விசுலைகயில் கயிறு மடிந்து காணும் நிலை அது. பெருமாள் திருக்கையில் பிடித்திருப்பது மூங்கிலும் கயிறுமாயுள்ள சாட்டைக் குச்சியல்லாமல் பொன்னாயிருப்பது பற்றி மூ வளைவான பொற்கோல் என்று எழுதலாயிற்று.

பக். 58 தை 3-ம் தேதி மட்டையடி என்பதைத் அடுத்த பாரா வோடு சேர்த்துப் படிக்கவும்.

76 "திருச் சிவி (காது காப்பு)" என்பதை திருச் சிவிகை என்று படிக்கவும்.

,, திருவாபரணங்களின் மொத்த மதிப்பு ரூ. 3,70,000/-

82 அபிவிருத்திகளில் 2-வது நூல் நிலையும் கண்ணன் நூல் நிலயம் என்று பெயராகி தினந்தோறும் பலருக்குப் பயன் படுகிறது.

யானை நெடுங்காலமாய் தொடர்ச்சியாக இருந்து வருகிறது.

—★—

# முடிவுரை

சம்பகாரண்ய க்ஷேத்ரம் அநாதியாயுள்ளது. அதில் பிரம்மா வின் தபஸ்ஸுக்காக ஸ்ரீ வாஸுதேவன் ஸ்வாயம்புவ விமானத்தில் பிரத்யக்ஷமாகி ஸேவை ஸாதித்தான். பிரம்மா வாஸுதேவனையும் உத்ஸவரையும் பிரதிஷ்டை செய்து பூஜித்து, பிரம்மோத்ஸவம் செய்வித்து பங்குனி ரோஹிணியில் ரதோத்ஸவமும் நடத்தி வைத்தார். பிரம்மா நடத்தி வைத்ததால் பிரம்மோத்ஸவம் என்று பெயராயிற்று. பிரம்மா நடத்தி வைக்காத இடங்களில் ஆகம விதிப்படி ஏற்படும் உத்ஸவங்களுக்கு மஹோத்ஸவம் என்று தான் பெயர்.

பிறகு, பிருகு தபஸ் செய்து லக்ஷ்மியைப் புத்ரியாகப் பெற்று, லக்ஷ்மி,—"ஸர்வேசுவரனைத்தான் மணந்து கொள்வேன்" என்று தபஸ் செய்து மணந்ததால் (ஹேமாப்ஜ நாயிகா) செங்கமல நாச்சியார் ஸந்நிதி ஏற்பட்டது.

கோயிலும் எம்பெருமானும் புராதநமாயிருந்தவை. கோபில கோப்ரளய ரிஷிகளுக்காக உத்ஸவர் கண்ணனாய், ராஜ கோபால னாய் ஸேவை ஸாதித்தார்.

பிரம்மா வாஸுதேவன் மூலவரோடு ஒரு உத்ஸவரை பிர திஷ்டை செய்திருக்க வேண்டும். அவர் யார் எங்கே என்று தெரியவில்லை.

பெருமாள் லக்ஷ்மியை விவாஹம் செய்து கொண்டவுடன் ஹரித்ரா நதியில் வைகாசிப் பூர்ணிமையில் ஜலக்ரீடை செய்தார்; ஜலக்ரீடையில் ஒரு காதிலிருந்த குண்டலம் மாறிப் போய் ஒரு கோபியினுடைய தாடங்கத்தை அணிந்தபடியே பெருமாள் இன்னும் ஸேவை ஸாதிக்கிறார்.

சோழ ராஜா ஸௌராஷ்ட்ர ராஜா முதலானோர் ஆராதித்து பல திருப்பணிகளும் செய்து ஆதரித்தார்கள்.

— ஃ —

# ஸ்ரீ ராஜ கோபால மங்களம்

---

மன்னார்குடி ஸ்ரீ ராஜ கோபால எம்பெருமா னுடைய மங்களம்

14 சுலோகங்கள் அடுத்த பக்கத்தில் காண்க.

# ஸ்ரீ ராஜ கோபால மங்களம்

1. லக்ஷ்மீ சரணும் போஜ கௌஸ்து பாய்கித வக்ஷஸே
கல்யாண குண பூர்ணாய, சம்ப கேசாய மங்களம்

2. அஸ்து கோபால பாலாய, நித்யாய, பரமாத்மநே
பக்த வாத்யல்ய நிதயே, நித்ய போக்யாய மங்களம்

3. சித்த த்ருங் மோஹநாங்காய, ஸ்ரீமதே, நந்த ஸூநவே
ருக்மிணீ ஸத்ய பாமாப்யாம் நித்ய யுக்தாய மங்களம்

4. வ்யத்யஸ்த பாத பத்மாய வேணுநாத விலாஸிநே
கோப கோகுல ஸேவ்யாய, கோப பாலாய மங்களம்

5. த்ரி பங்கி லளிதாங்காய, ஸ்நிக்த நீலாளக ஸ்ரீயே,
நவநீத கடா யாஸ்து நந்த பாக்யாய மங்களம்

6. திவ்ய ரத்ந கிரீடாய ஸ்ரீமதே பீத வாஸஸே
பவ்ய ஸ்ரீ சங்க சக்ராய, பால கோபாய மங்களம்

7. ஜீவாதவே த்ரி ஜகதாம், திவ்ய ஜ்ஞாந ப்ரதாயிநே
க்ருபாம்பு நிதயே, நித்யம் கீதாசார்யாய மங்களம்

8. நந்த கோப குமாராய, நவநீத முஷே முதா
கோப பாலாய, நாதாய, கோவிந்தாயாஸ்து மங்களம்

9. இந்த்ராதி தேவதா ப்ருந்தைர் வந்த்ய மாநாங்க்ரயே ஸதா
கோவர்த்தந தராயாஸ்து கோப பாலாய மங்களம்

10. வந்தாரு ஜந ப்ருந்தாநாம் மந்தாராய, மஹாத்மநே
நந்தாத்மஜாய, ஹரயே, நாதாய மம மங்களம்

11. பாரிஜாத தரோர் மூலே பணீந்த்ர பண மண்டிதே
ப்ராப்த வாஸாய, கோபீநாம் பாக்ய ரூபாய மங்களம்

12. ஸஹ கோபைர் கவாம் பஃசாத் ஸவேணுத்வநி ஸம்ப்ரமம்
ஆபூர்ய வீதி மாநந்தா தாகதா யாஸ்து மங்களம்

13. மங்களா சாஸந பரைர் மதா சார்ய புரோகமை:
ஸர்வைஃச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்

14. ஸ்ரீ வாதிபீகரார்யேண ஸ்ரீ ஸௌம்யவர யோகிநே
லப்தாய, கோப பாலாய நித்ய ஸ்ரீர் நித்ய மங்களம்

—☆—

கடைசி 14-வது சுலோகம்,—பிரதி வாதி பயங்கரம் அண்ணா ஸ்ரீ மணவாள மாமுனிகளுக்காக (லப்தாய) அடைந்த

ராஜ கோபாலனுக்கு மங்களம்—என்று அர்த்த மாகிறது. பிரதி வாதி பயங்கரம் அண்ணா மணவாள மாமுநிகள் திருவடிகளில் ஆசிரயித்து பகவத் விஷயம் முதலான சாஸ்திரங்களை அதிகரித் தார். அவர் மணவாள மாமுநிகளுக்காக ஸ்ரீ ராஜ கோபாலனை அடைந்தார்—என்ற விசேஷம் இந்த சுலோகத்தால் தெரிகிறது. மணவாள மாமுநிகள் ராஜ கோபாலப் பெருமாளுக்கு திருவாய் திருமொழி ஸமர்ப் பித்ததாக ப்ரஸித்தி.

பிரதி வாதி பயங்கரம் அண்ணா மணவாள மாமுநிகளை அழைத்துப் போய் மன்னார்குடி எம் பெருமானை ஸேவிக்கச் செய் திருக்கக் கூடும்—என்று இந்த சுலோகத்தால் ஊஹிக்கலாம்.

இந்த சுலோகம் பிரதிவாதி பயங்கரத்தாரின் இருஹாநு ஸந்தா நத்திலும் இருக்கிறது. பிரதிவாதி பயங்கரம் அண்ணாவுக்கு மண வாள மாமுனிகளின் புருஷகாரம் உண்டு; மணவாள மாமுனி களுக்கு அண்ணாவின் புருஷகாரம் இல்லை. ஆனால், சுலோகம் இந்தக் கருத்தின்படி இல்லை.